koviloor Acadamy


தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
ஆதரவில் பதிப்பிக்கப்பெற்றது.

ரூ. 1-60

உலகப் பயணம்

(ஐரோப்பா)

கே. பி. எஸ். மேனன்



KMM10835
No 5

koviloor Acadamy

koviloor Acadamy

உலகப் பயணம்

(ஐரோப்பா)

2418

ஆசிரியர் :
கே. பி. எஸ். மேனன்

தமிழாக்கம் :
எஸ். சங்கரன்

KMH0835

மல்லிகை பதிப்பகம்
தியாகராயநகர் :: சென்னை-17

koviloor Acadamy

Tamil

First Edition—3000 copies

May 1966

ULAGA-P-PAYANAM

(Europe)

Tamil Translation of 'Journey round the World' (Vol. 2)

By K. P. S. Menon

Copyright : Author

Translator : S. Sankaran

Price : Rs. 1-60

Published under the auspices of the Southern Languages Book Trust, Madras. The Trust is helped by the Government of India, the South Indian State Governments and Universities, and the Ford Foundation.

Third Programme - Tamil - Number Twenty Three

Translation right into Tamil for this edition is assigned to:

Mallikai Pathippakam, 8, Coats Road, T. Nagar, Madras-17.

Printed at : Metropolitan Printers, Madras-2.

koviloor Acadamy

அணிந்துரை

தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் வெளியிடும் புதிய தொடர் நூல்களுக்கு அணிந்துரை எழுத வாய்ப்புக்கிடைத்த மைக்குப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். குறைந்த விலையில் சிறந்த புத்தகங்களை வெளியிட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் டிரஸ்ட் கடந்த பத்தாண்டு காலமாக தென்னக மொழிகளில் உயரிய புத்தகங்களை வெளியிட்டுப் பெரும் சேவை செய்து வருகின்றது. இதுகாறும் தமிழில் மட்டும் நூற்றுநாற்பதுக்கு மேற்பட்ட புத்தகங்களை டிரஸ்ட் வெளியிட்டுள்ளது போற்றதக்க முன்னேற்றமாகும்.

தனிப்பட்ட வெளியீட்டாளர்கள் யாரும், எந்நிலையிலும் சிறிதும் பாதிக்கப்படா வண்ணம் தென் மொழிகள் புத்தக டிரஸ்டின் வெளியீட்டு முறை அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கதோர் அம்சமாகும். டிரஸ்ட் வெளியீடுகளில் பெரும் பாலானவை தனிப்பட்ட வெளியீட்டகங்களின் மூலமே வெளியிடப்படுகின்றன.

பிராந்திய மொழிகளில் பல்வேறு வகையான புத்தகங்கள் வெளிவர வேண்டும் என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளும் விஷயமாகும். பள்ளிகள் அல்லது கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய பாடப் புத்தகங்கள் ஒன்றிரண்டு வெளியிட உதவி புரிந்தால் மட்டும் போதாது. மாணவர்களும், மற்றவர்களும் அறிவுத் துறையில் துரித முன்னேற்றம் காணப் பல்வேறு துறைகளைப் பற்றி எழுதப்பெற்ற நூல்கள் நிறையத் தேவை. போதிய அளவு ஆங்கில அறிவு இல்லாதவர்கள்—நம் மொழிகளிலொன்றில் போதிய பயிற்சியுடையவர்களுக்கேற்பப் பொருத்தமான நூல்களை தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது. அறிவுத் துறைகளின் ஒவ்வொரு பகுதியின் அடிப்படைக்

koviloor Acadamy

கேட்பாடுகளை நன்கு புரிந்து கொள்ளக் கூடிய முறையில் கல்லூரி மாணவர்கட்குப் பெரிதும் உதவும் வகையில் டிரஸ்டின் புத்தகங்கள் அமைந்துள்ளன. இந்நோக்கத்தின் அடிப்படையில் அனுபவ முதிர்ச்சி பெற்ற பேராசிரியர்களைக் கொண்டு புத்தகங்கள் எழுதப் படுகின்றன.

நம்நாட்டு மொழிகளில் ஏதாவதொன்றில் எழுதப்பட்ட நூல்களை மற்றொரு மொழியில் பெயர்த்து மக்களிடையே வழங்கும் பணியையும் டிரஸ்ட் குறிப்பிடத் தக்க அளவு செய்து வருகின்றது. கருத்துப் பரிமாற்றமே அறிவு வளர்ச்சிக்கு அடிப்படை. பிராந்தியத்திற்குப் பிராந்தியம் வெளி வேற்றுமைகள் எவ்வளவோ இருந்த போதிலும் ஒரே இந்தியக் கலாச்சாரமாகப் பரிணமிக்க இந்த மொழிபெயர்ப்புகள் பெருந்துணை செய்வனவாகும். குறுகிய மனப்பான்மை கொண்ட தவறான எண்ணங்களைப் பெருமளவில் போக்கவும், உலகின் மற்ற பகுதிகளை நன்கு புரிந்து கொள்ளவும் வெளி நாட்டு மொழிபெயர்ப்பு நூல்கள் பயன்படுகின்றன. இத் தகைய வழிகளில் இடையறாது பணியாற்றி வரும் டிரஸ்ட் மேன்மேலும் வளர ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டியது அனைவரது கடமையாகும்.

எம். பக்தவச்சலம்

முதலமைச்சர், சென்னை மாநிலம்

koviloor Acadamy

ஐரோப்பா

1. லண்டன்

லண்டன், ஆகஸ்ட், 12.

நியூயார்க்கைவிட்டுப் புறப்பட்டு ஆறுமணி நேரம் இரவில் விமானப் பயணம் செய்து லண்டனை யடைந்தோம். இரவு ஒன்பதரை மணிக்குப் புறப்பட்டு. லண்டனை, நியூயார்க் நேரப்படி காலை 3-30க்கு அடைந்தோம். அப்போது லண்டனில் காலை 9-30 மணி. சென்ற முறை நான் விமானத்தில் நியூயார்க்கிலிருந்து லண்டனுக்கு சென்றது 1946-ல். அப்போது திருமதி பண்டிட்டும் ஐ. நா. முதல் கூட்டத்துக்கான இந்தியத் தூதுகோஷ்டி அங்கத்தினர்களும் உடன் வந்தனர். அப்போது பிரயாணத்துக்குப் பதினாறு மணி நேரமாயிற்று. நியூபவுண்ட்லாண்டிலுள்ள காண்டரில் இரண்டு மணி நேரம் தங்க வேறு நேர்ந்தது. அட்லாண்டிக் கடலை விமான மூலம் ஆறு மணி நேரத்தில் கடக்க முடிகிறது என்பதை எண்ணும்போது அது பெருமையாக இருக்கிறது. ஆயினும் இன்னும் அதிக நேரம் ஆகியிருக்கக்கூடாதா என்றும் தோன்றுகிறது. விமானத்தில் மேலும் சிறிது நேரம் தூங்கியிருக்கலாம் அல்லவா? ஏர் இந்தியா வழக்கம்போல் எங்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தது. அவர்கள் சேவை குறித்து யாரும் பெருமைப்பட முடியும்.

koviloor Acadamy

இந்த ஆண்டு இங்கிலாந்தில் கோடை காலம் அருமையாக இருப்பதாக நியூயார்க்கிலேயே சொன்னார்கள். ஆயினும் நாங்கள் வந்து சேர்ந்தபோது வானம் இருண்டு தூறல் போட்டுக் கொண்டிருந்தது. லண்டனுக்கே உரித்தான காலநிலை அது. நான் பல ஆண்டுகள் மாஸ்கோவில் இருந்தவன் என்பதையறிந்திருந்த ஒரு சுங்க அதிகாரி, "உங்களுடன் கூட ரஷ்ய காலநிலையையும் கூட்டிவந்து விட்டீர்கள் போலிருக்கிறது. ஏனெனில் நேற்றுவரை சூரியன் நன்கு காய்ந்தது" என்றார். "உங்கள் ராணியின் காலநிலையல்லவா இது?" என்றேன். ராணியினுடைய திருமணம், பட்டமேற்பு போன்ற எல்லா முக்கிய சந்தர்ப்பங்களிலும் மழை பெய்தது என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். இது ஒரு சுப சூசகம் என்பது பலநாடுகளிலுமுள்ள மக்களுடைய நம்பிக்கை. போலந்துக்கு இந்தியாவின் முதல் தூதுவர் என்ற முறையில் நான் வார்ஸாவில் எனது நியமனப் பத்திரத்தை சமர்ப்பித்ததும் மழை பெய்யத் தொடங்கியது. சென்ற வாரம் காலமான ஜனாதிபதி ஜாவாட்ஸ்கி இந்தியபோலிஷ் உறவுக்கு இது நல்ல சகுனம் என்றார்.

இங்கு நமது ஹைகமிஷனர் டாக்டர் ஜீவராஜ் மேத்தாவுடனும் அவருடைய மனைவி ஹன்ஸாமேத்தாவுடனும் தங்கியிருக்கிறோம். நான் ஆக்ஸ்போர்டில் படிக்கும்போது முதலில் ஹன்ஸா மேத்தாவைப் பார்த்திருக்கிறேன். லண்டனில் படித்துக் கொண்டிருந்த அவர் அப்போது ஆக்ஸ்போர்ட் வந்திருந்தார். அந்தக் காலத்தில் ஒரு இந்தியப் பெண்ணை ஆக்ஸ்போர்டில் காண்பது அபூர்வம். நாங்கள் எல்லோரும் அவரைச் சூழ்ந்துகொண்டோம். இந்தியா திரும்பியதும் திறமை மிக்க டாக்டர் ஒருவரை மணந்து கொண்டார். இருவரும் மகாத்மா காந்தியின் கொள்கையால் கவரப்

koviloor Acadamy

பட்டு விடுதலைப்போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டனர். இருவருமே குறிப்பிடத்தக்க சேவை புரிந்துள்ளனர் எழுபத்தைந்து வயதைக் கடந்துவிட்ட ஜீவராஜ் உலகத்திலுள்ள நமது தூதரகங்களிலேயே பெரிய தான ஒன்றுக்குத் தலைமை தாங்குவதுடன், வயதில் இளையவர்கள் கண்டு வெட்கப்படும் அளவுக்கு திறமை யுடன் செயலாற்றி வருகிறார்.

ஹைகமிஷனருடைய இளம் வயதில் நடந்ததாகக் கூறப்படும் ஒரு சம்பவம் குறித்து அவரைக் கேட்க நான் துணியவில்லை. ஹன்ஸாவுடைய தந்தையான சர். மனுபாய் மேத்தா தமது பெண்ணுடைய புரட்சிகர மான நடவடிக்கைகளை அங்கீகரிக்கவில்லை. ஒரு நாள் அவர் தம் மாப்பிள்ளைகள் இருவரையுமே கண்டித்தார், "என் பெண்களை என்ன செய்துவிட்டீர்கள்? விரும்பத் தகாத செயல்கள் எல்லாவற்றிலும் அவர்கள் ஈடுபட் டுக்கொண்டிருக்கிறார்கள். சிறைக்குப் போவதுபற்றிக் கூடக் கவலைப்படவில்லை. எவ்வளவு சாதுவாகவும் நல்ல பெண்களாகவும் முன்பெல்லாம் இருந்தார்கள்" என்று குமுறினார். "உங்களுக்கு முன்னால் அவர்கள் சாதுவாக இருக்கலாம். எங்களுக்கு அவர்களைப் பற்றி நன்றாகத் தெரியும்" என்றார் ஜீவராஜ். இந்த சம்பவத்தை என்னுடைய மாமனாரான சர். சங்கரன் நாயரிடம் ஒருமுறை கூறினேன். அவரும் பழைய காலத்து மனிதர். தேசபக்தி யிருந்தபோதிலும் சர்க் காருக்கு விசுவாசமுள்ளவர். நான் சொன்னதைக் கேட்டு அவர் உரக்கச் சிரித்தார். ஒருவேளை நானும் அவருடைய பெண் விஷயத்தில் அவ்வாறுதான் நடந்து கொள்வதாக அவர் நினைத்தாரோ என்னவோ?

நமது ஹைகமிஷன் கென்ஸிங்டன் அரண்மனைப் பூங்காவில் அமைந்துள்ளது. இதற்கு கோடீஸ்

koviloor Acadamy

வரர்கள் வீதி என்று பெயர். ஆனால் தற்போது இங்கு வசிக்கும் ஒரே ஒரு கோடீஸ்வரர் ஹைதராபாத்தைச் சேர்ந்த நிலூஃபர் இளவரசி தான். கோடீஸ்வரர்கள் யாரும் விட்டுவைக்கப்படாத ரஷ்ய நாட்டுக்கு சொந்தமான மூன்று வீடுகள் உள்ளன. நமது காரியாலயமும் கூட கோடீஸ்வரர்களை மதிக்காத—சுதந்திர இந்தியாவின் முதல் ஹைகமிஷனரான கிருஷ்ண மேனனுடைய வற்புறுத்தலின்பேரில் வாங்கப்பட்டது தான். சின்னஞ்சிறு கட்டிடமொன்றில் அயராது உழைத்து வந்த அவர் தமது நாட்டின் அந்தஸ்துக்கேற்ப உன்னதமான இடத்தில் ஹைகமிஷனர் காரியாலயம் இருக்கவேண்டும் என்று நினைத்தார்.

அமெரிக்காவில் இருந்ததால் சோர்வுற்றிருந்த எங்கள் நரம்புகளுக்கு கென்ஸிங்டன் அரண்மனைப் பூங்காவின் அமைதி ஆறுதல் அளிப்பதாக இருந்தது. நியூயார்க்குடன் ஒப்பிடும்போது லண்டன் முழுவதுமே மிகவும் அமைதியாக இருப்பதுபோலத் தோன்றியது. இதற்கு ஒரு காரணம் போக்குவரத்து அதிகமாக இருந்தபோதிலும் அமெரிக்காவிலுள்ளதைப் போல மயிர்க்கூச்செறியச் செய்வதாக இல்லை. உலகின் வேறெந்தத் தலை நகருக்கும் இல்லாத பழமையான கண்ணியம் லண்டனுக்கு இருக்கிறது. நவீன பாணி பல மாடிக் கட்டிடங்கள் ஒரு சிலவே உள்ளன. பக்கிங் ஹாம் அரண்மனைக்கு அருகாமையிலேயே 30 மாடி கட்டிடமான ஹில்டன் ஓட்டல் உள்ளது.

1918-ல் மாணவனாக நான் இங்கு வந்தபோது இருந்த கண்ணியத் தோற்றத்தில் பெரும் பகுதியை லண்டன் இப்போது இழந்துவிட்டது. மாஸ்கோவில் ஸ்விடன் தூதுவராக இருந்த ஸோல்மல் ஒரு முறை என்னிடம் சொன்னார்: "லண்டன் வீதிகளில் காணப்

koviloor Acadamy

படும் மக்களைப் பார்த்து, சில ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் இருந்த தோற்றத்துடன் ஒப்பிட்டாலே போதும். லண்டன் ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தின் தலைநகராக இப்போது இல்லை என்பதை உணர்ந்து கொண்டுவிடலாம்.” இப்போது மக்கள் உடையில் அதிக கவனம் செலுத்துவதில்லை. பழைய நாட்களில் ஒவ்வொருவரும் தொப்பி யணிந்திருப்பார்கள். டிரவுசரும் கோட்டும் அணிந்து தொப்பியில்லாமல் ஆக்ஸ்போர்டில் பெருமையுடன் திரிந்த நாங்களும் கூட லண்டனுக்கு வரும்போது கட்டாயமாகத் தொப்பி யணிந்து கொள்வோம். போக்கிரிகள் என்று கருதி விடப்போகிறார்களே என்று தான். பொதுவாக இந்தியர்கள் தொப்பியணிந்தால் நன்றாக இருப்பது இல்லை. தொப்பி நன்றாகப் பொருந்தியிருந்த ஒரே இந்தியர் அதை என்றுமே அணியாத ஜவாஹர்லால் நேருதான். 1950ல் நாங்கள் அமெரிக்கா சென்றிருந்தபோது அவர் சூட்டும் தொப்பியும் அணிந்திருந்தார். என்னிடமுள்ள மதித்தற்கரிய பொருள்களில் ஒன்று கைகோத்தவாறு நேருவும் ஐனஸ்டீனும் இருக்கும் புகைப்படப் பிரதியாகும். நேரு அமெரிக்காவில் வாங்கிய ஒரே பொருள் 12 டாலர் மதிப்புள்ள ஒரு தொப்பிதான். சௌதி அரேபியா போன்ற நாடுகளிலிருந்து வரும் தலைவர்கள் அமெரிக்காவில் பல்லாயிரக் கணக்கான டாலர் மதிப்புள்ள பொருள்களை வாங்குவார்கள். எதையாவது வாங்க வேண்டும் என்று அனுஜிக்கு ஆசை யேற்படும்போதெல்லாம் ஜவாஹரின் உதாரணத்தை நினைவு படுத்துவது வழக்கம்.

லண்டனிலுள்ள நாடக அரங்குக்கு சென்றபோது ஆங்கிலேயர் நடத்தையில் ஏற்பட்டுள்ள மாறுதல் என்னைக் கவர்ந்தது. யாருமே ‘டிரஸ் சூட்’ அணிந்திரா

koviloor Acadamy

ததைக் கண்டோம். முன்னெல்லாம் அந்த உடை அணிந்து தான் வர வேண்டுமென்ற கட்டாயம் இருந்தது. சர். அலெக் ஹோமின் சகோதரரான வில்லியம் டக்ளஸ் ஹோமினுல் எழுதப்பட்ட நாடகம் அது. அலெக் ஹோம் இங்கிலாந்தின் பிரதமராக இருந்தவர்.

நாடகாசிரியர் தமது சகோதரரை மனதில் கொண்டு எழுதினுர் என்பதைப் புலப்படுத்தும் சில பகுதிகள் உள்ளன. நாடக பாத்திரங்களில் பெரிதும் மகிழ்ச்சியூட்டியவர் விக்டோரியா காலச் சின்னமாக விளங்கிய பட்லர். டோவேஜர் சிமாட்டி அவனிடம் "நீ மறைந்து போனவன்" என்கிருள். ஆனுல் அவளே அமெரிக்க மருமகப் பெண்ணின் கண்களுக்கு மறைந்து போனவளாக இருக்கிருள். பிரதம மந்திரி பதவியைப் பெறுவதற்காக அறுநூருண்டு காலமாக அனுபவித்து வந்த பிரபுப் பட்டத்தைக் கைவிட முன்வந்த தன் கணவனிடம் வெறுப்படைந்த அவள் தேர்தலில் அவனை எதிர்த்துப் போட்டியிடுகிருள். இவளும் கூட கிட்டத் தட்ட கம்யூனிஸ்டாக உள்ள ஒருவரைக் காதலிக்கும் 18 வயதுப் பெண்ணின் கண்களுக்கு மறைந்து போனவளாக இருக்கிருள். தன்னுடைய பெண் ஒரு கம்யூனிஸ்டை மணக்க விரும்புவது குறித்துத் தாய் பீதியடைகிருள். டோவேஜர் சீமாட்டி "கவலைப்படாதே! குருஷ்சாவும் கம்யூனிஸ்ட் தான். இருந்தும் திருமணம் செய்து கொள்ளவில்லையா?" என்று தேற்றுகிருள். டோவேஜர் சிமாட்டியாக அதனி ஸேலர் அற்புதமாக நடித்தார். லண்டன் நாடக அரங்கில் 1909ல் நடிக்கத் தொடங்கியவர் இவர்.

ஜீவராஜ் மேத்தா இந்நாடகத்தைப் பார்த்தபோது டோவேஜர் சிமாட்டியாக ஸிபில் தார்ன்டைக் நடித்தார். நான் கல்லூரியில் படிக்கும்போது அவர் நடித்த கிரேக்க இலக்கிய நாடகங்களைப் பார்த்திருக்கிறேன்.

koviloor Acadamy

கடைசியாக பத்தாண்டுகளுக்கு முன்பு சென்னை ராஜ பவனத்தில் கவர்னர் விருந்தினராகத் தங்கியிருந்த போது இருவரும் சந்தித்தோம். ஸிமில் தார்ன்டைக் எண்பது வயதைக் கடந்தவர்; இன்றும் உடலுறுதி யுடன் இருக்கிறார்

லண்டன், ஆகஸ்ட், 14

எனக்குப் பிடித்தமான நகரங்களில் ஒன்றாக லண்டன் என்றுமே இருந்தது இல்லை. ஆனால் ஆக்ஸ் போர்ட் எனக்கு மிகவும் பிடித்தமான நகரம். லண்ட னைப் பிடிக்காமற் போனதற்கு அதுவும் ஒரு காரண மாக இருக்கலாம். மூன்று நான்கு தினங்களுக்கு வேண்டுமானால் லண்டனுக்குப் போய் உல்லாசமாக இருந்து விட்டு வரலாம்.

அனுஜியின் போக்கு மாறானது. பெற்றோருடன் லண்டனில் இரண்டு வருடங்கள் வசித்தவள் அவள். வெஸ்ட்மினிஸ்டர் ஆபே, செயிண்ட் பால் கதீட்ரல், பளிங்கு மாளிகை, லண்டன் டவர், போன்றவை அவள் நினைவை விட்டகலாத இடங்கள்.

சில மாதங்கள் ஓரிடத்தில் இருக்க நேர்ந்தால் அந்த இடத்தையே சேர்ந்தவன் என்று உணர்வது என்னுடைய வழக்கம். எனது வாழ்நாளின் பல கட்டங்களில் இலங்கை, ஹைதராபாத், பரத்பூர், வடமேற்கு எல்லைப்புறம், சுங்கிங், மாஸ்கோ போன்று பல இடங்களைச் சேர்ந்தவனாக நான் இருந்திருக்கி றேன். ஆனால் லண்டனைச் சேர்ந்தவனாக என்றுமே நான் உணர்ந்தது இல்லை.

ஆயினும் மறக்க முடியாத பல சந்தர்ப்பங்களில் நான் லண்டனில் இருந்திருக்கிறேன். முதல் உலகப் போருக்குப் பின்னர் நடைபெற்ற போர் நிறுத்த உடன்

koviloor Acadamy

பாட்டுக் கொண்டாட்டத்தைப் பார்த்திருக்கிறேன். அந்தப் போரின் இரு பெரும் வெற்றி வீரர்களான ஐந்தாம் ஜார்ஜும் ஜனாதிபதி வில்ஸனும் லண்டன் வீதிகளில் பவனி வந்ததைப் பார்த்தேன். பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நானும் அனுஜியும் ஐந்தாம் ஜார்ஜின் வெள்ளிவிழாக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் சிலவற்றைப் பார்த்தோம். இரண்டாவது உலகப்போர் முடிவில் சான்பிரான்ஸிஸ்கோ மாநாட்டில் கலந்து கொண்ட காமன் வெல்த் பிரதிநிதிகள் அனைவருடனும் லண்டனில் இருந்தபோது V1 V2 ராக்கெட்டுகள் லண்டனில் விழுவதைக் கண்டேன். அப்போது சர்ச்சிலைக் காணவும் பேசுவதைக் கேட்கவும் வாய்ப்புக் கிடைத்தது. பக்கிங்ஹாம் அரண்மனை விருந்திலும் கலந்து கொண்டேன். ஆயினும் இந்தத் தொடர்புகள் எதுவும் என்னை லண்டனைச் சேர்ந்தவன் என்று உணருமாறு செய்யவில்லை. கண்ணுக்குப் புலனாகாத தடை ஏதோ இருந்தது.

இப்போது கடந்ததை எண்ணிப் பார்க்கும்போது நம்மிடையே தான் அத்தடை இருப்பது தெரிகிறது. ஆள்பவருக்கும் ஆளப்படுபவருக்கு மிடையேயுள்ள தடை அது. ஆளும் நாட்டுக்கும் அடிமைப் பட்ட நாட்டுக்கு மிடையே அரசியல் தொடர்பு, அறிவுத் துறையில் ஒற்றுமை, ஏன் சமூக ஒப்புவமை கூட இருக்கலாம். ஆனால் உணர்வுப் பற்று இருக்கவே முடியாது. ரவீந்திரநாத் தாகூர், சி. எப் ஆண்ட்ரூஸ், மகாத்மா காந்தி-முரியல் லெஸ்டர், ஜவாஹர்லால் நேரு, மவுண்ட்பேட்டன் தம்பதி ஆகியவர்களைப் போன்று தனிப்பட்டவர்களிடையே இருக்கலாம். ஆனால் மக்களிடையே இருக்க முடியாது. ஆயினும் இந்தத் தடை இந்தியா விடுதலையடைந்தவுடனேயே போய் விட்டது. இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கு மிடையே

koviloor Acadamy

உறவு இயற்கையானதாகி விட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் புரட்சி செய்த ஜவாஹர்லால் நேருவுக்கு ஆடம்பர உடையணிந்த லண்டன் மேயர் வரவேற்பளித்த கோலாகல விழாவில் கலந்துகொண்ட எனக்கு லண்டன் நகரத்திடம் உண்மையான பற்றுதல் ஏற்பட்டு விட்டது போல உணர்ந்தேன்.

நிமிர்ந்து நடக்கும் லண்டன் வாசியைக்கூட நெகிழவைத்த சந்தர்ப்பங்கள் பழங்காலத்திலேயே உண்டு. ஒரு சமயம் டி. எஸ். ரெட்டி, கே. டி. என். மேனன், நான் ஆகிய மூவரும் ஆக்ஸ்போர்டிலிருந்து லண்டனுக்குச் சென்றோம். என். ஆர். பிள்ளை கேம்பிரிட்ஜிலிருந்து வந்து எங்களுடன் சேர்ந்து கொண்டார். நாங்கள் உற்சாகமான மனநிலையில் இருந்தோம். நெடிதுயர்ந்த கம்பீரமான போலீஸ்காரர் ஒருவர் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் தெருவைக் கடக்க எங்களுக்கு உதவி செய்தார்.

''எவ்வளவு பயங்கரமான ஆள்'' என்றோம்.

''அப்படியொன்றும் இல்லை'' என்றார் மேனன்.

''வேண்டுமானால் போய் முத்தம் கொடுங்கள்''

''அப்படியே செய்தால்... என்ன பந்தயம்?''

''ஒரு பவுன்''

மேனன் நேராகச் சென்று போலீஸ்காரர்மீது தாவி அவருடைய இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்.

''என்ன இது? என்ன இது?'' என்று கத்தினார் திக்குமுக்காடிப் போன போலீஸ்காரர்.

''ஒன்றுமில்லை. அதோ இருக்கிறார்களே அவர்கள் என்னிடம் பந்தயம் போட்டார்கள். உங்களை முத்தமிட எனக்குத் தைரியம் கிடையாது என்று. இப்போது பந்தயத்தில் ஜெயித்து விட்டேன். நீங்களும் வாருங்கள்; எல்லோரும் சேர்ந்து குடிக்கலாம்.''

koviloor Acadamy

"சரி, சரி. இன்னும் 20 நிமிடத்தில் என் வேலை நேரம் முடிந்து விடும். வந்து விடுகிறேன்" என்றார் போலிஸ்காரர்.

லண்டன், ஆகஸ்ட், 15,

இங்கிலாந்துக்கு வருவதற்கு நான் தேர்ந்தெடுத்த நேரம் தவறானது என்பது தெளிவாக இருந்தது. ஆக்ஸ்போர்டில் கோடை விடுமுறை விட்டு விட்டார்கள். நியூ காலேஜ் வார்டனும் மாஸ்கோவில் என்னுடைய சகாவுமான ஹேய்டர் ஹாங்காங்குக்குப் போய் விட்டார். லண்டனிலும் கூட ஆகஸ்ட் மாதம் சுவாரஸ்யமில்லாத ஒன்று தான். நான் பார்க்க விரும்பியவர்கள் எல்லாம் விடுமுறையில் சென்றிருந்தார்கள். ஓலாஃப் காரோ ஸ்காட்லந்துக்குப் போய்விட்டார். முரியல் லெஸ்டர் டெவன்ஷயருக்குப் போய்விட்டார். ஹெர்பர்ட் தாம்ஸன் எங்கு போயிருக்கிறார் என்பதே தெரியவில்லை. ஆயினும் முரியல் லெஸ்டருடனும் ஓலாஃப் காரோவுடனும் டெலிபோனில் பேச முடிந்தது. அவர்கள் குரலைக்கேட்டு மகிழ்ந்தேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு முரியல் லெஸ்டரை நான் பார்த்தபோது லண்டனில் மகாத்மா காந்திக்கு சிலை அமைக்கும் திட்டம் பற்றி என்னிடம் உற்சாகமாகக் கூறினார். 1930ல் மகாத்மா காந்தி வட்டமேஜை மாநாட்டுக்கு வந்திருந்தபோது முரியல்லினுடைய விருந்தினராகத் தங்கியிருந்த ஈஸ்ட எண்டில் சிலை அமைப்பதற்கான ஓரிடமும் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டது. சிலை அமைப்பதற்கு நிதி உதவுமாறு விடுத்த வேண்டுகோள் திருப்தியான பலனையளிக்காததால் மேற்கொண்டு முன்னேற்றம் ஏற்படவில்லை. நிதிக்கு பிரிட்டிஷ் மந்திரி ஒருவர் பத்து ஷில்லிங் கொடுத்ததாகக் கேள்விப்பட்டேன். இங்கிலாந்தில்

koviloor Acadamy

வசித்த ஒரு எகிப்தியர் நடந்து கொண்டது போலவே மந்திரியும் நடந்து கொண்டிருக்கிறார். அந்த எகிப்தியர்,நாடு கடத்தப்பட்டதால் பிரிட்டிஷ் சர்க்காரிடம் 10010 பவுன் நஷ்ட ஈடு கோரி வழக்குத்தொடர்ந்தார். 10000 பவுன் தன் தொழிலை இழந்து விட்டதற்கும், தன்னுடன் எகிப்துக்கு வர மறுத்த மனைவிக்கு 10 பவுனும் நஷ்ட ஈடாக அவர் கேட்டார்.

இன்று நூறு மைல்களுக்கப்பால் வெஸ்ட்பரியிலுள்ள பழைய நண்பர் சர். ஹொரேஸ் சேய்மர் தம்பதியைக் காணச் சென்றோம். நான் முதன்முதலில் சந்தித்த தூதுவர் அவர். அதன் பின்னர் நூற்றுக் கணக்கானவர்களைச் சந்தித்திருக்கிறேன். நானே அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவன்தானே! 1943-ல் சீனாவில் இந்தியாவின் ஏஜெண்ட் ஜெனரலாக நான் நியமிக்கப்பட்டபோது அவர் சீனாவில் பிரிட்டிஷ் தூதுவராக இருந்தார். அவரிடம் எனக்கு மரியாதையும் அன்பும் ஏற்பட்டது. சீனாவிலிருந்து இந்தியா திரும்பியதும் நான் எழுதிய கட்டுரையொன்றில் சேய்மரை, அவருக்குப் பின்னர் வந்த சர். ரால்ஃப் ஸ்டீவன்ஸனுடன் ஒப்பிட்டு எழுதியிருந்தேன். சர். ஹோரேஸ் முக்கியமாக ஒரு ஆங்கிலக் கனவான். சர். ரால்ஃப் ஒரு பிரிட்டிஷ் ராஜதந்திரி என்று குறிப்பிட்டேன். இந்த இரு அடைமொழிகளும் பரஸ்பரம் வேறானவை என்பதால் அல்ல; பார்த்தவுடனேயே தேர்ந்த ராஜதந்திரி என்றுபட்டும் சிலர் இருக்கிறார்கள்; வேறு சிலர் ராஜதந்திரிகளாக ஆகியிருக்கும் கனவான்களாகப் படுவார்கள். சர். ஹொரேஸ் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர். இப்போது அவருக்கு எண்பது வயதும் அவருடைய மனைவிக்கு 70 வயதும் ஆகிறது. கவர்ச்சியான கிராம வீடொன்றில் இப்போது வசிக்கிறார்கள்.

koviloor Acadamy

மற்றவர்களைப் போலவே சேய்மர் தம்பதியும் இப்போது விடுமுறையில் சென்றிருக்க வேண்டிய வர்கள்தான். ஆனால் ரோம் நகரில் அவர்கள் வழக்க மாகச் சென்று தங்கும் வீட்டுக்காரியான அமெரிக்கப் பெண்மணி தமது 101-வது வயதில் அண்மையில் இறந்துவிட்டதால் அவர்கள் போகவில்லை. அவளுக்கு நூறு வயது நிறைந்தபோது திருமதி கென்னடியிட மிருந்து வாழ்த்துத் தந்தியொன்று வந்தது. "எனக்கு ஏன் தந்தி அனுப்பியிருக்கிறாள்? என்னை அவளுக்குத் தெரியாதே!" என்றாராம் அம்முதாட்டி.

சர். ஹோரேஸிடம் இன்னமும் பழைய நகைச் சுவை உணர்வு இருந்தது. காலனி போலீஸ் இன்ஸ் பெக்டர் ஜெனரலாகப் பதவி வகிக்கும் தமது மாப்பிள்ளைக்கு எங்களை அறிமுகம் செய்துவைத்தார். "ஆனால் காலனி மட்டும் இப்போது கிடையாது" என்றார். தமது பேத்தியையும் அவர் அறிமுகப்படுத் தினார். அவளைப் பார்த்தபோது எங்கள் பேத்தி டிட்டு வின் நினைவு வந்தது. அடுத்த வாரம் ஜெனிவாவில் அவளுடன்தான் தங்கப் போகிறோம். ஹொரேஸ் எனக்கு எழுதிய கடிதத்தில் தம் வீட்டைச் சுற்றி நிறையக் குழந்தைகள் இருப்பதாகவும் ஆனால் அவை தொந்தரவு தராதவை என்றும் கூறியிருந்தார். ரஷ்யா வில் நீண்டநாள் சிறைத் தண்டனையை அனுபவித்த தாகக் கேள்விப்பட்டதாகவும் அவர் கடிதத்தில் குறிப் பிட்டிருந்தார். ரஷ்யா நான் தங்கியிருந்த காலத்தின் பிற்பகுதியில் மிகவும் சுவாரஸ்யமாகவும் நான் முதலில் சென்றபோது இருந்ததற்கு முற்றிலும் மாறானதாகவும் இருந்ததாக அவருக்கு விளக்கிச் சொன்னேன்.

எங்களுடைய பேச்சின் பெரும் பகுதி சீனாவை பற்றியதாகவே இருந்தது. பண்பாடு நிறைந்த பழைய

koviloor Acadamy

சீன நண்பர்கள் பலரைப் பற்றிப் பேசினேம். அவர்களில் தத்துவ ஞானியான ஹூஷியும் நீதிபதியான வாங் சுங் ஸியும் இப்போது உயிருடன் இல்லை. ஆங்கில இலக்கிய அறிஞரும் 1947 லிருந்து கிரீஸில் சீனக் குடியரசின் தூதுவராக இருந்தவருமான வென்யுவான்சிங் பற்றியும் பேசினேம். ஸ்காட்லந்தில் ராபர்ட் பர்ன்ஸ் பற்றி சொற்பொழிவாற்றும் துணிவு வென்னுக்கு இருந்ததாக சர். ஹொரேஸ் கூறினர்- எந்த ஆங்கிலேயனும் அவரைப்பற்றிப் பேசத் துணிய மாட்டான். பேசவும் அனுமதிக்கமாட்டார்கள். 1946-ல் சீனவை விட்டுப் புறப்படுவதற்கு இரண்டு நாட்கள் முன்பு திருமதி சூயென்லாய் தன்னை வந்து பார்த்து சில அருமையான பரிசுப் பொருள்களை வழங்கியதை திருமதி சேய்மர் கூறினர். சீனவில் உள்ள நிலைமை பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று திருமதி சூ கேட்டாராம். "சியாங்கே ஷேக் தமது நாட்டுக்கு சேவை புரிய நீங்கள் ஒரு வாய்ப்பளிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று பதிலளித்தாராம் திருமதி சேய்மர். அதற்கு திருமதி சூ என்ன சொன்னர்? என்று கேட்டேன். "பேசாமல் சிரித்தாள். சூயென்லாய் எத்தகைய கம்பீரமான மனிதர்! அதை அப்பாவி ஆப்பிரிக்கர்களை வசப்படுத்த எப்படிப் பயன்படுத்துகிருர்" என்ருர் திருமதி சேய்மர்.

லண்டன், ஆகஸ்ட், 17

பதினைந்தாம் தேதி மாலை 'ரைட் ஆனரபிள் ஜெண்டில்மென்' என்ற புகழ்பெற்ற நாடகத்தைப் பார்க்கச் சென்ருேம். அரசியல், ஆபாசம் இரண்டும் கலந்த நாடகம் இது. பிரதம மந்திரியாக வருவதற்கு வாய்ப்பிருந்த சர். சார்லஸ் டில்கியிடம் இந்த இரண்டுமே இருந்தன. லிபரல் கட்சியின் தீவிர

2 4.18
koviloor Academy

வாதிகள் கோஷ்டியைச் சேர்ந்தவர் அவர். காலனிகள் பற்றிய தமது கருத்தில் முற்போக்காக இருந்தவர். எதற்காகவும் - யூனியன் ஜாக்குக்காகவும் கூடக் காலம் போகாமல் அப்படியே இராது என்றவர் அவர்- ஆயினும் சர் சார்லஸ் டில்கி பெண்களிடம் கொண் டிருந்த உறவு மோசமாக இருந்தது. தாய், அவளுடைய பெண்கள், அவர்கள் வீட்டுப் பணிப் பெண்கள், ஆகிய எல்லோருடனும் ஏககாலத்தில் காமக் களியாட் டத்தில் ஈடுபடத் தயங்காதவர். பரபரப்பான விவாக ரத்து வழக்கொன்றில் சட்டப் பிரச்னை யடிப்படையில் அவர் விடுதலையானுர். ஆனால் பிரிட்டிஷ் பொது மக்களின் கருத்துக்கு அடிப்படையான கண்ணியம் அவரைப் பார்லிமெண்டிலிருந்து ராஜினாமா செய்யக் கோருகிறது. இதுதான் நாடகக் கதை. எல்லோருமே அற்புதமாக நடித்தார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு புரப்யூமோ விவகாரம் கூட இதுபோன்ற ஒரு நாடகமாக அரங்கேறக்கூடும்.

ஐம்பத்தைந்து வருட காலமாக என்னுடைய நண்பரான என். ஆர் பிள்ளையின் மனைவி டிங்க்ஸ் எங்களுடன் நாடகத்துக்கு வந்திருந்தார். இரவு உணவு அவருடன் உண்டோம். அங்கு டில்லியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த மேத்தா வையும் அவரது மனைவியையும் சந்தித்தோம். தங்கு வதற்கு மட்டும் நாளொன்றுக்கு 15 பவுன் கொடுத்து அவர்கள் டார்செஸ்டர் ஓட்டலில் தங்கியிருந்தனர். அன்புள்ளம் கொண்டவரான டிங்க்ஸ் அவர்களை ஓட்டலிலிருந்து தன் வீட்டுக்கு அழைத்துப் போய்த் தங்கச் செய்தார். தன்னுடைய சொந்த அறையை அவர்கள் உபயோகத்துக்குக் கொடுத்து விட்டு தான் ஒரு சிறிய அறையை உபயோகித்துக் கொண்டார்.

koviloor Acadamy

கல்லூரி நாளிலிருந்து எனது மற்ருரு நண்பரான கே. டி. என். மேனனையும் சந்தித்தோம். அவர்தான் எவ்வளவு மாறிவிட்டார்! கேரளத்திலுள்ள புகழ்பெற்ற ஹிந்துக் குடும்பம் ஒன்றில் பிறந்து வளர்ந்த அவர் முதல் உலகப்போருக்குப் பின் ஆக்ஸ் போர்டுக்குச் சென்ருர். ஆங்கிலப் பெண்ணெருத்தியை மணந்து கொண்டு கிறிஸ்தவ மதத்தைத் தழுவினுர். இப்போது பெட்போர்ட்ஷயரிலுள்ள சர்ச் ஒன்றில் மத குருவாக இருக்கிருர். வாலிப வயதில் துடிப்பும் உற்சாகமும் நிறைந்தவராக நான் அறிந்த மேனன் இன்று அடக்கமான மதகுருவாக இருந்தார்.

மாஸ்கோவில் பரிச்சயமான பழைய நண்பர்கள் சிலரையும் சந்தித்தோம். அரபுக் குடியரசைச் சேர்ந்த அன்வர், பாகிஸ்தானைச் சேர்ந்த ஹிலாலி, இலங்கையை சேர்ந்த மலலசேகர ஆகியோர் அவர்கள். சீனுவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே நடைபெற்று வரும் உலகப் போட்டியில் சீனுதான் வெற்றியடையப் போகிறது என்ருர் ஹிலாலி. சீனுவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்டுள்ள விநோத உறவின் காரணமாக சீனு வெற்றிபெற வேண்டும் என்று அவர் விரும்புகிருரோ என்னவோ!

வட வியட்நாம் தளங்களை அமெரிக்கா தாக்கிய வுடன் மலலசேகர சீனப் பிரதிநிதியைச் சந்தித்தார். அவர்களுக்கிடையே நடைபெற்ற பேச்சு இங்கு குறிப் பிடத்தக்கது.

"ரத்தத்துக்கு ரத்தம் தான் பதில்" என்ருர் அவர்.

"அது சரி. எப்படி?"

"அதற்கு எத்தனையோ வழிகள் உள்ளன" என்ருர் சீன அதிகாரி. "அமெரிக்கா, ஆசியாவில் ஒரு போரில்

koviloor Acadamy

கூட வென்றது இல்லை. இந்தப் போரிலும் வெற்றி பெருது."

ஒரு வேளை சீன அதிகாரி கொரியப் போரை நினைத்துக் கொண்டு பேசிஞரோ என்னவோ? பிரபல அமெரிக்க விமரிசகரான ஹான்ஸன் பால்ட்வின் கூறியதுபோல் கொரியப் போரில் வெற்றியும் பெற வில்லை; தோல்வியும் அடையவில்லை. வியட்நாம் போரின் முடிவும் அப்படித்தான் இருக்கும் போலத் தோன்றுகிறது.

இங்கிலாந்தில் எங்களுடைய கடைசி நாளை சுசீலா வுடனும் அவளுடைய கணவன் கே. வி. மேனனுடனும் கழித்தோம். அவர்கள் வீடு எஸ்ஸெக்ஸிலுள்ள அப் மினிஸ்டரில் உள்ளது. அழகான புல்வெளி கொண்ட சிறுவீடு ஒன்றை வாங்கி அதனை நேர்த்தியாக அலங்கரித்து வைத்துள்ளனர். அக்கம் பக்கத்திலுள்ள ஆங்கிலேயர்கள் அளவு கடந்த அன்புடன் தன்னிடம் நடந்து கொள்வதாக சுசீலா கூறினுள். தங்கள் வீட்டுக்கு குடிவந்த அன்றே அறிமுகம் செய்து வைப் பதற்காகக் காத்திராமல் அவர்களாகவே வந்ததுடன் அன்றைய உணவையும் அனுப்பி வைக்க முன் வந்தார் களாம். இப்போது சுசீலா கருவுற்றிருப்பதால், செப்டம்பர் 12ந் தேதி பிறக்கலாம் என்று எதிர் பார்க்கப்படும், குழந்தைக்கென உடைகளைத் தயாரித்து அனுப்பிக் கொண்டிருக்கிருர்களாம்.

எதிலும் பட்டுக் கொள்ளாமல் வாய்முடி மௌனி களாக இருக்கும் இயல்புள்ள ஆங்கிலேயர்களிலிருந்து இவர்கள் எவ்வளவு மாறுபட்டவர்கள்!

மாலையில் சுசீலாவும் விஜயனும் எங்களை சௌத் எண்டிலுள்ள' கடற்கரைக்குக் கூட்டிச் சென்ருர்கள். கரையிலிருக்கும் கேளிக்கை சாதனங்களால் கடலின் பெருமையைக் காண்பதிலிருந்து நமது கவனம் மாறி

koviloor Acadamy

விடுகிறது. வாகனங்களின் இரைச்சலில் அலைஓசை அமிழ்ந்து விடுகிறது. ஆயினும் இன்று இங்கிலாந்து இருக்கும் அல்லது 19வது நூற்றுண்டிலிருந்த நிலைக்கு காரணமான சர். பிரான்ஸிஸ் டிரேக் சென்ற வரலாற்று புகழ்பெற்ற "கோல்டன் ஹிண்ட்" கப்பலை அங்கு பார்த்தது மகிழ்ச்சி தருவதாக இருந்தது.

19வது நூற்றுண்டிலிருந்த இங்கிலாந்தைவிட 20ம் நூற்றுண்டின் இங்கிலாந்து அதிகக் கவர்ச்சியானது என்று என்ஞல் எண்ணுமல் இருக்க முடியவில்லை. இந்நூற்றுண்டின் முதல் பாதியில் இரண்டு உலகப்போர்களின் போது ஆக்ரமிப்பாளரின் காலடியில் பணியமாட்டோம் என்பதை இங்கிலாந்து காட்டியது. அதே சமயத்தில் இதேபோல் ஆக்ரமிப்புக்கு அடிபணிய விரும்பாத வேறு நாடுகளும் உள்ளன என்பதையும் இங்கிலாந்து வரவர உணரத் தொடங்கியது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி கண்ணியமான முறையில் முடிவுக்கு வந்ததற்கு இந்த உணர்வுதான் காரணம். இந்தோனேஷியாவில் டச்சு ஆட்சியும் இந்தோ சீஞவில் பிரெஞ்சு ஆட்சியும் கடைசிக் கட்டத்தில் மோசமாக நடந்து கொண்டதுடன் ஒப்பிடும் போது பிரிட்டிஷார் நடத்தை போற்றத் தக்கதாகும் இந்தக் கட்டத்தில் வேறெந்த சாம்ராஜ்யமும் பழங்காலத்திலோ தற்காலத்திலோ நடந்து கொள்ளாத விதத்தில் இங்கிலாந்து நெகிழ்ந்து கொடுத்தது. சாம்ராஜ்யம், குடியரசுக்கும் இடமளிக்கும் காமன்வெல்தாக மாறுதலடைந்தது. யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளும் அறிவு அந்நாட்டின் ராஜதந்திரிகளுக்கு இருந்தது. லண்டன் நகரம் ஜவாஹர்லால் நேருவைப் பாராட்டிக் கௌரவிக்கும் என்று முப்பது வருடங்களுக்கு முன்பு யார்தான் நினைத்திருக்க முடியும்? இந்தியாவின் விடுதலைக்கு விரோதியாக இருந்த சர்ச்

koviloor Acadamy

சில் தமது பிரதம மந்திரி பதவியின் கடைசிக் கட்டத்தில் தமது பழைய எதிரியை அனுதாபத்துடன் கவனிப்பார் என்று யார் எதிர்பார்த்திருக்க முடியும்? "எதிரி" என்ற வார்த்தையை உபயோகப்படுத்துவது மிகையல்ல. ஒரு விருந்தில் சர்ச்சிலும் இந்திரா காந்தியும் அருகருகே அமர்ந்திருந்தனர். "அவ்வளவு தூரம் எதிரிகளாக இருந்த நாம் இன்று இத்தகைய நல்ல நண்பர்களாக இருப்பது அதிசயமாக இல்லையா?" என்றாராம் சர்ச்சில். "உங்களை நான் எதிரியாகவே கருதியது இல்லை" என்றார் இந்திரா. "ஆனால் நான் கருதினேன்" என்றார் சர்ச்சில்.

1950ல் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து விட்டுத் திரும்பும்போது பிரதம மந்திரி நேரு சில நாட்கள் இங்கிலாந்தில் தங்கினார். அப்போது பிரதமராக இருந்த ஆட்லி, எதிர்க்கட்சித் தலைவரான சர்ச்சிலுக்கு நேருவை அறிமுகம் செய்து வைத்தார். அப்போது சர்ச்சில் கூறிய முதல் வாக்கியம் இது தான்: "உங்களுடன் கூட வந்து அமெரிக்க மக்களுக்கு நான் உங்களை அறிமுகம் செய்து வைத்திருக்க வேண்டும். எப்படி அறிமுகம் செய்து வைப்பேன் தெரியுமா? 'இதோ அச்சத்தையும் வெறுப்பையும் வென்றுவிட்ட ஒரு மனிதர்' என்று கூறியிருப்பேன்."

"வந்தனம். என்னை ரொம்பவும் புகழ்கிறீர்கள்" என்றார் நேரு.

"ஆமாம். ஆனால் இதை நான் திடீரென்று இப்போது கூறவில்லை. அதைப்பற்றி பலகாலமாக நினைத்து வந்திருக்கிறேன். அதுதான் என் அபிப்ராயமும்கூட" என்றார் சர்ச்சில்.

முன்னாள் அரசியல் எதிரிகளிடம் தயாள குணத்துடன் நடந்து கொள்வதில் நேருவும் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளுக்குப் பின் தங்கிவிடவில்லை.

koviloor Acadamy

2. ஜெர்மனி

கொலோன், ஆகஸ்ட், 18

லண்டனை விட்டு மழையில் புறப்பட்டுக் கடுமையான முடுபனியில் கால்வாயைக் கடந்து ஒன்றரை மணி நேரத்திற்குப் பிறகு பிரகாசமான சூரிய ஒளியில் ஃப்ராங்க்ஃபர்ட்டில் இறங்கினோம். அங்கு நமது கான்ஸல் ஜெனரல் சாரி என்னைச் சந்தித்தார். டூன் பள்ளியில் ஆசிரியராயிருந்த எங்களது பிள்ளைகளான குமாருக்கும் சங்கருக்கும் அவர் பாடம் சொல்லிக்கொடுப்பது வழக்கம். பேசும் முறையிலிருந்து தீர்மானித்தால் அவர் ஒரு அறிஞராவார். அவருடைய அறிவுத் தாகத்தைப் போக்குவதற்காகத் தானோ என்னவோ ஒன்றுக்குப் பின்னொன்றாக வர்த்தகத்துறை சம்பந்தப்பட்ட பதவியில் நியமிக்கிறார்கள்.

நமது அரசாங்க ஊழியர்களிலேயே சிறந்த அறிஞரான பாலச்சந்திர ராஜன் தமது பதவியிலிருந்து விலக வேண்டி நேர்ந்தபோது நான் பெரிதும் வருந்தினேன். கேம்பிரிட்ஜ் டிரினிடிக் கல்லூரியின் இளம் மாணவர்களில் அவர் ஒருவர். அவர் ஒரு நாவல் எழுதினார். அது புத்தகக் கழகத்தின் அந்த மாதத்திய சிறந்த நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. வெளிவிவகார இலாகா துணைக் காரியதரிசியுடன் ஏற்பட்ட ஒரு மோதல் காரணமாக அவர் தமது பதவியை ராஜிநாமா செய்துவிட்டு ஆசிரியராகிவிட்டார். அரசியல் உலகம் நஷ்டமடைந்ததால் அறிவுலகம் லாபமடைந்தது.

koviloor Acadamy

விமான நிலைய உணவு விடுதிக்கு சாரி எங்களை அழைத்துச் சென்றார். அவரும் ஏர் இந்தியா உள்ளூர் பிரதிநிதியான ராம்சந்தரும், அனுஜியும், ஐஸ்கிரீம் சாப்பிட்டனர். நான் காப்பி அருந்தினேன். இந்திய ஓட்டல் பணியாள் ஒருவர் எங்களிடம் வந்தார். நாங்கள் இந்தியில் அவரை வரவேற்றோம். "நான் உங்கள் அடுத்த ஊர்க்காரன். திருவல்லாவைச் சேர்ந்தவன்" என்றார் அவர் மலையாளத்தில். நான் பிறந்து வளர்ந்த கோட்டயத்திலிருந்து திருவல்லா 16 மைல் தூரத்தில்தான் உள்ளது. அவருடைய பெயர் மாத்யூ. ஓட்டல் தொழிலில் பயிற்சிபெற வந்திருக்கும் இளைஞர் கோஷ்டியில் அவர் ஒருவர்.

நாற்பது நிமிட நேரத்தில் ஃபிராங்க்ஃபர்ட்டிலிருந்து கொலோனையடைந்தோம். நமது தூதுவர் பாமும் அவரது மனைவி பத்மினியும் எங்களை வரவேற்றனர்; அவர்களுடன் இங்கு தங்கியிருக்கிறோம் பத்மினி என் அத்தை மகள். 1923-ல் நடைபெற்ற எங்கள் திருமணத்துக்கு ஏழெட்டு வயதுச் சிறுமியாக இருந்த பத்மினி வந்திருந்தாள். இப்போது அவள் பாட்டியாகிவிட்டாள். அவளும் அவளுடைய கணவரும் உலகம் முழுவதும் சுற்றி வந்திருக்கிறார்கள். நான் மாஸ்கோவில் பதவி வகித்த காலத்தில் பாம் பெல்ஜியம், தாய்லந்து, ஆஸ்திரேலியா, அர்ஜென்டைனா, ஜெர்மன் குடியரசு ஆகிய ஐந்து நாடுகளில் பணியாற்றினார். இப்போது அலிகார் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருக்கும் பக்ருதீன் தயாப்ஜிக்குப் பிறகு அவர் ஜெர்மனியில் பணியாற்றினார். டில்லியிலிருந்து நாங்கள் மாஸ்கோவுக்குப் புறப்பட்ட போது தயாப்ஜியின் மனைவி சுரய்யா எங்களிடம் காட்டிய பரிவு எப்போதும் என் நினைவில் இருக்கும் ரஷ்யாவில் எனக்குத் தீங்கு எதுவும் நேராமல் இருக்க

koviloor Acadamy

அவர் எனது கையில் ஒரு தாயத்தைக் கட்டிவிட்டார். அது ஒன்பது ஆண்டுகள் பலனளிக்க வேண்டியிருந்தது! இதேபோல் லீலாமணி நாயுடு ஆண்டுதோறும் நடந்து கொண்டதையும் நான் மறக்க முடியாது. ஒவ்வொரு ஆண்டும் ரக்ஷாபந்தன நாளன்று அவர் எனக்கு மங்கலக் கயிற்றை அனுப்பி வைப்பது வழக்கம். அவர் இறக்கும் வரை இவ்வாறு செய்து வந்தார்.

நாங்கள் வந்ததுமே பாம் இந்தோனேஷிய தேசிய நாள் விழாவில் கலந்துகொள்ளப் போய்விட்டார். ஜாகர்தாவில் இன்னும் நமது தூதுவரை நியமிக்காமல் இருப்பது இரங்கற்குரியதாகும். பல மாதங்களாக இப்பதவி காலியாக இருந்து வருகிறது. சமீப காலத்தில் நம்முடன் உறவு பாதகமடைந்துள்ள இந்தோனேஷிய சர்க்காருக்கு இது எரிச்சல் ஊட்டுவதாக இருக்க வேண்டும். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இரு நாடுகளுக்குமிடையே உறவு நட்புறவாக மட்டுமன்றி தோழமையுறவாகவும் இருந்தது. இந்தோனேஷிய விடுதலைக்கான போரின் கடைசிக் கட்டத்தில் இந்தியாதான் இந்தோனேஷியாவின் சுதந்திர சர்க்காருக்கு இடமளித்தது. 1949ல் டச்சுக்காரர்கள் இந்தோனேஷியாவில் "போலீஸ் நடவடிக்கை" எடுத்தபோது அதைக் கண்டிக்க இந்தியாதான் ஆசியா, ஆப்பிரிக்க மாநாட்டைக் கூட்டியது. சீன மக்கள் குடியரசின் சர்க்காருக்கும் இந்தியா இதேபோன்ற பரிவையே காட்டியது. சீனாவை ஐ. நாவில் அனுமதிப்பதை எப்போதும் ஆதரித்து வந்துள்ளது. ஆனால் சர்வதேச உறவில் தயாளம் என்பது அதைப் பெறுபவரால் எப்போதும் பொறுத்துக்கொள்ள முடியாத-காட்டுபவர் அதற்கான பெருமையை எதிர்பார்க்க முடியாத ஒரு பண்பாகவே இருக்கிறது.

koviloor Acadamy

இன்று காலை கொலோனிலிருந்து 35 கி.மி. தொலைவிலுள்ள பான் சென்று எழுத வேண்டிய கடிதங்களை எழுதுவதில் காலைப் பொழுதைக் கழித்தேன். அகலமான 'ஆடோபான்' வழியே காரில் சென்றோம். கொலோன் மேயராக அடினுர் இருந்தபோது ஏற்பட்டது இது. அந்நகரின் மேயராக அடினுர் 17 ஆண்டுகள் இருந்தார். 1932ல் அவர் ஹிட்லரால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். நீண்டகாலம் மேயர் பதவி வகித்ததும் திடீரென்று 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டதும் அவருக்கு நன்கு உதவின.

ஒரேஒரு முறைதான் அடினுரை நான் சந்தித்திருக்கிறேன். 1956ல் அவர் மாஸ்கோவுடன் ராஜீய உறவு கொள்வது சம்பந்தமாக விவாதிப்பதற்கு அங்கு வந்திருந்தார். அப்போது நடந்த இரு சுவையான நிகழ்ச்சிகள் என் நினைவில் இருக்கின்றன. கடைசி நாளன்று அவருடைய பேச்சுக்கள் தோல்வியடைந்து விட்டது போலத் தோன்றியபோது கிரம்லினில் நடைபெற்ற விருந்தில் அடினுர் கூறினுர்: "எனக்கு இடப்புறம் அமர்ந்திருக்கும் கனவானுடன் (குருஷ்சாவ்) சற்று முன்புதான் பேசினேன். சொன்ன வார்த்தைகளை நாம் நம்பக்கூடிய மனிதர் அவர்." மறுநாள் காலையிலேயே ஜெர்மனியும் சோவியத் யூனியனும் ராஜீய உறவு கொள்ளத் தீர்மானித்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

அடினுருடைய விஜயத்தின்போது பால்ஷாய் தியேட்டரில் நடைபெற்ற "ரோமியோ ஜூலியட்" பாலே நிகழ்ச்சிக்கு சென்றேன். அடினுரைக் கௌரவிக்க ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி இது. உலனுவ் ஜூலியட்டாக அற்புதமாக நடித்தார். நாட்டிய முடிவில் அவள் காதலன் மடியில் சவமாகக் கிடக்

koviloor Acadamy

கிறுள். இரு குடும்பத்தாருக்குமிடையே ஏற்பட்ட சண்டையின் விளைவைக் கண்ட இரு வீட்டாரும் ஒருவரையொருவர் நெருங்கி அணைத்துக் கொள்கின்றனர். அப்போது ஜெர்மனி, ரஷ்யா ஆகிய இருநாட்டுப்பிரதிநிதிகளான அடினுரும் புல்கானினும் எழுந்து நின்று கை குலுக்கினர். கரகோஷம் வானளாவ எழுந்தது. இரண்டு உலகப்போர்களில் பெருமளவு துன்பத்தை ஏற்படுத்திய ஜெர்மனிக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயுள்ள விரோதம் முடிவுக்கு வந்துவிட்டதுபோலவும் ரஷ்யா, ஜெர்மன் உறவில் ஒரு புதிய கட்டம் உதயமாவது போலவும் ஒரு கணத்துக்குத் தோன்றியது. துரதிர்ஷ்டவசமாக இது அதிக காலம் நீடிக்கவில்லை.

பெர்லின், ஆகஸ்ட், 20,

18ந்தேதி மாலை அசாதாரண அறிவாற்றல் படைத்த இளைஞர் ஒருவர், ஒரு ஜெர்மன்காரருடன் கொலோனிலுள்ள எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர்தான் ராஜ்மோகன் காந்தி. தந்தை வழியில் காந்திஜியின் பேரர்; தாய்வழியில் ராஜாஜியின் பேரர். எம். ஆர். ஏ. (தார்மிகப் புனருத்தாரண இயக்கம்) தான் அவருடைய உயிர் மூச்சாக இருந்தது. இவரைவிட உற்சாகமிக்க தொண்டர் அந்த இயக்கத்தில் இருக்க முடியாது. அமெரிக்காவில் பல இடங்களில் எம். ஆர். ஏ. சார்பில் சொற்பொழிவுகளாற்றி விட்டு இந்தியா திரும்பிக் கொண்டிருக்கிறுர். அவருடைய தன்னம்பிக்கைக்கு எல்லையே இல்லை. இந்தியாவில் லஞ்ச ஊழலை எதிர்த்துப் புனிதப் போர் நடத்தப் போவதாக அவர் அனுஜியிடம் கூறினுர். பார்லிமெண்ட் தேர்தலுக்கு நிற்கப் போவதாகவும் ஆனுல் எந்தக் கட்சியின் சார்பில் அல்லது எந்தத் தொகுதியில் நிற்பது என்று இன்னும் முடிவு செய்ய வில்லையென்றும் அவர் ஸ்ரீ-ஷ

koviloor Acadamy

ஞர். "என்னுடைய இதயம் பரிசுத்தமானது. எனவே என்னுடைய பலம் பத்து பேருடையதற்கு சமமானது" என்று அவர் எண்ணுவதுபோல இருந்தது.

ராஜ்மோகனுக்கு ஆதரவாக எம். ஆர். ஏயின் பலம் இருந்தது. ஆனால் ஓர் அரசியல் கட்சியின் ஆதரவு இருந்தாலன்றி இந்தியாவில் ஏதேனும் செய்ய முடியுமா என்று நான் சந்தேகப்படுகிறேன். தாய்வழிப் பாட்டனுருடைய கட்சியைத் தேர்ந்தெடுப்பதா, தந்தை வழிப்பாட்டனுருடைய கட்சியைத் தேர்ந்தெடுப்பதா என்று அவருக்கு எதிர்ப்படக்கூடிய குழப்பத்தை என்னுல் உணர முடிகிறது. முன்னது எதிர்ச்கட்சி யாகவும் பின்னது ஆளும் கட்சியாகவும் இருப்பதில் தான் இந்தியாவுக்கு நன்மை ஏற்பட முடியும் என்று நான் நினைக்கிறேன்.

தூதரகக் காரோட்டி எங்களை கொலோன் விமான நிலையத்துக்கு அழைத்துச் சென்ருன். அங்கிருந்து நாங்கள் பெரிலின் சென்ளேம். அதுவரை அவன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ரொம்பவும் அழுத்தமான ஜெர்மானியன் என்று அவனைப் பற்றி அதுவரை எண்ணிக் கொண்டிருந்தேன். இன்று காலை இதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தாய் என்று ஒப்புக்குக் கேட்டு வைத்தேன். அவ்வளவு தான், மடை திறந்தாற்போல் பேசத் தொடங்கி விட்டான். கூடு மானவரை அவன் கூறியதை அப்படியே இங்கு தருகி றேன்.

"நான் போர் வீரனுக இருந்தேன், முதல் உலகப் போரில் இரண்டரை ஆண்டுகளும் இரண்டாவது உல கப்போரில் ஐந்தரை ஆண்டுகளும் பணியாற்றினேன். அது போதாதா? முதல் போரில் ஸோம் அருகே போரிட் டேன். இரண்டாவதில் என்னுடைய படை ரஷ்யாவி

koviloor Acadamy

லுள்ள கார்க்கோவ் அருகே அனேகமாக அழிந்தே விட்டது. ஒரு சிலர் உயிர் தப்பினேம். 200 மைல் நடந்து ருமேனியாவை அடைந்தோம். ரஷ்யர்கள் பின்னுல் வந்து கொண்டிருந்ததால் நாங்கள் வேகமாக நடக்க வேண்டியிருந்தது. ருமேனியாவில் எங்களை ஒரு புதிய அணியில் சேர்த்து நார்மண்டிக்கு அனுப்பினுர்கள். கடலோரமாக எங்கோ இருந்தோம். கடல், நிலம், வானம் மூன்றிலிருந்தும் பிரிட்டிஷார் குண்டு போட்டு எல்லாவற்றையும் அழித்துக் கொண்டு இருந்தார்கள். எதற்காக நாம் போரிடுகிறேம் என்ற வியப்பு எல்லோருக்கும் ஏற்பட்டது. கடைசியாக என்னைச் சிறை பிடித்து கனடிய முகாமுக்கு அனுப்பினுர்கள். அங்கே எங்களைக் காலால் எட்டி உதைத்து வேசி மக்கள் என ஏசினர். உண்ணக் கிடைத்தது வெகு குறைவு. நம்பினுல் நம்புங்கள். ஒரு டப்பி ஜாமைக் கொண்டு நாங்கள் 12 பேர் நான்கு வாரங்களை ஓட்டினேம். ரொட்டியே கிடையாது. ஆனுல் ரஷ்ய சிறை முகாம்களை விடப் பரவாயில்லை. அங்கே டைபஸ் ஜுரத்தினுல் மககள் ஈக்களைப் போல மடிந்தனர். ஹிட்லர் வெறியர் தான். ஆனுல் லாயிட் ஜார்ஜ், கிளெமன்சு போன்றவர்கள் தான் ஹிட்லரை தோற்றுவித்தவர்கள். வார்ஸேல்ஸ் இல்லாவிட்டால் ஹிட்லர் இல்லை. மக்களை வெறுப்பதால் பலன் இல்லை.''

''இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு ஜெர்மனி நன்ருக நடத்தப்பட்டது இல்லையா?'' என்று கேட்டேன்.

''ஆமாம். விசித்திரமானவர்கள் அமெரிக்கர்கள். அவர்கள் எல்லாவற்றையும் அழிக்கிருர்கள். பிறகு எல்லாவற்றையும் நிர்மாணிக்கிருர்கள். கார், ரெப்ரிஜிரேடர், டெலிவிஷன் செட் போன்ற பொருள்களை அவர்

koviloor Acadamy

களால் விற்க முடியாத போது அவர்கள் போரை நடத்துகிறார்கள்; அல்லது மற்றவர்களையும் போரிடத் தூண்டுகிறார்கள். உங்களால் புரிந்து கொள்ள முடியாது. இரண்டாவது உலகப் போருக்கு சற்று முன்பு அமெரிக்கா ஜெர்மனிக்கு 500 டன் நிக்கலை விற்றது. ஆயுதங்கள் செய்ய அது அவசியமாகத் தேவைப் பட்டது. வளமும், தொழிலும், வல்லமையும் அமெரிக்காவுக்கு இவ்வளவு இருக்கும் என்று ஹிட்லர் எதிர்பார்க்க வில்லை. சிறந்தத எல்லாமே அமெரிக்கர்களிடம் உள்ளது. சிறந்து உடை, சிறந்த போர்க் கருவிகள், சிறந்த உணவு எல்லாம். ஒரு ஸ்பூன் ஜாம் உண்டு நாங்கள் உயிர்வாழ்ந்த போது அவர்கள் வறுத்த கோழியும் அன்னாசிப் பழமும் சாப்பிட்டார்கள். சில சமயங்களில் அமெரிக்கப் போர்வீரர்கள் எங்களுக்கும் அதில் கொஞ்சம் தருவது உண்டு.''

நாங்கள் பெர்லினில் கண்டவை அமெரிக்கர்களைப் பற்றி கிளீன் கூறிய கருத்தை உறுதிப்படுத்தியது. அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் பெர்லினில் தங்களால் முடிந்ததை யெல்லாம் அழித்துவிட்டார்கள். பின்னர் நிர்மாணித்தும் விட்டார்கள். குட்டிச் சுவர்கள் கோபுரமாக உயர்ந்து நிற்கின்றன. ஜெர்மன் அதிகாரிகள் எங்களுக்கு உதவி செய்ய ஓர் இளைஞரை அனுப்பினார்கள். சுத்தமாக ஆங்கிலம் பேசிய அவர் எங்களைப் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றார். ஜெர்மனிக்கு அமெரிக்கா செய்துள்ள உதவிக்காக நன்றிப் பெருக்கால் அவர் நிறைந்திருந்தார். விமான நிலையத்திலிருந்து நாங்கள் வெளியே வந்ததும் எங்கள் வழிகாட்டி ஒரிடத்தைக் காட்டினார். பெர்லின் முற்றுகையைத் தகர்த்த விமானப் போரில் உயிர் நீத்த 77 வீரர்களுக்கான நினைவுச் சின்னம் அது. "விண்வெளி சாதனை குறித்து எல்லோரும் பேசுகிறார்

koviloor Acadamy

கள். ஆனால் இது அதைவிட வீரமான சாதனை'' என்றார் வழிகாட்டி. அமெரிக்கர்களுடைய தயாள குணத்துக்குச் சின்னமாகவுள்ள சில இடங்களையும் அவர் காட்டினார். ஃபோர்ட்ஃபவுண்டேஷன் ஏற்படுத்திய பல்கலைக் கழகம், ஏழு லட்சம் நூல்கள் கொண்ட நூல்நிலையம், பென்சமின் பிராங்லின் நிதியிலிருந்து கட்டப்பட்ட காங்கிரஸ் மண்டபம் போன்றவை இவற்றுள் சில. மார்ஷல் திட்டம் தான் ஜெர்மனியைக் காப்பாற்றியது என்றும் வழிகாட்டி எனக்கு நினைவு படுத்தினார். அதை நான் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டேன். ஜெர்மன் மக்களுடைய கடினமான உழைப்பும், நாட்டுப் பற்றும் இல்லாவிட்டால் மார்ஷல் திட்டம் மட்டுமே ஜெர்மனியைக் காப்பாற்றி இருக்க முடியாது என்றேன். என்னுடைய புகழுரைக் காக அவர் நன்றி தெரிவித்தார். ஜெர்மனியின் சொந்த சாதனைக் குறித்து அவர் பெருமைப்பட்டுக் கொள்ளாதது வியப்பாக இருந்தது. ''1870ம் வருடத்திய வெற்றிக் கம்பம் என்றழைக்கப்படுவது'' என்று ஒன்றைச் சுட்டிக் காட்டினார். கம்பத்தைச் சுற்றிலும் பிஸ்மார்க், மால்ட்கே, ரூன் ஆகியோரது சிலைகள் இருந்தன. ''என்றழைக்கப்படுவது என்று ஏன் சொல்கிறீர்கள்? அது மாபெரும் ஜெர்மன் வெற்றியின் சின்னம் தானே?'' என்று கேட்டேன். ''இருக்கலாம். ஆனால் அதை சமாதானக் கம்பம் என்றழைத்து அதன் மீது சமாதான தேவதையின் உருவை அமைப்பது நல்லது'' என்றார். என்னுடைய மேற்கு பெர்லின் சுற்றுப் பயணத்தில் ''எதிர்ப்பு வீரர்களுக்கான'' நினைவுச் சின்னத்தையும் பார்த்தேன். 1944 ஜூலை 20ந்தேதி ஹிட்லரைக் கொல்ல முயன்று தோல்வி கண்டவர்கள் இவர்கள். பின்னர் அவர்கள் தூக்கி லிடப்பட்டனர்.

koviloor Acadamy

மாலையில் டச்சுக்காரரான மற்ளெரு வழிகாட்டியுடன் கிழக்கு பெர்லினுக்குச் சென்றேன். "எல்லாவற்றையும் அழித்துவிட்டுப் பின்னர் எல்லாவற்றையும் நிர்மாணிப்பது" என்று கிளின் குறிப்பிட்ட கலையில் அமெரிக்கர்கள் மட்டுமே தேர்ச்சி பெற்றவர்கள் அல்ல என்பதை எனது கிழக்கு பெர்லின் விஜயம் உறுதிப் படுத்தியது. பெர்லினை முதலில் சென்றடைந்த ரஷ்யர்கள் அதைத் தரைமட்டமாக்குவதில் தயங்கவே இல்லை. அந்த அளவு உற்சாகத்தை தம் வசமுள்ள பகுதியை நிர்மாணிப்பதிலும் அவர்கள் காட்டியிருக்கிருர்கள். என் கண்களைக் கட்டி கார்ல் மார்க்ஸ் வீதிக்கு (முன்பு இதற்கு ஸ்டாலின் வீதி எனப் பெயர்) இட்டுச் சென்றிருந்தால் ஒரு பெரிய ரஷ்ய .நகரத்தில் இருப்பதாக நினைத்திருக்கக் கூடும். இருபுறமும் உள்ள கட்டிடங்கள் யாவும் ரஷ்ய பாணியிலேயே இருந்தன. கார்ல் மார்ஸ் சதுக்கம், மாஸ்கோவிலுள்ள செஞ்சதுக்கத்தை நினைவுபடுத்துவதாக இருக்கிறது. "அங்கு அமைதிக்காக அணு ஆயுதங்களுடன் அணிவகுப்பு நடத்துகிருர்கள்" என்று டச்சு வழிகாட்டி கூறினுர். பத்து ஆண்டுகளுக்கு முன்பு முதல்தடவையாக நான் பெர்லின் வந்திருந்தபோது மேற்கு பெர்லினின் செழிப்புக்கும் கிழக்கு பெர்லினின் வறுமைக்குமிடையே பெரும் வேறுபாடு இருந்தது. இப்போது அவ்வாறு இல்லை. கிழக்கு பொலினிலும் சுறுசுறுப்பான இயக்கம் காணப்படுகிறது. கிழக்கு பெர்லினில் உபயோகிக்கப்படும் மட்டரகமான பெட்ரோலின் மணம் வேறுவிதமாக இருப்பதை என்னுடைய வழிகாட்டி சுட்டிக் காட்டத் தவறவில்லை. "ஆனுல் மேற்கு பெர்லினில் உபயோகிக்கப்படும் முதலாளித்வப் பெட்ரோலைவிட இது ஆத்மிக ரீதியில் உயர்வானது" என்று அவர் கூறினுா.

koviloor Acadamy

கம்டேகருடன் அருமையான விருந்துண்டுவிட்டு கிழக்கு மேற்கு பெர்லின்களுக்கிடையேயுள்ள சுவரைப் பார்க்கச் சென்றோம். 1960 கிறிஸ்துமஸின் போது நான் பெர்லினுக்கு வந்த சமயம் இந்த சுவர் கிடையாது. அதற்கு ஆறு மாதங்களுக்குப் பின்னரே எழுப்பப்பட்டது. காங்கிரீட்டினாலும் முள் கம்பியினாலும் அமைக்கப்பட்டுள்ள இது 160 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. ஒவ்வொரு நூறு கெஜத்துக்கும் காவல் மண்டபங்கள் உள்ளன. இதில் காவலர்கள் இருப்பார்கள். "கண்ணுக்குப் புலப்படாத போலீஸ் நாய்கள்" என்று வழிகாட்டி இவர்களைக் குறிப்பிட்டார். 100 மீட்டர் அகலமுள்ள பிரதேசம் முழுவதும் 'யாருக்கும் சொந்தமில்லாத இடம்' அல்லது 'மரணப் பிரதேசமாக' ஆகிவிட்டது. இப்பிரதேசத்தில் ஆங்காங்கே கண்ணிகளும் வைக்கப்பட்டுள்ளன. சுவற்றை ஒட்டினாற்போலுள்ள கட்டிடங்கள் எல்லாம் காலி செய்யப்பட்டு விட்டன. அவற்றின் கதவுகள் ஜன்னல்கள் யாவும் கல் வைத்து மூடப்பட்டு விட்டன. மரணப் பிரதேசத்தில் உள்ள பள்ளிகள், சினிமா கொட்டகைகள் எல்லாம் மூடப்பட்டு விட்டன. எல்லைக்கு இருபுறமும் இருப்பவர்கள் தமக்குள் பேசுவது தடை செய்யப்பட்டுள்ளது. கையை ஆட்டுவது கூடக் குற்றமாகும். ஒரு சமயம் சுவற்றைத் தாண்டித் தப்பிக்க முயன்ற ஒரு சிறுவனை போர் வீரன் ஒருவன் சுட்டுக் கொல்ல மறுத்தான். அதற்காக அவன் இருந்த பட்டாளம் முழுவதும் தண்டனைக்குள்ளாயிற்று. கிழக்கு பெர்லினுக்கும் மேற்கு பெர்லினுக்கும் இடையே ஜெர்மன் மக்களுடைய நடமாட்டம் ஸ்தம்பித்துப் போயிருக்கிறது. மணமான தம்பதிகளும் கூடப் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். சென்னையிலுள்ள பூந்தமல்லி ஹைரோடுக்குக் குறுக்கே

koviloor Acadamy

ஒரு சுவர் எழுப்பப்பட்டிருப்பது போலவும் அதன் ஒரு புறத்தில் ரஷ்ய ராணுவமும் புறுபுறத்தில் அமெரிக்க ராணுவமும் இருப்பது போலவும் இருக்கிறது.

இந்த சுவற்றினுடைய மூன்ருவது ஆண்டு விழா சென்ற வாரம் கொண்டாடப்பட்டது. மேற்கு பெர்லி னில் சில நிமிட மௌனத்தைக் கடைப்பிடித்து அதனைக் கொண்டாடினுர்கள். சுவர் அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறிவிட்டது. கிழக்கு பெர்லினி லிருந்து மேற்கு பெர்லினுக்கு நாள்தோறும் 2000 அகதிகள் சராசரியாக வெளியேறிக் கொண்டிருந்தது நின்றுவிட்டது. இருந்தும் சுவர் ஏற்படுத்தப்பட்ட கடந்த மூன்ருண்டுகளில் 1633 போர் வீரர்கள் உட்பட 20,000 கிழக்கு பெர்லின் மக்கள் எப்படியோ மேற்கு பெர்லினுக்குத் தப்பி வந்து விட்டதாகக் கூறினுர்கள். தப்ப முயன்றபோது அகப்பட்டுக் கொண்ட 53 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சாலையோரமாகப் புத்தம் புது மலர்களால் மூடப்பட்ட அவர்களது கல்லறைகள் உள்ளன. சுவற்றை எழுப்ப 100 மிலியன் மார்க்குகள் செலவிடப்பட்டதாக கிழக்கு ஜெர்மனி அதிகாரிகளே ஒப்புக்கொண்டிருப்பதாக வழிகாட்டி கூறினுர். கள்ளக் கடத்தல், கள்ள மார்க்கட் வியாபாரம் ஆகிய வற்றின் மூலம் ஆண்டு தோறும் 30 மிலியன் மார்க் நஷ்டமேற்பட்டு வந்ததாகவும் எனவே சுவற்றை எழுப்ப அவ்வளவு செலவிட்டது நியாயம்தான் என்றும். அவர்கள் கூறுகிருர்களாம். கிழக்கு ஜெர் மனிக்கு அது 'பாஸிஸ்ட் எதிர்ப்பு பாதுகாப்புச் சுவர்'. மேற்கு ஜெர்மனிக்கு "பாஸிஸ்ட் உளவாளிகள், நாச வேலைக்காரர்களின் கூண்டு." சுவற்றுக்கு இருபுறமும் பிரசாரமும் எதிர்ப்பிரசாரமும் நடைபெற்று வரு கிறது.

koviloor Acadamy

மேற்கு ஜெர்மனியில் செய்யப்படும் கேவலமான பிரசாரத்தை நம்ப வேண்டாம் என்று கிழக்கு ஜெர்மனி சுவரொட்டிகளைப் பிரசுரித்துள்ளது. மேற்கு பெர்லின், 1961 ஜூன் 15ந் தேதி உல்பிரிட் கூறிய வாசகத்தைக் கொண்ட சுவரொட்டிகளை வெளியிட்டுள்ளது. "சுவர் எழுப்பவேண்டும் என்று விரும்புபவர் யார்? எவரும் இல்லை. நமது தொழிலாளர்கள் வீடுகளைக் கட்டுவதில் மும்முரமாக இருக்கிறார்கள் அவர்கள் அவற்றைக் கட்ட விரும்பவில்லை." அப்படியிருந்தும் இரண்டு மாதங்களுக்குள் சுவர் எழுப்பப்பட்டு விட்டது.

உண்மை என்னவென்றால் கொரியாவிலுள்ள 38வது அட்ச ரேகை போலவும் வியட்நாமிலுள்ள 17வது அட்சரேகை போலவும் இச்சுவர் ஒரு சின்னமாகவும் விளைவாகவும் விளங்குகிறது. கிழக்குக்கும் மேற்குக்கும் நடைபெறும் போரின் சின்னம் அது. இரு தரப்பாரும் சற்று விட்டுக்கொடுப்பதன் மூலம் கிழக்கு, மேற்கு பெர்லின்களுக்கிடையே தொடர்பை அதிகரிக்க முடியும் என்பதில் ஐயமில்லை. இதன் மூலம் தடையை சற்றுத் தளர்த்தலாம். ஆனால் சமீபத்தில் சுவர் மறைந்துவிடும் என்று தோன்றவில்லை. டச்சு வழிகாட்டி கூறியதுபோல "ஐக்கிய ஜெர்மனியைப் போலவே ஐக்கிய பெர்லின் ஏற்படவேண்டும் என்பதும் ஒரு ஈடேற முடியாத கனவாகிவிட்ட போதிலும் அந்தக் கருத்து கைவிட முடியாத ஒன்று."

ஃபிராங்ஃபர்ட், ஆகஸ்ட், 22

இன்று காலை கொலோனிலிருந்து ஃபிராங்ஃபர்ட்டுக்கு விமானத்தில் செல்வதற்குப் பதிலாக சாலை வழியே சென்றோம். 'ஆடோ பான்' வழியே நாங்கள் செல்வோம் என்று எங்கள் காரோட்டி நினைத்துக்

koviloor Acadamy

கொண்டிருந்தான். அப்படி சென்ருல் சாலையில் இருபுற மும் மரங்களேயும், வேகமாக ஒடும் கார்களேயும் தவிர மற்றெதையுமே பார்த்திருக்க முடியாது. ஸ்டீன்பெக் கூறியது போல "இப்போது அமெரிக்காவின் ஒரு கோடியிலிருந்து இன்னெரு கோடிக்கு எதையுமே காணுமல் நெடுஞ்சாலே வழியே ஒருவர் போகமுடியும்." மழை பெய்து கொண்டிருப்பதால் மெதுவாகத்தான் போக முடியுமென்றும், ரைன்நதி ஓரமாகச் செல்லும் சாலேயில் போனுல் ஜினிவாவுக்குப் போகவேண்டிய விமானத்தைத் தவறவிட்டு விடுவோம் என்றும் காரோட்டி ஆட்சேபித்தான். ரைன்நதியின் அழகைக் காணுமல் போவதைவிட விமானத்தைத் தவற விட்டாலும் பரவாயில்லே என்று முடிவு செய்தேன்.

கொலோனிலிருந்து ஃபிராங்ஃபர்ட்டுக்கு ரைன்நதி யோரமாகச் செல்வது 2000 ஆண்டு வரலாற்றைக் காண்பது போல் ஆகும். கொலோன் என்ற சொல் காலனியா அல்லது காலனி என்ற லத்தீன் சொல்லி லிருந்து வந்ததாகும். இப்போது ஜெர்மனி எனப்படும் பகுதியில் ரோமன் ஆட்சியின் எல்லே கொலோன். அதன் முதல் சாஸனத்தை கி.பி.58ல் ராணி அக்ரிப்பினு விடமிருந்து பெற்றது, சென்ற போரின் போது காட்டு மிராண்டித்தனமான குண்டு வீச்சுக்கு அது இலக்கா யிற்று. ஆனுல் காதிக் கட்டிடக் கலேயின் அருமை யான எடுத்துக்காட்டான அதன் கதிட்ரல் அதிசய மாக எவ்வித சேதமும் இன்றித் தப்பியது.

கொலோனே விட்டுப் புறப்பட்டு அரைமணிக்குப் பிறகு வரலாற்றுப் புகழ்பெற்ற பான் நகரத்தினூடே சென்றேம். இதனுடைய ஆரம்ப கால லத்தின் பெயர் காஸ்ட்ரா பானென்ஸியா. ரோம சாம்ராஜ்யத்தின் பாதுகாப்பு அணியில் இது முக்கியமான இணேப்பாக இருந்தது. இங்கு காஸியஸ், பிளாரன்டியஸ் என்னும்

koviloor Acadamy

இரண்டு போர்வீரர்கள் கி. பி. 253-இல் அவர்கள் கிறிஸ்தவ மதத்தை நம்பினதற்காகக் கொல்லப் பட்டனர். பானுக்கு வேறு புகழும் உண்டு. 1770ல் பீதோவான் இங்கு பிறந்தார். இன்று அது ஜெர்மனி யின் "தற்காலிகத் தலைநகர"ராக உள்ளது. தற்காலிக மாக இருப்பது ஏனென்றால் ஜெர்மன் பெடரல் குடியரசு ஐக்கிய ஜெர்மனியின் தலைநகராக பெர்லின் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக் கிறது. பெட்ரல் குடியரசுக்கு கிழக்கு ஜெர்மனி கண்ணை உறுத்துவதாக உள்ளது. மேலும் தாய்நாட்டுடன் இணைக்கப் படவேண்டிய மற்றொரு ஜெர்மனியும் உள்ளது. அதாவது போருக்குப் பின்னர் போலந்தின் பகுதியாகிவிட்ட ஸைலீஷியா, பாமரேனியா பிரதேசங் கள். இந்தப் பேராசையைக் கொண்டிருப்பது போலந்து ரஷ்யாவைச் சார்ந்து இருக்க வேண்டியதை பலப் படுத்துகிறது,

பானை விட்டுச் சென்றதும் தூதரகத்தைக் கடந்து சென்றோம். பிராங்க் ராபர்ட்ஸ் தூதுவராக இருக்கிறார். டில்லியிலும் மாஸ்கோவிலும் அவரை நான் அறிவேன். அவரையும் அவருடைய அழகிய எகிப்திய மனைவி ஸெல்லாவையும் நான் சந்திக்கவே விரும்பினேன். ஆனால் நான் கொலோனில் இருந்தபோது அவர் பெர்லினில் இருந்தார். நான் பெர்லினில் இருந்தபோது பானில் அவர் இருந்தார்.

பானைவிட்டுப் புறப்பட்டு சில நிமிடங்களில் ஏழு மலைப் பிரதேசத்தை யடைந்தோம். பிறகு ரைன்நதி யோரமாகவே மெயின்ஸ் வரை சென்றோம். "கோல்டன் மெயின்ஸ்" என்று அழைக்கப்பட்டு வந்த அது ஹெஸ் ஸேயினுடைய சாம்ராஜ்யத்தின் தலைநகராக இருந்தது. 11வது நூற்றாண்டு முதல் 13வது நூற்றாண்டு வரை

koviloor Acadamy

இந்த சாம்ராஜ்யம் சிறப்பாக விளங்கியது. ரைன்லந்திலேயே பழமையான செயின்ட் மார்ட்டின் கதீட்ரலில் அதன் பெருமை இன்றும் புலப்படுகிறது. மற்ருெரு பெரிய நகரான கோப்லென்ஸைக் கடந்து சென்ருேம். இங்கே ஒயினுக்குப் புகழ்பெற்ற மோஸல், ஒரு குடியானவனுடைய பெண் நிலப்பிரபுவினுடைய படுக்கைக்கு அழைத்துச் செல்லப்படுவது போல ரைனுடன் சேர்கிறது. இங்கு ரைன் வளைந்து மலைகளுக்கிடையே செல்கிறது. இந்த இடத்தில் ரைனில் படகில் செல்வது அபாயகரமானது.

சமாதானத் தூதுவனைப்போல ரைன்நதி குன்றுகள், பள்ளத்தாக்குகள், காடுகள், பழத்தோட்டங்கள், திராட்சைத் தோட்டங்கள் வழியே எல்லாம் செல்கிறது. இருந்தும் ரைன்லந்து வெகுகாலமாகவே உலகின் கொந்தளிப்பு மிகுந்த பிரதேசங்களில் ஒன்ருக இருந்து வருகிறது. இங்கு பல கோட்டைகள் உள்ளன. சில நல்ல முறையிலும் வேறு சில சிதிலமடைந்தும் உள்ளன. நமது நாட்டின் வடமேற்கு எல்லையில் உள்ளது போல குன்றுகளின் மீது எதிரிப்படையின் வருகையைக் கண்காணிக்கும் காவல் நிலையங்கள் இருக்கின்றன. பரஸ்பரம் போரிட்டுக் கொண்டிருந்த பல நாடுகளைக் கொண்டதாக ஜெர்மனி இருந்த காலத்தை இவை நினைவுபடுத்துகின்றன. இந்த உள்நாட்டுச் சண்டைகள் சென்ற நூற்ருண்டில் முடிவுக்கு வந்தன. இப்போது அதற்குப் பதிலாக சர்வதேசச் சண்டைகள் நிலவுகின்றன. இதிலும் ரைன்லந்து பிரதான இடம் வகித்துள்ளது. ரைனை ஆண்பாலாக ஜெர்மானியர் குறிப்பிடுவதில் வியப்பில்லையே!

வால்கா தேவியுடன் என்னுடைய உறவு நெருக்கமானதாக இருந்த போதிலும் கூட ரைன்தேவனை

koviloor Acadamy

அறிந்து கொண்டதில் நான் மகிழ்ச்சியடைந்தேன். தந்தை ரைன் என்ற சொல் குறிப்பிடத்தக்கது. ஜெர்மனியை ஆராய்ந்தவர்கள் அதனை எப்போதும் ஆண்களின் நாடு என்றே குறிப்பிடுவர். ஜெர்மன் ஆணும் அதனை உணர்ந்திருக்கிறன். நவீன ஜெர்மனியின் ஸ்தாபகரான பிஸ்மார்க் ரஷ்யர்களை "பெண் மக்கள்" என்று வெறுப்புடன் குறிப்பிட்டார். இன்று அவர் உயிரோடு இருந்திருந்தால் அவ்வாறு கூறத் தயங்கி இருப்பார். ஜெர்மனியில் தந்தை, கணவன் ஆகியவர்களுடைய அதிகாரம் சர்ச்சைக் கிடமில்லாதது. சீன தத்துவப் பேராசிரியரான ஹுஷி என்னிடம் ஒருசமயம் தம்முடைய பிரதானமான பொழுதுபோக்கு, மனைவிக்கு அடங்கி நடக்கும் கணவன்களின் கதைகளை சேகரிப்பது என்று சொன்னர். அவரிடம் ஜெர்மனி, ஜப்பான் தவிர இதர நாட்டினர் எல்லோருடைய கதைகளும் உள்ளன. ஜெர்மனி ஆண்நாடாக இருப்பதால்தான் உன்னத மனிதர்கள் என்று தங்களை அழைத்துக் கொண்ட ஹிட்லர் போன்றவர்கள் முன்பு மண்டியிட்டுப் பணிந்ததோ? அதனல்தான் ஸ்டீபன்லீகாக் கூறியதுபோல் ஜெர்மனியில் பறவைகள் ஒரு மரக் கிளையில் வரிசையாக உட்கார்ந்து இணைந்த குரலில் பாடுகின்றனவோ? இன்று காலை ரைன் எங்களுக் களித்த அழகான காட்சி விருந்துக்குப் பின்னர் அத்தகைய எண்ணங்களுக்கு இடம் கொடுப்பது சரியல்ல. ரைன்லந்தின் அழகும், அதனைப் பாதுகாக்கப் போராடிய மக்களுடைய தேசபக்தியும் எப்போதும் என் நினைவில் இருக்கும். சில சமயங்களில் தாக்குவதுதான் சிறந்த தற்காப்பு என்றெண்ணிக் கொண்டு சொல்ல முடியாத துன்பங்களை ஐரோப்பாவுக்கும் உலகுக்கும் அவர்கள் ஏற்படுத்திய போதிலும் அவர்கள் நாட்டுப் பற்று உயர்ந்ததே யாகும்.

koviloor Acadamy

3. ஜெனிவா

ஜெனிவா, ஆகஸ்ட், 23

சில ஆண்டுகளுக்கு முன்பு ஜனுதிபதி வொரோஷி லோவுடன் இந்தியா சென்று அவருடைய இந்திய சுற்றுப்பயணம் முழுவதும் அவருடன் இருந்தேன். ஆயினும் கல்கத்தா சென்றபோது சில மணி நேரம் அனுமதி பெற்றுக்கொண்டு என்னுடைய மகள் அம்மிணியைக் காணச் சென்றேன். கொச்சியிலும் மற்ருெரு மகளான மாலதியைக் காண ஒரு மாலை அனுமதி பெற்றேன். பம்பாயில் அப்போதுதான் டமாஸ்கஸிலிருந்து வந்துள்ள மூன்ருவது பெண் மாலினியைப் பார்த்துவிட்டு வரட்டுமா என்று கேட்டேன். "ஒவ்வொரு துறைமுகத்திலும் மாலுமிக்கு ஒரு மனைவி உண்டு என்று எங்கள் நாட்டில் ஒரு பழமொழி இருக்கிறது. மேனனுக்கு ஒவ்வொரு துறை முகத்திலும் ஒரு மகள் இருக்கிருள்" என்ருர் குஸ்னெட்ஸோவ். "அது மகள்தான் என்பது நிச்சயமாகத் தெரியுமா?" என்ருர் வொரோஷிலோவ்.

இந்த உலகப் பயணத்தின்போது முக்கியமான இடங்களில் எங்களுடைய மகள்கள் இருந்தது மட்டுமல்ல. பேத்தி டிட்டுவும் இருந்தாள். ஜெனிவாவில் அவள் இருப்பதன் காரணமாகவே இந்த இடத்துக்கு வந்தோம். அவளுடைய கணவர் கோபிநாத் ஜெனிவாவில் நமது வைஸ்-கான்ஸலாக இருக்கிருர். நான் கல்வி கற்ற இடங்களிலேயே அவரும் கற்றவர். யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் நடத்திய ஆளுமை சோதனையில் உயர்ந்தபட்ச மார்க்குகளைப் பெற்றவர்.

koviloor Acadamy

நேற்று அவர்களது திருமண முதலாண்டு நிறைவு விழா. பெர்ட்டோலி தம்பதி ஜெனிவா ஏரியை நோக்கி ஞற்போலுள்ள தங்கள் அரண்மனைபோன்ற மாளிகை யில் எங்களுக்கு விருந்தளித்து டிட்டுவையும் கோபி யையும் வாழ்த்தினர்.

இன்றைய இளைஞர்களுக்கு எங்கள் தலைமுறை யைச் சேர்ந்தவர்களைவிட தங்கள் நாட்டுக்குப் பணியாற்றப் பரவலான வாய்ப்புக்கள் உள்ளன. அவர்கள் அதிகக் கடினமாக உழைக்கவும் வேண்டும். துரதிர்ஷ்டவசமாக ஐ. ஏ. எஸ். ஐ. எ.ஃப். எஸ். அங்கத் தினர்கள் ஐ. ஸி. எஸ்ஸைச் சேர்ந்த நாங்கள் செய்தது போல வாழ முடியவில்லை. குடும்பச் செலவைச் சரிகட் டும் பிரச்னை அவர்களுக்கு எப்போதும் இருக்கிறது. வெளிநாடுகளில் நமது இளம் அதிகாரிகள் வேலையாட் களை வைத்துக்கொள்ளக் கட்டாது. வாழ்க்கைத் தர உயர்வுக்கேற்ப அவர்களுக்குக் கிடைக்கும் அலவன்ஸ் இல்லை. அவர்களுடைய மனைவிமார் சமைப்பது, பாத்திரம் தேய்ப்பது போன்ற வேலைகளை அவர்களே செய்யவேண்டியுள்ளது. ஐ. ஏ. எஸ். அல்லது ஐ.எ.ஃப்.எஸ்ஸைச் சேர்ந்தவர்களது அடிப்படைச்சம்ப ளம் ரூ. 350. 1922-ல் நான் முதலில் வேலையில் சேர்ந்த போது என்னுடைய சம்பளம் ரூ. 600. அப்போது வாங்கும் சக்தி இப்போதுள்ளதைப்போல நான்கு மடங்கு இருந்தது. கோபியின் வயதில் நான் திருப்பத் தூரில் சப்கலெக்டராக இருந்தேன். எங்கள் வீட்டில் சமையற்காரர், பட்லர், காரோட்டி, ஆயா, வீடு பெருக்குபவள், பங்கா இழுப்பவர் போன்று பல பணி யாட்கள் இருந்தனர். அதெல்லாம் அந்தக் காலம். ஆனாலும் நமது அதிகாரிகளுக்குப் பணத்தொல்லை இல்லாமல் இருந்தாலன்றி நிர்வாகத் திறமையும் ஒழுங்கும் பாதிக்கப்படவே செய்யும்.

koviloor Acadamy

பாபு லூவோஸ் இங்கு நம்முடைய கான்ஸல் ஜெனரல். இவ்வளவு சிறந்த ஒருவரிடம் கோபி பணியாற்ற நேர்ந்தது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். திருவாங்கூரிலுள்ள புகழ்பெற்ற சிரியன் கிறிஸ்தவக் குடும்பத்தைச் சேர்ந்தவர் அவர். அவருடைய தாயின் தந்தை இங்கிலாந்து சென்று வைத்தியப் பட்டம் பெற்ற முதல் இந்தியர்களில் ஒருவர். தாயும் அவரைப் பின்பற்றி முதல் இந்தியப் பெண் சர்ஜன் ஜெனரலாக இருந்தார். அவருடைய சகோதரியும் வைத்தியப் பட்டம் பெற்ருள். தூங்கும்போது தலை மயிர் மின்சார விசிறியில் மாட்டிக்கொள்ள விபத்துக்குள்ளாகி அவள் உயிர் துறந்தாள். அவள் அருகில் தூங்கிக்கொண்டிருந்த பாபுவின் மனைவியும் இந்த விபத்துக்குட்பட்டு அனேகமாக மரணத்தை எட்டிவிட்டாள். இன்னும் அவளுடைய வலது கன்னத்தில் மின்சார விசிறித் தகடு அடித்து ஏற்படுத்திய ஆழமான காயத்தின் வடு உள்ளது: உங்கள் அழகை வடு கூட்டியே காண்பிக்கிறது என்று கூறி அவளுக்கு ஆறுதல் சொன்னேன். தங்கள் முகத்தில் வடு இருக்கவேண்டும் என்பதற்காகப் பல ஆப்பிரிக்கப் பெண்கள் வேண்டுமென்றே தங்கள் முகத்தை வெட்டிக்கொள்கிருர்கள். மாஸ்கோவில் சூடான் தூதுவராக இருந்த உஸ்மானின் மனைவி இப்படித்தான் செய்துகொண்டுள்ளார்.

நாங்கள் வந்த மறுநாள் லூலோஸ் எங்களுக்கு தமது நேர்த்தியான புதிய வீட்டில் விருந்தளித்தார். மிகவும் கவனமுடன் விருந்தினர்களை அவர் தேர்ந்தெடுத்தார். அவர்களில் சிலர் என்னுடைய பழைய நண்பர்கள். ஆக்ஸ்போர்ட்டில் என்னுடன் படித்தவரும் அண்மையில் செகரடரி ஜெனரல் புதவியிலிருந்து ஒய்வு பெற்றவருமான ரத்தன் நேரு, ஜெனிவாவில்

koviloor Acadamy

இந்திய கான்சலேட் இல்லாதபோதே எல்லா இந்தியர் களுக்கும் தம் வீட்டில் இடமளித்த பெர்டோலி தம்பதி, அண்மையில் சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தி லிருந்து ஓய்வு பெற்றுள்ள ரகுநாத் ராவும் அவரது பிரெஞ்சு மனேவியும், தமது வாலிப வயதில் பெரும் பகுதியை நாடு கடத்தப்பட்டுக் கழித்த நானு நம்பி யார் போன்ருேர் வந்திருந்தனர். 1919ல் நாணு காதல் மணம் செய்துகொண்டார். பெற்ருேர் இதை ஒப்பாத தால் ஐரோப்பாவுக்குச் சென்றுவிட்ட அவர் அப்போது முதல் அங்கேயே தங்கிவிட்டார். அவருக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் பிரச்னேகளும் பலதரப்பட்டவை. ஹிட்லர் பதவிக்கு வந்ததும் ரீஷ்டாகை எரித்ததில் அவரும் சம்பந்தப்பட்டிருப்பதாகக் குற்றம் சாட்டி சிறையில் பல மாதங்கள் வைத்திருந்தார்கள். பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர் வெட்ஜ்வுட் பர்ம் தலேயிட்டதின் பேரில் அவர் விடுவிக்கப்பட்டார். ஆனுல் ஜெர்மனியை விட்டுப் போகவேண்டியிருந்தது. அவர் பிராகாவுக்குச் சென்ருர். அங்கு சமஸ்கிருத அறிஞரான பேராசிரியர் லெஸ்னி அவரைத் தம் மகன் போல நடத்திஞர். 1939ல் ஹிட்லர் செக்கோஸ்லாவா கியாமீது படையெடுத்தபோது அதை நம்பியார் நேரில் கண்டவர். எதிர்த்து ஒரு முறை கூடச் சுடாமல் செக்கோஸ்லாவாகியா ஹிட்லருக்கு அடிபணிந்ததும், ஜெர்மன் வீரர்கள் வந்த சில மணிநேரத்துக்குள் செக் பெண்கள் அவர்களுடன் நடனமாடியதும் அவருக்கு வேதனேயளிப்பதாக இருந்தது. செக்கோஸ்லாவாகியா விலிருந்து நாணு நடுநிலே நாடான போர்ச்சுகலுக்கு ஓடினுர். ஆனுல் பின்னர் ஜெர்மனிக்குத் திரும்பி சுபாஷ் சந்திரபோசுடன் சேர்ந்து அவருடைய முக்கிய துணேவராக இருந்தார். போர் முடிந்து இந்தியா விடுதலே பெற்றதும் பிரிட்டிஷ் இந்தியாவின் விரும்

koviloor Acadamy

பத்தகாத அரசியல் குற்றவாளிகள் ஜாபிதாவில் நம்பி யார் முதல் இடம் பெற்று இருந்தார். ஆயினும் ஜவாஹர்லால் நேரு அவரை நாட்டுக்குப் பணிபுரிய அழைத்தார். வெளிநாடுகளில் பல பதவிகளை வகித்த பிறகு 1959ல் ஜெர்மன் பெடரல் குடியரசில் நமது தூதுவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ருர். அவருக்கு பத்மபூஷண் பட்டமும் அளிக்கப்பட்டது. அப்போது முதல் ஜெனிவாவிலேயே வசித்துவரும் அவர் பத்திரி கைகளுக்கு எழுதி எளிய வாழ்வு வாழ்ந்து வருகிருர்.

ஜெனிவா, ஆகஸ்ட் 25

ஜெனிவாவ்லிருந்து இரண்டு இடங்களுக்குச் சென்ருேம். ஸ்விஸ் தேசியக் கண்காட்சியைக்காண லூஸேன் சென்ருேம். ஸ்விஸ் மக்களுடைய வாழ்க்கை முறையைக் காட்டும் பகுதி என்னைப் பெரிதும் கவர்ந்தது. பல்வேறு இனத்தைச் சேர்ந்த, நான்கு மொழிகளைப் பேசும் மக்கள் எவ்வாறு ஒரு நாட்டினராகச் சேர்ந்து தமக்கென தனி வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கிருர்கள் என்பதையறிய சுவாரஸ்யமாக இருந்தது. இரண்டு உலகப் போர்களிலும் சுற்றிலும் தீ பற்றி எரிந்து கொண்டிருக்கும்போது உறுதியாக நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்து படையெடுப்பிஞல் பாதிக்கப்படாத விதத்தில் ஸ்விட்ஸர்லாந்து தன்னைக் காத்துக்கொண்ட விதமும் போற்றத்தக்கதாகும். நடுநிலைமைக் கொள்கை ஒன்று மட்டுமே ஆக்கிரமிப்பிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் என்று ஸ்விஸ் மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. "நம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்ற உறுதியே நமது சுதந்திரத்தின் அஸ்திவாரமாகும்" என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்ட பலகை கண்காட்சியில் காணப்பட்டது. தற்காப்பு பற்றிய

koviloor Acadamy

தனிப்பிரிவும் கண்காட்சியில் இருந்தது. இந்தப் பகுதி மிகவும் நன்ருக இருப்பதாகக் கூறினர்கள். ஆனல் என்னுடைய காயமடைந்த கால் தொந்தரவு கொடுத்ததால் வீட்டுக்குத் திரும்பி நமது கான்ஸல் புருஷோத்தம் அளித்த விருந்தில் கலந்து கொண்டோம். அவர் மாஸ்கோவில் என்னிடம் பயிற்சி பெற்றவர்.

நேற்று ஜெனிவாவிலிருந்து 200 கி.மீ. தூரத்திலுள்ள மலை வாசஸ்தலமான சண்டோலின்னுக்குச் சென்ருேம். அங்கு சென்றது எல்லா மைலார்ட்டை சந்திப்பதற்காகும். அவர் பீட்டர் ஃப்ளமிங்குடன் 1935ல் சீனுவிலிருந்து இந்தியாவுக்கு தரை மார்க்கமாக பழைய யாத்ரீகர்கள் பாதையில். பிரயாணம் செய்தவர். எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நானும் இவ்வாறு செய்தேன். அதற்கு முன் எல்லா மத்திய ஆசியா முழுவதும் பிரயாணம் செய்திருக்கிருர். ரஷ்ய அதிகாரிகளுக்குத் தெரியாமல் இவ்வாறு செய்த அவர் அதுபற்றி ஒரு புத்தகமும் எழுதியிருக்கிருர். இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் இந்தியாவில் தங்கிய அவர் ரமண மஹரிஷியின் பால் கவரப்பட்டு இந்திய நாகரிகத்தை ஆராயத் தலைப்பட்டார். இப்போது தனிமையில் அவர் சண்டோலின்னில் வசிக்கிருர். அவருடைய வீட்டிலிருந்து பனிமுடிய சிகரம் கொண்ட மாட்டர்ஹார்ன் மலையின் அற்புதக் காட்சியைக் கண்டோம். ஆண்டுக்கு ஒரு முறை எல்லா ஒரு ஸ்விஸ் கோஷ்டியை இந்தியாவில் நேபாளத்திலிருந்து தெற்கே மதுரைவரை சுற்றுப் பயணம் செய்ய அழைத்துச் செல்கிருர்.

சண்டோலின்னில் எல்லா தமது பெரும் பகுதி நேரத்தை படிப்பதிலும் எழுதுவதிலும் தியானத்திலும்

koviloor Acadamy

கழிக்கிருர். நான் விரும்பிப் படிக்கும் நூல்களிலிருந்து அவர் படிக்கும் நூல்கள் முற்றிலும் வேருனவை. அவை ஆத்மீக நூல்கள்.

சின்னஞ்சிறு மலையடிவார கிராமமான சண்டோலின் வாழ்க்கை நாகரிகம் தோன்றியதால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக எல்லா கூறியது கேட்டு வருந்தினேன். கிராமத்தின் இளம் ஆண்களும் பெண்களும் நிலத்தைப் பயிரிடுவதிலோ, மாடுகளை வளர்ப்பதிலோ கவனம் செலுத்துவது இல்லை. நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. மக்கள் நகரங்களுக்குச் சென்று விட்டதால் கிராமத்தில் உள்ளவர்கள் தொகை நூற்றுக்கும் குறைவாகிவிட்டது. எஞ்சி யிருப்பவர்களுடைய ஒரே ஒரே இன்ப சாதனம் ஒயின் அருந்துவதுதான். "மனிதன் ஒருமுறை குடிக்கிருன். குடி ஒருமுறை குடிக்கிறது; குடி மனிதனைக் குடிக்கிறது" என்ற பழமொழிக்கேற்ப அவர்கள் குடித்துக் கொண்டேயிருக்கிருர்கள்.

எல்லாவும் நானும் ஜவாஹர்லால் நேரு பற்றிப் பேசினேம். அவரை அவள் நன்கறிவாள். அவள் இந்தியாவுக்கு அழைத்துச் சென்ற கோடீஸ்வரர்கள், நேரு அவர்களை விட்டுவிட்டு அவளை மட்டும் தம்முடன் தேநீர் அருந்த அழைத்துச் சென்றது குறித்து வியப்படைந்தனர். 1963 நவம்பர் 14-ந் தேதி அவருடைய கடைசி பிறந்த நாளன்று நடந்தது இது. சுமார் 200 பள்ளிக் குழந்தைகளுடன் கைகுலுக்கி விளையாடியபிறகு அவர் களைப்படைந்து காணப்பட்டார். மற்றபடி அவரிடம் சரியில்லாதது எதுவும் இல்லை.

மேகங்கள் விலகின. மாட்டர் ஹார்னை அதன் முழு அழகுடன் இப்போது கண்டோம். இந்தக்

koviloor Acadamy

காட்சியை ஜவாஹர்லால் எவ்வளவு நேசித்திருப்பார்? நேரு தமது சுய சரிதையில் எடுத்தாண்டுள்ள வால்டர் டி லா மரேயின் கவிதையை எல்லாவும் நானும் நினைவு படுத்திக் கொண்டோம். நேருவின் உள்ளத்தைப் பிரதிபலிப்பது அக்கவிதை.

koviloor Acadamy

4. பெல்கிரேட்

பெல்கிரேட், ஆகஸ்ட், 26

கடந்த மூன்று மாதங்களில் நாங்கள் மேற்கொண்ட பயணங்களில் நாங்கள் மகிழ்வுடன் அனுபவிக்காத ஒன்றே ஒன்று ஜெனிவாவிலிருந்து மூனிச்சுக்கு சென்றதுதான். ஜெட் விமானத்தில் சென்று பழக்கப்பட்டு விட்டதால் ஜெனிவாவிலிருந்து மூனிச்சுக்குச் சென்ற பழைய மாதிரி விமானம் மிகவும் மெதுவாகச் சென்றது. தாழ்வாகப் பறந்ததுடன் அவசியமில்லாமல் பேஸிலில் தங்கியது. ஆயினும் ஒரு ஆறுதல். மாண்ட் பிளாங்க், மாட்டர் ஹார்ன் ஆகியவற்றின் இனிய காட்சியைக் கண்டு ரசித்தோம். ஸ்வீஸ் மக்களுக்கு ஆல்ப்ஸ் மலே குறித்து ரொம்பவும் பெருமை. இன்னின்ன சிகரங்கள் பத்தாயிரம் அடிக்கு மேல் உயரமுள்ளவை என்று அவர்கள் பெருமையுடன் கூறும் போதெல்லாம் லூலோஸின் குழந்தைகளான மிலாவும் தம்பியும் தாங்கள் இதைவிட உயரமானவற்றைக் கண்டிருப்பதாகக் கூறுவார்கள்! ஏனெனில் அவர்கள் கடைசியாக இருந்தது எவரெஸ்ட் அடிவாரத்திலுள்ள காட்மாண்டுவில்.

மூனிச்சிலிருந்து பெல்கிரேடுக்கு யுகோஸ்லாவிய விமான மொன்றில் சென்ற நாங்கள் வழியில் ஜாக்ரெப்பில் தங்கினேம். இப்போது கிழக்கே இருக்கிறேம் என்ற உணர்வு பல வழிகளில் எங்களுக்கு ஏற்பட்டது. அங்குள்ள மலம் கழிக்கும் இடத்தைப் பார்த்தபோது அதனே உபயோகிப்பதே பாவம் என்று தோன்றியது. ஆனல் அதைப் பற்றிப் பேச நாம் யார் ?

koviloor Acadamy

யூகோஸ்லாவிய விமானத்திலுள்ள விமான மங்கையர் மேனாட்டு விமானங்களிலுள்ளவர்களைப் போல இல்லை. அவர்கள் வயதானவர்களாக இருந்தார்கள். எளிமையாகவும் அன்புடனும் நடந்துகொண்டார்கள். மகாராஜாக்களுக்குரிய பணிப்பெண்களாக இல்லாவிட்டாலும் தோழமையுணர்வுடன் பிரயாணிகளுடைய சௌகரியத்தைக் கவனித்தார்கள்.

பெல்கிரேடின் சூழ்நிலை மேனாடுகளுடையதிலிருந்து மாறானதாக இருந்ததுடன், மாஸ்கோவின் சூழ்நிலையிலிருந்தும் வேறுபட்டதாக இருந்தது. இங்கு கடைகள் ஞாயிறன்று மூடப்படுகின்றன. ஆனால் மாஸ்கோவில் கடைகள் ஞாயிறன்று திறந்திருக்கும். திங்கட்கிழமை மூடப்படும். ஓய்வு நாள் மனிதர்களுக்காக ஏற்பட்டது; மனிதர்கள் ஓய்வுநாளுக்காக ஏற்பட்டவர்களல்ல என்று கூறிய ஏசு கிறிஸ்துவால் ஒருவேளை ரஷ்யர்களுடைய நடத்தை அங்கீகரிக்கப்படக் கூடும். விடுமுறை நாளில் கடைக்குப் போய் வருவது மனிதர்களுக்கு, அதிலும் முக்கியமாகப் பெண்களுக்கு வசதியானது என்பது நிச்சயம். மத்திய கிழக்கில் போலவே பெல்கிரேடிலும் காரியாலய நேரம் காலை 7–30 முதல் மாலை 2 வரை உள்ளது. யூகோஸ்லாவியர் காலையில் சேர்ந்தாற்போல் வேலை செய்துவிட்டு மாலையில் ஓய்வெடுத்துக் கொள்கின்றனர். இத்துறையிலும் பெல்கிரேட் மாஸ்கோவிலிருந்து வேறுபட்டது. மாஸ்கோவில், ஸ்டாலின் காலத்தில் காரியாலயங்கள் நடுப்பகலில் தொடங்கி இரவு வெகு நேரம் வரை வேலை செய்யும். காலை 9 முதல் மாலை 5 வரை என்ற மேனாட்டு வேலை நேரத்தை மாஸ்கோ கடைப்பிடிக்கவில்லை.

பெல்கிரேடிலுள்ள கடைகளின் பெயர்ப்பலகைகள் சில ஸ்லாவ் எழுத்திலும் வேறு சில லத்தீன் எழுத்-

koviloor Acadamy

திலும் இருப்பதைக் கவனித்தேன். கிழக்குக்கும் மேற்குக்கும் இணைப்பாக யூகோஸ்லாவியா இருப்பதற் கேற்ப இது இருந்தது. மாஸ்கோவில் எல்லாம் ஸ்லாவ் எழுத்திலேயே இருக்கும். மாஸ்கோவில் எனக்கு உதவி யாளராக இருந்த குண்டேவியா 1952ல் நான் அங்கு வந்ததுமே "PECTOPAH" என்பதை "RESTORAN" என்று உச்சரிக்க வேண்டும் என்றும் அதற்கு "RESTAURANT" என்று அர்த்தம் என்றும் கூறினார். 1955ல் ஜவாஹர்லால் நேரு சோவியத் யூனியனில் சுற்றுப் பிரயாணம் செய்த போது நாடு முழுவதும் காணப்பட்ட வரவேற்பு வாசகங்களில் "HEPY" என்ற வார்த்தை இருந்தது. இந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று என். ஆர். பிள்ளை என்னிடம் கேட் டார். எங்களுக்கருகில் நின்று கொண்டிருந்த நேரு லேசாகச் சிரித்தார். ஸ்லாவ் நெடுங்கணக்கில் H, P, Y ஆகிய எழுத்துக்கள் முறையே N, R, U வைக் குறிக்கின்றன என்று அறியும் அளவுக்கு ரஷ்ய மொழி தெரியும் அவருக்கு. எனவே HEPY என்றால் NERU.

இங்கு அருமையான இடத்தில் நமது தூதரகம் உள்ளது. அருமையான தோட்டமும் இருக்கிறது. செர்பியாவின் ஜனாதிபதியாக இருந்த பாஸிக்கின் மகனால் உல்லாச மாளிகையாக உபயோகிக்கப்பட்டு வந்த கட்டிடம் இது. அவருடைய காலத்தில் தான் ஸராஜிவோவில் குண்டு வெடிக்கப்பட்டு அதன் விளை வாக 200லட்சம் பேர் உயிர் துறக்கவும் ஜெர்மன், ரஷ்யன், ஒட்டமன், ஆஸ்ட்ரோ ஹங்கேரியன் ஆகிய நான்கு மாபெரும் வம்சங்கள் சிர்குலையவும் வழியேற் பட்டது. அந்தக் குண்டை வெடித்தவனை யூகோஸ் லாவியர் தங்கள் விடுதலை வீரன் என்று போற்று கின்றனர்.

நமது தூதுவர் டாம் மணியின் விருந்தினராக இங்கு தங்கியிருக்கிறேன். அவர் இப்போது இங்கு இல்லை. சிகிச்சை பெற்று வருகிறார். ஜாக்ரெப்பில் நடைபெறும் தேசீய விழாவொன்றுக்கு விரைவில் அவர் செல்லவேண்டும். அங்குள்ள இந்தியப் பகுதி மிகச் சிறந்தவற்றுள் ஒன்று எனப்புகழ் பெற்றுள்ளது. பிறகு கிரீஸ் மன்னரின் திருமணத்துக்காக ஏதன்ஸ் போகவேண்டும். அதன் பின்னர் கூட்டுசேராத நாடுகளின் மாநாட்டுக்குக் கெய்ரோ செல்லவேண்டும். தூதுவர் வேலை என்பது ஒன்றும் எளிதானதல்ல தான்.

டாம் இல்லாத போதிலும் எங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார். அவருடைய வீடு, சிப்பந்திகள், சொந்தக் கார், காரோட்டி ஆகிய எல்லாவற்றையும் என் இஷ்டம் போல் உபயோகித்துக் கொள்ளலாம் என்று எனக்கு எழுதியிருந்தார். அவருடைய காரியதரிசி ஓம்பிரகாஷுக்கும் அவருடைய மனைவிக்கும் யூகோஸ்லாவியாவைப் பற்றி நன்கு தெரியுமென்றும் என்னை நல்ல முறையில் கவனித்துக் கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார். முட்லு, கலீல் ஆகிய இரு இந்தியப் பணியாட்களும் தம்முடன் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருவதாகவும் அவர்கள் முற்றிலும் நம்பகமானவர்கள் என்றும் கூறியிருந்தார். யூகோஸ்லாவ் பணிப்பெண் வீட்டுவேலைகளைச் செய்வாள்; தூதரகம் ஏற்பட்டதிலிருந்தே அதன் காரோட்டியாக இருந்து வரும் அஸிம் உயர்வான மனிதன். வழிகாட்டியாக இருந்து உதவுவான் என்றும் எழுதியிருந்தார்.

அஸிம் எனக்கு வழிகாட்டியாக மட்டுமல்ல. நண்பனும் நல்லாசானுமாகவும் ஆகிவிட்டான். அவன்

koviloor Acadamy

பெயரைக் கேட்டதும் தயக்கத்துடன் அவன் முஸ்லீமா என்று கேட்டேன். ஆமாம் என்ருன். அவன் பாஸ்னியாவைச் சேர்ந்தவன். அங்குள்ளவர்களில் பெரும் பகுதி முஸ்லீம்கள். ஆயினும் அவனுக்கு குரான் வகித்துள்ள கடமைகளை நிறைவேற்ற அவகாசம் இல்லை. மசூதிக்குப் போவதோ, நாள்தோறும் ஐந்து முறை தொழுவதோ இல்லை. "மசூதிக்கோ, சர்ச்சுக்கோ ஒழுங்காகப் போய்வருபவர்கள் சிலரை எனக்குத் தெரியும். உங்களைப் பார்த்து சிரித்துக்கொண்டே இருப்பார்கள். சமயத்தில் முதுகில் குத்தி விடுவார்கள்" என்ருன். "அவர்களால் என்ன பிரயோசனம்? கடமையை நன்கு செய்யவேண்டும். யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது. முடிந்த அளவு பிறருக்கு நன்மை செய்யவேண்டும். இதுதான் என்னுடைய மதம்" என்ருன்.

மதத்தைப்பற்றிய அஸிமுடைய கருத்து உடனே எங்களிருவரிடையேயும் பிணைப்பை ஏற்படுத்திவிட்டது. உணர்ச்சி மிகுந்தவன் என்பதையும் கண்டுகொண்டேன். யூகோஸ்லாவியாவில் நமது முதல் தூதுவராக இருந்த ராஜேஸ்வர் தயாளிடம் அவனுக்குள்ள மதிப்பு பக்தியாகவே மாறிவிட்டது. ராஜேஸ்வர் பெல்கிரேடைவிட்டுப் போகும்போது தான் கண்ணீர் விட்டதுபோல தன்னுடைய தாயார் இறந்தபோதும் கூட விடவில்லை என்று சொன்னுன். ஐரோப்பாவில் எங்காவது அவர் அனுப்பப்பட்டால் சம்பளம்கூட வாங்கிக்கொள்ளாமல் அவருக்குச் சேவை செய்யத் தயாராக இருப்பதாகவும், தனக்கு உணவு மட்டும் போட்டால் போதுமென்றும் கூறினுன்.

அஸிமைவிடச் சிறந்த வழிகாட்டி எங்களுக்குக் கிடைத்திருக்க முடியாது. பெல்கிரேடிலும் அதைச் சுற்றிலும் நடைபெறும் புதிய கட்டிட வேலைகள்

koviloor Acadamy

யாவற்றையும் அவன் உற்சாகத்துடன் எங்களுக்குக் காட்டினன். விமான நிலையத்திலிருந்து பழைய நகருக்குப் போகும் வழியில் புது பெல்கிரேட் எனப் படும் புதிய பகுதியே எழுந்துள்ளது. டான்யூபும் சாவா நதியும் சேருமிடத்தில் கண்கவர் சூழ்நிலையில் இது அமைந்துள்ளது. புது பெல்கிரேடில் பல மாடிக் கட்டிடங்கள் நிறையவுள்ளன. இவற்றில் எல்லாம் மிக உயரமானது 24 மாடிகள் கொண்டது. கட்டப் பட்டு வரும் இது கட்சியின் தலைமைக் காரியாலயத் துக்கு ஆகும்.

முன்பு காடாக இருந்த பெல்கிரேடின் மற்றெரு பகுதியில் இப்போது கோல்.:.ப் விளையாட்டு மைதா னம் உள்ளது. யூகோஸ்லாவியாவுக்கு இது புதிய விளையாட்டு என்ற போதிலும் அவர்கள் இதில் நன்கு தேர்ச்சியடைந்துள்ளனர். கோடை காலக் குழந்தைகள் முகாம், ஒரு சினிமா ஸ்டுடியோ, ராணுவக் கழகம் ஆகியவையும் இங்கு உள்ளன. யூகோஸ்லாவிய ராணுவம் மக்கள் ராணுவம். அதற்கு மக்களுடன் தொடர்பு உள்ளது என்று நமது தூதரக ராணுவ அதிகாரி கர்னல் சென் கூறினர்.

நகரத்திலும் கூட பழைய கட்டிடங்கள் இடிக்கப் படுகின்றன. அல்லது புதுப்பிக்கப் படுகின்றன. 65,000 பேருக்கு இடமிருந்த பழைய ஸ்டேடியம் இருந்த இடத்தில் 125,000 பேருக்கு இடமளிக்கும் புதிய ஸ்டேடியம் கட்டப்பட்டு வருகிறது. நேரு வந்த போது தங்கியிருந்த யூகோஸ்லாவிய மன்னர்களின் அரண்மனைக்கு அருகில் ஒரு புதிய கம்பீரமான ''வெள்ளை அரண்மனை'' எழுந்துள்ளது. எல்லாவற்றை யும்விட சிறப்பாக அமைந்துள்ளது பெல்கிரேடி லிருந்து 20 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள ஒரு

koviloor Acadamy

குன்றின்மீது "பெயர் தெரியாத போர் வீரனுக்கு' எழுப்பப்பட்டுள்ள நினைவச் சின்னமாகும். மெஸ்ட்ரோவிக் என்ற மாபெரும் சிற்பியால் நிர்மாணிக்கப்பட்டது அது. நாட்டின் ஆறு முக்கிய பகுதிகளான செர்பியா, ஸ்லோவனியா, குரோஷியா, மான்டிநிக்ரோ, மாஸிடோனியா, பாஸ்னியா ஆகியவற்றின் பிரதிநிதிகளாக சலவைக் கல்லில் அமைந்த ஆறு கம்பீரமான பெண்கள் கல்லறையைப் பாதுகாக்கின்றனர். ஒவ்வொரு உருவமும் 12 அடி உயரமும் 15 டன் எடையும் கொண்டது. இதற்கான சலவைக் கல் "என்னுடைய நாடு" பாஸ்னியாவிலிருந்து வந்தது என்று அஸிம் பெருமையுடன் கூறினார்.

பெல்கிரேட், ஆகஸ்ட், 27

என்னுடைய பெல்கிரேட் விஜயம் மிகவும் குறுகியதாக இருந்தபோதிலும் யூகோஸ்லாவிய மக்களிடம் எனக்குள்ள மதிப்பை மேலும் உறுதிப்படுத்தியது. ஸ்டாலினுடைய இறுதி ஆண்டுகளிலும் அதன் பின்னரும் சோவியத் - யூகோஸ்லாவிய உறவில் ஏற்பட்ட பல்வேறு மாறுபாடுகளைக் கண்ணாரக் கண்டு வந்திருக்கிறேன். ஜனாதிபதி டிட்டோ ஸ்டாலினையும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களையும் கடைசியாகச் சீனர்களையும் சமாளித்த விதத்தைப் பெருமையுடன் கவனித்து வந்திருக்கிறேன். ஸ்டாலினுடைய மறைவுக்குப் பின்னர் இரு நாடுகளுக்கு மிடையே நட்புறவை மீண்டும் ஏற்படுத்துவதில் குருஷ்சாவ் காட்டிய ஆர்வத்தையும் அதே அளவுக்குப் பாராட்டியிருக்கிறேன். 1954-ல் யூகோஸ்லாவ்யாவுக்குப் புறப்படுமுன்பு குருஷ்சாவ் என்னிடம் கூறிய வார்த்தைகளை இங்கு குறிப்பிடுகிறேன். "ஒருவருக்கு தீங்கு செய்தால் அவர் வழக்கு மன்றத்துக்குப் போய் பரிகாரம் தேட

koviloor Acadamy

லாம். ஆனல் மனக்கசப்பு இருக்கவே செய்யும். தீங்கு செய்தவன், தீங்கிழைக்கப்பட்டவரிடம் சென்று மன்னிப்புக் கேட்பதுதான் சரியான காரியம்.'' குருஷ்சாவ் செய்ததும் அதுவேதான். இந்த சம்பாஷணை குறித்து என்னுடன் விருந்துண்ட இரு சீமாட்டிகளிடம் கூறினேன். குருஷ்சாவ் தாம் நடந்துகொண்ட முறையில் பெரும் தைரியத்தைக் காட்டியதாக அவர்கள் கூறினர்.

இந்த சீமாட்டிகளில் ஒருவரான உவலிக் இந்தியாவிலுள்ள யூகோஸ்லாவியாத் தூதுவரின் மனைவியாவார். கோடையைக் கழிக்க இங்கு வந்துள்ள அவர், இந்தியா சம்பந்தப்பட்ட எல்லாவற்றையுமே தாம் நேசிப்பதாகவும், டில்லியின் புழுதிக்காற்றைக் கூடத் தாம் விரும்புவதாகவும் கூறினர். மற்ருெரு சீமாட்டியான ஓர்ஸ்கானின் முன்பு மாஸ்கோவில் இருந்தவரும் இப்போது வாஷிங்டனில் தூதுவராக உள்ளவருமான மிகுனேவிக்கின் மைத்துனி. சர்வதேச அரசியல், பொருளாதாரக் கழகத்தில் பட்டம் பெற்ற அவர் தெற்கு-கிழக்காசியாவை விசேஷமாக ஆராய்ந்து வருகிருர். அண்மையில் சீன வெளிநாட்டுக் கொள்கை பற்றி அவர் ஒரு விமரிசனக் கட்டுரை எழுதினுர். விரைவில் இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பானுக்குச் செல்லவிருக்கும் அவர் அதற்கென இப்போதுதான் நோய் தடுப்பு ஊசி போட்டுக்கொண்டிருக்கிருர். அதன் விளைவாகக் காய்ச்சல் இருந்தபோதும் அவரும் உவலிக்கும் கலமிக்டானில் உள்ள வரலாற்றுப் பொருட்காட்சிக்கு அனுஜியுடன் வந்தனர். யூகோஸ்லாவியா மீது துருக்கி நான்கு நூற்ருண்டுகளுக்கு ஆதிக்கம் செலுத்திவந்த பழைய துருக்கிக் கோட்டை இது.

koviloor Acadamy

மாஸ்கோவில் என்னுடைய பிரிட்டிஷ் சகாவாக இருந்த சர். வில்லியம் ஹேய்டர் வல்லரசுகளான பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகியவை கையாளும் பல்வேறு விதமான ராஜதந்திரம் குறித்து ஒரு புத்தகம் எழுதியுள்ளார். யூகோஸ்லாவியா, இந்தியா போன்ற சில புதிதாக சுதந்திரம் அடைந்த நாடுகளின் பிரதிநிதிகள் குறிப்பிட்டுச் சொல்லும் விதத்தில் ராஜதந்திரத்தைப் புலப்படுத்தியுள்ளதாக அவர் கூறியுள்ளார். மாஸ்கோவில் நான் அறிந்த விடிக், மாய்ஸிவ், மிகுனேவிக் ஆகிய மூன்று யூகோஸ்லாவிய தூதுவர்கள் விஷயத்தில் இது முற்றிலும் உண்மை. விடிக் ஸெர்பியாவைச் சேர்ந்தவர். மாய்ஸீவ் மாஸிடோனியாவையும், மிகுனேவிக் மான்டினிக்ரோவையும் சேர்ந்தவர். போருக்குப் பின்னர் இந்த வெவ்வேறு இன மக்களை ஒரு நாட்டினராக யூகோஸ்லாவியா ஒருமைப்படுத்தியிருக்கும் முறை போற்றத்தக்கதாகும். மிகுனேவிக்கை நான் வாஷிங்டனில் சந்தித்துப் பேசினேன். "போர்பா" என்ற முக்கியமான பத்திரிகையில் ஆசிரியராக இப்போது இருக்கும் மாய்ஸீவையும் சந்திக்கவே விரும்பினேன். ஆனல் ஹிரோஷிமாவில் ஒரு மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு இந்தியா வழியே யூகோஸ்லாவியாவுக்கு இப்போதுதான் வந்து கொண்டிருக்கிறார். யூகோஸ்லாவின் 'சோஷலிஸ்ட் அல்லயன்ஸ்'ஸின் காரியதரிசியாக விடிக் இருக்கிறார். நான் அவரைச் சென்று பார்த்து அவருடன் ஒரு மணி நேரத்தைக் கழித்தேன்.

யூகோஸ்லாவியாவின் சோஷியலிஸ்ட் அல்லயன்ஸை இந்தியாவின் காங்கிரஸ் கட்சியுடன் ஒப்பிடலாம் என்று விடிக் கூறினர். கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து அது தனியானது; பரவலானது. கம்யூனிஸ்ட் கட்சியில் 12 லட்சம் அங்கத்தினர்களே உள்ளனர்.

koviloor Acadamy

சோஷலிஸ்ட் அல்லயன்ஸில் 70 லட்சம் பேர் உள்ளனர். கம்யூனிஸ்டுகள் தவிர அதில் தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள் போன்றவையும் அங்கம் வகிக்கின்றன. இந்தியாவின் லட்சியம் சோஷலிஸ பாணி சமுதாயம் என்று அறிவித்த ஆவடி காங்கிரஸ் மாநாட்டுக்கு டிட்டோ விஜயம் செய்து கௌரவப் படுத்திய நேர்த்தியை நினைவுபடுத்திக் கொண்டேன்.

அமெரிக்காவில் எழுந்துள்ள சில குழப்பமான போக்குக் குறித்து நானும் விடிக்கும் பேசினோம். இச் சந்தர்ப்பத்தில் கெய்ரோவில் நடைபெறவிருக்கும் கூட்டு சேராத நாடுகளின் மாநாடு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தது என்று விடிக் கருதினார். கூட்டு சேராத நாடுகள் அனைத்தினுடைய ராணுவ பலமும் சேர்ந்தாலும் அது ஒன்றும் பெரியதல்லதான். ஆனால் சர்வதேச விவகாரங்களில் அது ஒரு தார்மீக பலமாக இருக்க முடியும்.

அமெரிக்கப் பொதுமக்களின் போக்குக் குறித்து தமது ஐயத்தைத் தெரிவித்த மற்றொருவர் சிலி தூதுவரான ஸோரனோ. இவர் ஒனபது ஆண்டு காலம் இந்தியாவில் தூதுவராக இருந்தவர். ஜவாஹர்லால் நேருவின் மறைவுச் செய்தியைக் கேட்டதும், தம்முடைய அரசாங்கத்தின் அனுமதிக்குக் காத்திராமல் விமானத்தில் இந்தியாவுக்குச் சென்று சவ அடக்கத்தில் கலந்து கொண்டவர். இந்திய உடைகளையணிந்து வெறுங்காலுடன் அவர் சவ ஊர்வலத்தில் சென்றதாகக் கேள்விப்பட்டேன். செப்டம்பர் 4ந் தேதி நடக்க இருக்கும் சிலி ஜனாதிபதி தேர்தல் குறித்து ஸோரனோ பெரிதும் கவலை கொண்டிருப்பது போலத் தோன்றியது. அபேட்சகர்கள் இருவருமே இடது சாரிகள். இது அமெரிக்காவுக்குத் திருப்தியளிப்பதாக

koviloor Acadamy

இருக்க முடியாது. இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையே யுள்ள எல்லைப் பிரச்னை போலவே சிலிக்கும் அர்ஜெண்டைனுவுக்குமிடையே இருப்பதாக அவர் கூறினுர். கென்னடிக்கு நேர்ந்த துயர முடிவு குறித்து நாங்கள் இருவருமே வருந்திஞேம். "அவரைக் கொன்றது யார்?" என்று கேட்டார் ஸோரஞே. இப்போது கோல்ட் வாட்டருக்கு ஆதரவு வளர்ந்து வருகிறது. ஜான்ஸன் ஜெயிக்கலாம் என்று பேசப்படுகிறதே தவிர நிச்சயமாக வெற்றி பெறுவார் என்று கூறப்பட வில்லை. கோல்ட் வாட்டர் அபேட்சகராக நியமிக்கப் பட்டது குறித்து திருப்தி தெரிவித்துள்ள ஒரே வெளி நாடு சீனுதான் என்பது முக்கியத்துவம் வாய்ந்தது. ஒருபுறத்தில் சீனுவும் மறுபுறத்தில் கோல்ட்வாட்டரின் அமெரிக்காவும் இருந்தால் எது வேண்டுமானுலும் நடக்கலாம்.

சென்ற வாரம் நான் லுஸானில் நடைபெறும் ஸ்விஸ் தேசியக் கண்காட்சிக்குச் சென்றபோது ஸ்விஸ் மக்கள் கூறியதை ஸோரஞேவிடம் சொன்னேன். 1914 கோடையில் நடைபெறற அவர்களது முதலாவது தேசியக் கண்காட்சியைத் தொடர்ந்து முதல் உலகப் போர் ஏற்பட்டது. 1939ல் இரண்டாவது கண்காட் சிக்குப் பின்னர் இரண்டாவது உலகப் போர் ஏற் பட்டது. இப்போது நடைபெறும் மூன்ருவது கண் காட்சியைத் தொடர்ந்து என்ன நடக்கும்? "ஆண்டவனே அறிவார். இருபத்தைந்து வருடங் களுக்கொருமுறை ஐரோப்பாவில் போர் ஏற்படுகிறது" என்ருர் ஸோரஞே. 1965ம் ஆண்டு முக்கியமான வருடமாக இருக்கும். ஏசு கிறிஸ்துவின் பிறப்பைப் போல ஒரு புதிய காலகட்டத்துக்கு அது தொடக்க மாக இருக்கும் என்று டாக்டர் ஜங் கூறியுள்ளார்.

koviloor Acadamy

எப்படியோ எங்கள் பேச்சு ரெய்ஹாணு தயாப்ஜி பற்றி திரும்பியது. மனேசக்தி படைத்த அவரை ஸோரனேவும் அறிவார். ஒருமுறை ஆர்தர் கோஸ்லரை அவரிடம் அழைத்துச் சென்ருர். கோஸ்லரைப் பற்றி அவள் கேள்விப்பட்டது கூட இல்லை. கோஸ்லரின் கையை ஆராய்ந்துவிட்டு அவர் போன பிறப்பில் ராணுவப் புரோகிதராக இருந்ததாகவும், இப்பிறப்பிலும் அவ்வாறே இருப்பது நல்லது என்பதில் ஐயமில்லை என்றும் கூறினர்.

சென்ற மார்ச் மாதம் அனுஜி, ரெய்ஹாணுவைப் பார்க்சப் போயிருந்தபோது எங்கள் உலகப் பயணத் திட்டம் பற்றிக் கூறினுள். எப்போது திரும்புவீர்கள் என்று கேட்டதற்கு அக்டோபரில் என்று பதிலளித்தாள். “அக்டோபருக்கு மேல் தாமதிக்க வேண்டாம். ஏனெனில் அக்டோபர் மத்தியிலிருந்து ஐரோப்பாவுக்குக் கெட்ட காலம்” என்று ரெய்ஹாணு கூறினுள்.

எதிர்காலம் குறித்து அவநம்பிக்கையுடன் நானும் ஸோரனேவும் ஏன் பேசினேம் என்பது தெரியாது. அது ஒரு மனநிலையைப் பிரதிபலித்தது. ஏனெனில் எங்கள் இருவரில் யாரும் ஜங்கும் ரெய்ஹாணுவும் சைப்ரஸும் கியூபாவும், கோல்ட்வாட்டரும் மாஸேதுங்கும் இருந்த போதிலும்கூட உலகம் அழிவின் எல்லையில் இருப்பதாக நம்பவில்லை.

koviloor Acadamy

5. புடாபெஸ்ட்

புடாபெஸ்ட், ஆகஸ்ட், 29

ஓ ' பிரகாஷ் எங்களைத் தம்முடைய காரில் பெல்க்ரேடிலிருந்து புடாபெஸ்டுக்கு—400 கி.மீ. தூரம்—அழைத்துச் சென்றார். அவரும் அவருடைய மனைவி சாவித்திரியும் பொருத்தமான ஜோடி. இருவரும் மாற்றி மாற்றிக் காரோட்டினர். இந்தப் பிரயாணத்தில் எங்களை எதிர்ப்பட்ட ஒரே பெண் காரோட்டி சாவித்திரிதான். அமெரிக்காவில் ஆண்களைவிட அதிகமாகப் பெண்கள் காரோட்டுகின்றனர். சாவித்திரி புதிதாகக் கற்றுக் கொண்டவர் என்றபோதிலும் மிக நன்றாகவும் கவனமாகவும் காரை ஓட்டினார். ஒரு பெரியவருக்கு பக்கத்தில் உட்கார்ந்திருப்பதால் சற்று நடுக்கமாக இருப்பதாக அவர் கூறினார். வயதாகிவிட்டவரை பெரியவர் என்று மதிக்கிறார்களேயன்றி மனிதராகக் கருதுவது இல்லை என்பது வாழ்வின் சோக நிலையாகும்.

பெல்கிரேடிலிருந்து புடாபெஸ்டுக்குச் சென்ற பயணம் ஒன்றும் சுவாரஸ்யமாக இல்லை. ஆடோபானில் சென்ற பெருமிதமோ ரைன்லந்தில் சென்ற அழகோ அதில் இல்லை. இங்கு கிராமப் புறங்கள் சமவெளியாகவும் ஒரே மாதிரியாகவும் உள்ளது. பயிர்களும் அப்படித்தான். எங்கு பார்த்தாலும் சோளமும் சூரியகாந்தியும் முலாம் பழமும் தான். எப்போதாவது ஒரு திராட்சைத் தோட்டம் தென்படும். அவ்வளவு தான் யூகோஸ்லாவிய எல்லையில் நினைவில் தங்கும் காட்சி டான்யூப் நதி நெளிந்து செல்வதுதான்

koviloor Acadamy

ஹங்கேரிய எல்லையில் பாலிக்கிலுள்ள ஏரி ஒன்றுதான் அழகாக இருந்தது. அங்கு சிற்றுண்டி அருந்தினோம். நீச்சல் உடையுடன் அந்தப் பக்கமாகப் போன பெண்களைப் பார்த்து அனுஜியும் சாவித்திரியும் "இதைக் கூட அணியா விட்டால் தான் என்ன?" என்று வியந்தனர்.

ஹங்கேரியப்பகுதி யூகோஸ்லாவியாப் பகுதியை விட வளமிக்கதாகத் தோன்றியது. போக்கு வரத்து அதிகமாக இருந்தது. பயிர்களும் செழிப்பாக வளர்ந்திருந்தன. சோளத் தட்டைகள் உயரமாகவும் சூரிய காந்திப்பூ பளிச்சென்றும் இருந்தது. கெச்சேமெட், ஸ்ஸெகட், கிஞன்பெலிகிஹாஸா போன்ற உச்சரிக்க முடியாத பெயருள்ள நகரங்கள் அதிக வளமையாக இருந்தன.

ஹங்கேரிக்குள் நுழையும் வரை இந்நாட்டிடம் எனக்கு இவ்வளவு ஆழ்ந்த பற்று இருப்பதை உணரவில்லை. பல நூற்றுண்டுகளாக இந்நாட்டுக்கு நேர்ந்த கதியைப் பற்றி எண்ணியபோது துக்கம் தொண்டையை அடைத்தது. இங்கிலாந்தில் உள்ள மக்கள் தொகையைக் கொண்ட இந்நாடு மத்திய காலத்தில் அதைவிட அதிகப் பலமுள்ளதாக இருந்தது. பத்தாண்டுக் காலத்தில் நான் காண நேர்ந்த மாறுதல்களைப் பற்றியும் எண்ணினேன். ராகோஸி ஆட்சியின் பயங்கரம், 1956ம் ஆண்டுப் புரட்சி, அது அடக்கப்பட்டது, ஜானேஸ் காடர் தலைமையில் ஹங்கேரி புத்துயிர் பெற்றது ஆகிய எல்லாம் என் நினைவுக்கு வந்தன. ஹாப்ஸ்பர்க், பிரஷ்யன், ரஷ்யன், ஒட்டமன் சாம்ராஜ்யங்களுக்கு நடுவே ஹங்கேரி ஒரு தனி நாடாகப் பிழைத்திருந்தது பேரதிசயமேயாகும்.

koviloor Acadamy

நாங்கள் முதலில் சந்தித்த மனிதர் ஹங்கேரிய மக்களின் உணர்வுக்குச் சின்னமாக விளங்கும் ஜோல்டன் கோடாலி. இன்று உலகில் வாழும் மாபெரும் இசை மேதைகளில் இவர் ஒருவர். அதே சமயத்தில் அவருடைய ஒவ்வொரு மூச்சிலும் ஹங்கேரியனாகத் திகழ்ந்தார். இருபத்தைந்து வயதான அவருடைய அழகு மனைவி அவரிடம் மாணவியாக இருந்தவள். 82 வயதான அவர் உடல் நிலை பற்றிக் கேட்ட என்னிடம் வயோதிகத்துக்கு இயல்பான நோயினால் தாம் வருந்துவதாகக் கூறினார். "இந்தியாவில் 82 வயது என்பது அதிகமாக இருக்கலாம். ஆனால் ஐரோப்பாவில் அப்படி இல்லை" என்றேன். "அதுசரி. ஆனால் கடந்த பத்து ஆண்டுகளில் நாங்கள் வாழ்ந்த விதத்தை எண்ணிப்பார்க்க வேண்டாமா? இந்தியாவிலே உங்களுக்கு யோகாசனம் இருக்கிறது. ஒரு வேளை நான் அதை மேற்கொள்ள வயதாகி இருக்கலாம்" என்றார். ஒரு புத்தகத்தின் உதவியுடன் யோகாசனம பயில தான் முயன்று கொண்டிருப்பதாகவும் அது மிகவும் சுவாரஸ்யமாக இருப்பதாகவும் அவருடைய மனைவி கூறினாள். ஜவாஹர்லால் நேரு யோகாசனம்செய்வது உண்டென்றும், சிரஸாசனத்தை அவர் பெரிதும் விரும்பியதாகவும் கூறினேன். கோடாலிககு நன்கு தெரிந்தவரும் ஹங்கேரிக்கு விரைவில் வர விருப்பவருமான யஹூதி மெனுஹின் யோகாசனம் செய்யும் பழக்கம் உள்ளவர்.

1956 புரட்சியின் உச்சகட்டத்தில் ஆஸ்திரியாவுக்கு உள்ளது போன்ற ஸ்தானத்தைப் பெற முயன்ற சோஷலிஸ்ட் தலைவரான பிபோ அண்மையில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டதாயும் அவர் இப்போது அடக்கமான லைப்ரரியன் பதவியை ஏற்றி

koviloor Acadamy

ருப்பதாகவும் கோடாலியிடமிருந்து அறிந்தேன். புகழ் பெற்ற எழுத்தாளரான டிபோர் டெரியும் விடுதலை செய்யப்பட்டு விட்டார். புரட்சியின்போது அமெரிக்க தூதரகத்தில் அடைக்கலம் புகுந்து இன்றும் அங்கே வசித்துக் கொண்டிருக்கும் கார்டினல் மிண்ட்ஜெண்டி பற்றியும் பேசினோம். அந்த இடத்தை விட்டு அவர் போக மாட்டார். ரொம்பவும் உறுதியானவர். போப் சொன்னால் கூடக் கேட்க மாட்டார் என்றார் கோடாலி. போப் அவரை வாடிகனுக்கு வருமாறு அழைத்தார்; ஹங்கேரியும் அவரைப் போகவிடத் தயாராக இருந்தது. ஆனால் அவரோ எஸ்டர்காம் திரும்பி தாம் ஹங்கேரியின் கார்டினலாக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்.

ஹங்கேரியப் புரட்சியின் இரண்டாவது கட்டத்துக்கான முக்கிய பொறுப்பை கார்டினல் மிண்ட் ஜெண்டி மீது சுமத்துகிறார் கோடாலி. முதல் கட்டத்தில் ரஷ்யர்கள் பொறுமையுடன் நடந்து கொண்டனர். புடாபெஸ்டிலிருந்து தங்கள் துருப்புகளை வாபஸ் பெற்றுக் கொள்ளவும், ஹங்கேரி முழுவதிலுமிருந்து வாபஸ் பெறப் பேச்சு வார்த்தை நடத்தவும் கூட அவர்கள் தயாராக இருந்தனர். அப்போது கார்டினல் மிண்ட் ஜெண்டி முன்வந்து புண்படுத்திக் கோபத்தைத் தூண்டி விடக்கூடிய பலவற்றைக் கூறினார். "எனக்கு பக்தி நிறைந்த ஒரு குடும்பத்தைத் தெரியும். கார்டினல் மிண்ட் ஜெண்டி ரேடியோவில் தமது பேச்சைத் தொடங்கும் போது குடும்பத்தார் அனைவரும் முழந்தாளிட்டமர்ந்து கேட்பார்கள். சர்ச்சுக்கு சொந்தமானது எல்லாம் திரும்ப சர்ச்சுக்கே கிடைக்க வேண்டும்—பல லட்சம் ஏக்கர் நிலங்கள்—என்று அவர் கோரியபோது அவர்கள் வெறுப்படைந்து ஒருவர் பின் ஒருவராக எழுந்து விட்டனர்" என்றாள் திருமதி

koviloor Acadamy

'சோடாலி. "உள்ளே புகுந்து புரட்சியை நசுக்குவதற்கு ஒரு சாக்கு வேண்டுமென்பதற்காக ரஷ்யர்கள் மிண்ட் ஜெண்டிககு லஞ்சம் கொடுத்திருக்க வேண்டும் என்று சில சமயங்களில் எண்ணுவேன்" என்ருர் கோடாலி.

பெர்லினில் நடைபெறும் ஓர் இசைவிழா பற்றி அவர் பேசினர். பெர்லின் இன்னும் இரண்டாகப் பிளவு பட்டிருப்பது பெரிதும் வருத்தமளிக்கிறது என்ருர். இரண்டு வாரங்களுக்கு முன்பு நான் பெர்லின் சென்றிருந்தது பற்றியும் புதிதாக அங்கு ஏற்படுத்தப் பட்டுள்ள சுவர் பற்றியும் கூறினேன்.

"மீண்டும் ஜெர்மனி எப்போது ஒன்று படக்கூடும் என்று ஒரு ஜெர்மானியரைக் கேட்டேன். 'நூறு ஆண்டுகளுகருள் ஏற்பட்டு விடாது' என்ருர் அவர்" என்று கூறினர் கோடாலி.

"பிரிவினை தான் நடைமுறை வழக்காகி விட்டதே! இல்லையா? வியட்நாமில்...கொரியாவில்..." என்ருர் திருமதி கோடாலி.

கொரியாவுக்கான முதல் ஐ.நா. கமிஷன் தலைவர் என்ற முறையில் கொரியாவை ஒன்றுபடுத்த முயன்றதையும் அதில் படுதோல்வியடைந்ததையும் கூறினேன். பரிதாபம்! ஆதிக்க அரசியலில் கொரியா பலியாகி விட்டது. மூவாயிரம் ஆண்டு கால அமைதியான வரலாற்றைக் கொண்ட நாடு அது. அதனலேயே அது 'காலையின் அமைதி நிலவும் நாடு' என்றழைக்கப் பட்டு வந்தது.

"இப்போது மாலையின் தீ மூண்ட நாடாகி விட்டது" என்ருர் திருமதி கோடாலி.

இந்திய சர்க்கார் சார்பில் நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வருமாறு நான் விடுத்த

koviloor Acadamy

அழைப்பு நிறைவேற்றப் படாமல் இருப்பதாக கோடாலியிடம் கூறினேன். அவரது வருகைகுறித்து அக்கறை கொண்டிருந்த ஜவாஹர்லால் நேரு அவரை வரவேற்க இப்போது இருக்கமாட்டார். நேருவைக் காண முடியாது போனாலும் தாம் இந்தியா வரப் பெரிதும் விரும்புவதாகவும் ஆனால் டாக்டர்கள் விமானத்தில் போகக்கூடாது என்று தடுப்பதாகவும் கோடாலி கூறினார். இப்போது விமானங்களில் அழுத்தம் சரி செய்யப்பட்டுள்ளதென்றும் நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் உலகத்திலேயே சிறந்த காலநிலை டில்லியில் இருக்கும் என்றும் சொன்னேன்.

மீண்டும் பேச்சு யோகாசனம் பற்றித் திரும்பியது. காலஞ்சென்ற சர். சங்கரன் நாயருக்கு நெற்றியில் ஒரு கட்டி வந்ததையும், அதனை அறுத்து சிகிச்சை செய்ய டாக்டர்கள் பயந்ததையும், யோகாசனத்தின் மூலம் அது படிப்படியாக மறைந்து விட்டதையும் கூறினேன். "இந்தியாவுக்கு வருவதற்காக ஒரு கட்டியை வேண்டுமானாலும் வரவழைத்துக் கொள்கிறேன்" என்றார் ஆர்வமிக்க திருமதி கோடாலி.

என்னுடைய இந்த உலகப்பயணம் முழுவதும் கோடாலியையும் அவருடைய மனைவியையும் சந்தித்தது போல அந்த அளவுக்கு இன்பத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது வேறு எதுவும் இல்லை.

புடாபெஸ்ட், ஆகஸ்ட், 31

எங்கள் உலகப்பயணம் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ரஷ்யா ஒன்றுதான் மிச்சம். ஹங்கேரியில் நமது தூதரகத்தில் தங்கியிருக்கிறோம். கிழக்கு ஐரோப்பாவில் என்னுடைய பதவிக் காலத்தின் பிற்பகுதியில் குறைந்தது ஒரு டஜன் தடவையாவது இதில் தங்கியிருப்பேன். முற்பகுதியில் நான் செயிண்ட்

koviloor Acadamy

மார்கரெட் தீவிலுள்ள கிராண்ட் ஒட்டலில் தங்குவது வழக்கம். இத்தீவுக்கு மத்திய காலத்திலிருந்தே ஒரு பெருமை உண்டு. அரச குமாரியான மார்கரட் மணம் செய்து கொள்ள மறுத்து, டார்டார்களின் படையெடுப்பு அபாயத்தைப் போக்க தான் மேற் கொண்ட விரதப்படி துறவுப் பெண்ணுனுள். பெரிதும் அழகுப்படுத்தப்பட்டுள்ள இத்தீவு ஐரோப்பா, அமெ ரிக்காவிலிருந்து இன்பத்தை நாடி வருகிறவர்களுக்கு ஏற்ற இடமாக இப்போது உள்ளது. இந்த ஆண்டு சுமார் பத்து லட்சம் சுற்றுப் பிரயாணிகள் ஹங்கே ரிக்கு வரலாமென எதிர்பார்க்கபபடுகிறது. அனுமதிச் சிட்டுக்கான கட்டுப்பாடுகள் தளர்ததப்பட்டுள்ளன; சில அண்டை நாடுகளின் விஷயத்தில் இவை முற்றி லும் அகற்றப்பட்டு விட்டன. 1956 புரட்சிக்குப் பிறகு அமெரிக்காவுக்கு ஒடிப்போன ஹங்கேரியர்களும் கூட திரும்ப ஹங்கேரிக்கு வந்து தங்கள் உறவினர் களைப் பார்த்து விட்டு அமெரிக்கா செல்ல அனுமதிக்கப் பட்டுள்ளனர். “அவர்களை எதிரிகளாக நடத்த விரும்பவில்லை” என்ருர் டில்லியில் ஹங்கேரிய தூது வராக இருந்த ஜோஞேஸ் நாகி.

உலகின் வேறெந்த இடத்திலும் உள்ள நமது தூதரகங்களைவிட இங்குள்ள தூதரகம் அருமையான இடத்தில் உள்ளது. குன்றின் சரிவில் அமைந்துள்ள அதில் ஆப்பிள், பிளம், செர்ரி, வால்நட் மரங் களடர்ந்த தோட்டமும் உள்ளது. தூரத்தே டான்யூப் நதி ஒடுகிறது. அதன் ஒரு கரையில் பெஸ்டும் மறு கரையில் புடாவும் உள்ளன. இதன் மீதுள்ள ஏழு பாலங்களும் போரின்போது சேதமடைந்ததால் இப்போது புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளன. எட்டா வது பாலம் ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது. பெஸ்ட் உள்ள பக்கத்தில் கம்பீரமான பார்லிமெண்ட் கட்டிடம்

koviloor Acadamy

உள்ளது. சென்ற நூற்ருண்டின் இறுதியில் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கட்டிடத்தைப் பின்பற்றிக் கட்டப் பட்டது இது. ஒரு மாபெரும் கதீட்ரலும் பல்வேறு பாணியில் கட்டப்பட்ட பல சர்ச்சுகளும் அருகில் உள்ளன. புடா உள்ள பக்கத்தில் உயரமான பாறை யின் மீது மகோன்னதமான கோட்டை உள்ளது. ஹங்கேரிய மன்னர்களும், ஆஸ்ட்ரியா, ஹங்கேரி சக்கரவர்த்திகளும், துருக்கி சுல்தான்களின் பிரதிநிதி களும் தங்கியிருந்து ஹங்கேரிய மக்கள்மீது ஆதிக்கம் செலுத்திய இக்கோட்டை அண்மையில் புதுப்பிக்கப் பட்டது. கோட்டைக்கு அப்பால் ஜெல்லர்ட் குன்றின் மீது, மாபெரும் ஹங்கேரிய சிற்பியான கிஸ்ஃபால்டி ஸ்ட்ரோடில் அமைந்த சுதந்திரச்சிலை உள்ளது. 1848 புரட்சிக்குப் பிறகு புரட்சிக்காரர்களை அடக்க ஆஸ்திரிய சக்கரவர்த்தி ஜெல்லர்ட் குன்றின்மீது கட்டிய கோட்டை இப்போது ஒரு ஓட்டலாக மாற்றப் பட்டுள்ளது. அதன் கீழே ஆஸ்திரிய பாணியிலமைந்த ஒரு சிற்றுண்டி விடுதி உள்ளது. இங்கு ஜிப்ஸி இசைக்கலைஞர்கள் உள்ளனர்.

இங்கு நமது தூதுவர் சாந்திலால் படேலின் விருந்தினராக இருக்கிறேம். இந்தியா விடுதலை பெற்றதும் வெளிநாட்டில் பணிபுரியத் தேர்ந்தெடுக்கப் பட்ட 'வயது அதிகமான' அதிகாரிகளில் இவர் ஒருவர். இவர்களில் படேல் நல்ல பெயரெடுத்தார். வர்த்தகத் துறையில் அனுபவ மிக்கவரான அவர் ஹங்கேரியுடன் நமது வர்த்தகத்தை அதிகரிப்பதில் உதவியிருக்கிறர். இந்தியா–ஹங்கேரி வர்த்தகம் இப்போது 600 லட்சம் ரூபாய்க்கு நடக்கிறது. இதனை 800 லட்சமாக அதி கரிப்பது லட்சியமாகும். அவருடைய உதவியாளர் வெங்கட்ராமன் அவரைவிட ஆர்வம் மிக்கவராக இருக்கிறர். ஐந்தாண்டுக் காலத்துக்குள் இருமடங்

koviloor Acadamy

காக்க முடியும் என்று அவர் நம்புகிருர். வெங்கட்ராமனுடைய மகன் உட்பட அரை டஜன் இந்திய மாணவர்கள் இங்கு கல்வி கற்கிருர்கள். உலகின் வேறெந்த மொழியுடனும் தொடர்பில்லாததும் மிகக் கஷ்டமானதுமான ஹங்கேரிய மொழியையும் அவர்கள் அறிந்துள்ளனர். பரஸ்பரம் இந்தியாவுக்கும் ஹங்கேரிக்கும் மாணவர்கள் செல்வது அதிகரித்து வருகிறது. பிரதம மந்திரி கடாரும்கூட விரைவில் இந்தியாவுக்கு விஜயம் செய்ய விருக்கிருர்.

சாந்திலாலுடைய உறவினர்கள் பலர் அவருடன் தங்கியுள்ளனர். அவர்களில் அவருடைய மைத்துனரான டாக்டர் படேலும் ஒருவர். இவர் புவியியல் அறிஞர். நகைச்சுவையாளர். அத்துடன் சிறந்த சமையற்காரர். சாந்திலாலுடைய அழகுப் பெண்ராணுக் தாளுகவே என்னுடைய அந்தரங்கக் காரியதரிசியாகி விட்டாள்.

ஒரு பகுதி முழுவதையும் சாந்திலால் எங்களுக்காக ஒழித்துக் கொடுத்தார். நமது அதிகாரிகளில் மிகுந்த திறமையுள்ளவர்களில் ஒருவரான இஷி ரஹ்மான் தமது அலுவல்களைக் கவனிக்கும் அறையையும் எங்கள் உபயோகத்துக்கு ஒதுக்கிவிட்டார். சர்வதேசக் கமிஷனின் தலைவராக இந்தோசீனுவுக்குப் புறப்படுமுன்பு அவரை டில்லியில் கடைசியாக சந்தித்தேன். அங்கேயும் ஏதாவது புரட்சியை உண்டாக்கப் போகிறீர்களா என்று வேடிக்கையாகக் கேட்டேன். இஷி பதவியேற்க அனுப்பப்பட்ட இடங்களில் எல்லாம் புரட்சி ஏற்பட்டிருக்கிறது. அவர் கென்யாவில் இருந்தபோது மாவ்மாவ் இயக்கம் தலை தூக்கியது. காலனி நிர்வாகம் அவர் மீது ஆப்பிரிக்கர்களிடம் அளவு கடந்த அனுதாபம் காட்டுவதாகக்

koviloor Acadamy

குற்றம் சாட்டியது. அவர் புடாபெஸ்டுக்கு வந்த ஒரு மாத காலத்துக்குள் ஹங்கேரியில் புரட்சி வெடித்தது. லியோபால்ட்வில்லிக்கு அவர் சென்றதுமே காங்கோவில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் தோன்றின. சென்ற மாதம் அமெரிக்கா, வட வியட்நாமிலுள்ள கடற்படைத் தளங்களைத் தாக்கி அழித்தபோது அங்கும் பழையபடி நேரும்போல் தோன்றியது. இனிமேலும்கூட நேரலாம்.

புடாபெஸ்ட், செப்டம்பர், 1.

ஹங்கேரியப் பிரதம மந்திரி ஜேனோஸ் கடாரைப் பேட்டி கண்டு ஒரு மணிநேரம் பேசினேன். 1956 நவம்பரில் அவரை முதன் முறையாகச் சந்தித்தேன். அப்போது இம்ரே நாகி விரட்டப்பட்டு புரட்சியின் நடுவே அவர் பதவியேற்றார். அப்போது ரஷ்ய டாங்கிகள் புடாபெஸ்டில் இருந்தன. கடாருடைய காரியாலயம் உள்ள பார்லிமெண்ட் கட்டிடத்தின் நடைபாதைகள் ரஷ்ய, ஹங்கேரியப் போர் வீரர்களால் காவல் காக்கப் பட்டு வந்தன. ராகோஸியை எதிர்த்து நின்று தமது தீரத்தையும் சுதந்திரத்தையும் ஏற்கனவே அவர் காட்டியிருந்தார். ராகோஸியின் ஆட்களால் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு அவரது விரல் நகங்கள் யாவும் பிய்த்தெறியப்பட்டிருந்தன. சோவியத் அரவணைப்பில் ஹங்கேரிக்கும் கௌரவமான அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுக்கும் ஆற்றலும் அவரிடம் இருந்தது.

பல்வேறு துறைகளிலும் ஹங்கேரியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி குறித்து கடார் விவரித்துக் கூறினார். விவசாயத்தை கூட்டுப் பண்ணையின் கீழ் கொண்டு வருவது பூர்த்தியாகிவிட்டது. இது மகத்தான சாதனையாகும். ஏனெனில் பத்தாண்டுகளுக்கு முன்பு நான் முதன் முறையாக ஹங்கேரிக்கு வந்தபோது 36%

koviloor Acadamy

நிலங்களே சர்க்கார் துறையில் இருந்தன. புரட்சியின் போது கூட்டுப் பண்ணையில் இருந்த விவசாயிகளும் கூட அதிலிருந்து விலகிச் சென்று சொந்தமாகப் பயிரிடத் தொடங்கிவிட்டனர். வன்முறையை மேற் கொள்ளாமல் கூட்டுப் பண்ணை அமைக்கப்பட்டது என்று கடார் கூறினர். விவசாயிகள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் பயிரிட்டு விளைச்சலை அவர்கள் இஷ்டம்போல் விற்கலாம் என்பதே சர்க் காரின் கொள்கை. தனி நபரை ஆதரிப்பதாக இதற்கு அர்த்தமாகாது. மனித விவகாரங்களில் ஊக்கம் வகிக் கும்பங்கை சர்க்கார் அங்கீகரிக்கிறது என்பதே இதற்கு அர்த்தமாகும் என்று கடார் கூறினர். சீனர்கள் இந்த அம்சத்தைப் புறக்கணித்து கம்யூன்களை அமைப்பதில் அவசரப்பட்டனர். ஆனல் இப்போது அவர்களுடைய தவறை உணர்ந்து அதை வெளிப்படையாக ஒப்புக் கொள்ளாவிட்டாலும் கூட திருந்திக்கொண்டு வரு கின்றனர்.

இந்தியாவும் சீனவும் தமது தகராறுகளை சுமுக மாக தீர்த்துக்கொள்ளும் என்று தாம் நம்புவதாக கடார் கூறினர். சில காலத்துக்கு முன்பு இந்தியாவி லிருந்து வந்த தூதர் ஒருவர் இந்தியா உரிமைகோரும் எல்லையின் நியாயத்தை எடுத்துரைத்ததாகவும் ஆனல் தகராறு குறித்து தம்முடைய தீர்ப்பைக் கூறுவது சாத்தியமாக இல்லையென்றும் அவர் கூறினர். அவ் வாறு செய்ய வேண்டுமென்று நாம் எதிர்பார்க்க வில்லையென்றும் 1962ல் சீன இந்தியாவைத் தாக்கியது அவசியமில்லாத ஆக்கிரமிப்பு என்பதை நம்முடைய நண்பர்கள் உணர வேண்டும் என்றே நாம் எதிர்பார்ப் பதாகவும் கூறினேன். சீனவுடன் சுமுகமான உடன் பாடு ஏற்பட வேண்டுமென்று இன்னமும் நாம் அக்கறை கொண்டிருக்கிறேம். இந்தியா, சீன ஆகிய

koviloor Acadamy

இரு நாடுகளுக்கும் நண்பர்களான சில ஆப்பிரிக்க ஆசிய நாடுகள் அண்மையில் கொழும்புத் திட்டம் என்ற ஒரு யோசனையை வெளியிட்டுள்ளன. இது பேச்சு வார்த்தை நடத்த வழி வகுக்கும். இந்த யோசனையை நாம் அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் சீனா கொள்கையளவில் தான் ஏற்றுக் கொண்டுள்ளது. ஒன்றைக் கொள்கையளவில் ஒருவன் ஏற்றுக்கொள்வதாகக் கூறும்போது நடை முறையில் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றே அர்த்தமாகும்.

சீனா-சோவியத் தகராறு குறித்து கடார் வெளிப் படையாகப் பேசவில்லை. தகராறின் விளைவு என்னவாக இருக்கும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை. ஆனால் விளைவு எப்போது உருப்பெறும் என்று என்னால் கூற முடியாது என்றார். சீனர்கள் சற்று சுய பரிசோதனை செய்துகொண்டால், சில ஆண்டுகளுக்கு முன்பு அண்டை நாடுகளான சோவியத் யூனியனுடனும் இந்தியாவுடனும் சுமுகமான உறவுடன் இருந்தபோது உலகில் அவர்களுடைய அந்தஸ்து மிகவும் அதிகமாக இருந்தது என்பதை உணர்வார்கள்.

இந்தியா ஹங்கேரி நட்புறவை கடார் பெரிதும் மதிக்கிறார். இதனால் இரு நாடுகளுக்கும் ஏற்படக் கூடிய நன்மைகளுக்காக மட்டுமல்ல; அதைவிடப் பரந்த காரணங்களுக்காக. இதோ இரு நாடுகள். ஒன்று சிறியது. மற்றொன்று பெரியது. ஒன்று ஐரோப்பிய நாடு. மற்றொன்று ஆசிய நாடு. ஒன்று சோஷலிஸ்ட். மற்றது கம்யூனிஸ்ட் அல்லாத நாடு. பரஸ்பர நலனுக் காகவும் சர்வதேச விவகாரங்களிலும் தாராளமாக ஒத்துழைக்கின்றன. இந்தியாவுக்கு விஜயம் செய்யு மாறு நமது சர்க்கார் விடுத்துள்ள அழைப்பை ஏற் பதின்மூலம் கடார் இந்த உறவை வலுப்படுத்த முடியும் என்று நம்புவதாகக் கூறினேன்.

koviloor Acadamy

கடார், ஜவாஹர்லால் நேருவைப் பெரிதும் பாராட்டிப் பேசினுர். அவரது மறைவினுல் இந்திய வரலாற்றில் மட்டுமன்றி உலக வரலாற்றிலேயே ஒரு குறிப்பிடத் தக்கவர் மறைந்துவிட்டார் என்ருர். கென்னடி கோரமாகக் கொல்லப்பட்டதற்கும் அவர் வருந்தம் தெரிவித்தார். நல்லெண்ணமுடைய போப் 23வது ஜானுடைய மறைவும் வருந்தற்குரியது. "எங்களுடைய முகாமிலும் டோக்ளியாட்டியும் தோரஸூம் இறந்துவிட்டனர். மொத்தத்தில் இது மிகவும் மோசமான வருஷம். ஆனுல் வாழ்க்கை நடக்கத்தான் வேண்டும். மறைந்தவர்களின் வாழ்வு, அவர்கள் பாதையில் செல்லவேண்டியவர்களுக்கு ஆதரிசமாக இருக்கும்" என்ருர் கடார்.

புடாபெஸ்ட், செப்டம்பர், 2.

உத்தியோக முறையில் நாற்பது ஆண்டுகளாக நான் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பிரயாணம் செய்து வருகிறேன். இந்தியாவில் பல இடங்களில் தெற்கே திருச்சிராப்பள்ளியிலிருந்து வடக்கே பிஷாவர், பலுச்சிஸ்தான் வரை நான் பணியாற்றியிருக்கிறேன். ஆசியாவில் சீனு, கொரியா, சிலோன், சிங்கியாங்கிலும் ஐரோப்பாவில் பிரிட்டன், ரஷ்யா, போலந்து, ஹங்கேரியிலும் அமெரிக்காவில் சான் பிரான்ஸிஸ்கோ, நியூயார்க்கிலும் ஆப்பிரிக்காவில் கென்யா, உகண்டா, தங்கனிகா, ஜான்ஸிபாரிலும் நான் பதவி வகித்திருக்கிறேன். ஆனுல் இந்தப் பயணங்கள் யாவும் உத்தியோகம் பற்றியவை. கடைசியாக இப்போது ஒரு தனிப்பட்ட பிரஜை என்ற முறையில் பிரயாணம் செய்வதில் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

koviloor Acadamy

ஆயினும் ஹங்கேரியில் நான் மீண்டும் பதவியில் இருப்பது போலவே தோன்றியது. ஹங்கேரிய வெளி விவகார இலாகா என்னை ஹங்கேரியின் நிரந்தர தூதுவர் போலவே நடத்துகிறது. ஆக்டிங் வெளி விவகார மந்திரி பீட்டர் மாட், குன்றின் மீதுள்ள உணவு விடுதியில் எங்களை விருந்துக்கு அழைத்தார். அங்கு பழைய நண்பர்கள் பலரைச் சந்தித்தேன். இந்தியாவுக்கு ஹங்கேரியின் முதல் தூதுவரும் இப்போது உதவி வெளிநாட்டு மந்திரியுமான ஜர்க்கா, இப்போதுள்ள ஹங்கேரிய தூதுவர் நாகி ஆகியோர் வந்திருந்தனர். வெளிவிவகார இலாகாவினர் எங்களை புடாபெஸ்டிலிருந்து விஸ்கிராடுககு டான்யூப் நதியில் அழைத்துச் சென்றனர். இதேபோல் பத்தாண்டு களுக்கு முன் சென்றிருக்கிறேன். அப்போது டான் யூப்பின் இப்பகுதி ஜனசஞ்சாரமற்றிருக்கும். இப்போது ஏராளமான படகுகளும் புடாபெஸ்ட் டுக்கும் வியன்னுவுக்குமிடையே காலநேரப்படி ஓடும் கப்பல்களும் காணப்பட்டன. ஆற்றின் கரையில் ஆண்களும் பெண்களும் நீந்திக் கொண்டும் விளை யாடிக் கொண்டும் சூரிய ஒளியில் படுத்து அனுபவித்துக கொண்டும் இருந்தனர்.

ஓர் அதிகாரி எங்களை இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் விவசாயக் காட்சிக்கு அழைத்துச் சென்றார். இது தேசீயக் கண்காட்சிதான் என்றாலும் பல வெளிநாடுகளும் பங்கெடுத்துக் கொண்டிருந்தன. விவசாயத்தை யந்திரமயமாக்குவதில் ஹங்கேரியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் எடுத்துக்காட்டு இந்தக் கண்காட்சி. பெரும்பாலும் ஹங்கேரியில் செய்யப் பட்ட 500க்கு குறையாத விவசாய இயந்திரங்களை இங்கு கண்டோம். ஆயினும் கடந்த மூன்றாண்டு களில் காலநிலை மோசமாக இருந்தது. குளிர் கடுமை

koviloor Acadamy

யாக இருந்ததால் அடுத்தடுத்து இரண்டாண்டு களுக்கு டான்யூப் நதியின் நீர் உறைந்து விட்டது. எப்போதாவதுதான் நேரும் நிகழ்ச்சி இது. நான் பதவி வகித்த ஒன்பது ஆண்டுகளில் ஒரே ஒரு முறை 1954ல் இவ்வாறு நேர்ந்துள்ளது.

சாந்திலால் படேல் பெரிய வரவேற்பு ஒன்று அளித்தார். பழைய ஹங்கேரி நண்பர்கள் பலரை இதில் சந்தித்தோம். அவருடைய சிப்பந்திகளும் எங்களுக்கு உதவினர். வெங்கட்ராமன் எங்களுக்கு அருமையான தென்னிந்திய விருந்து அளித்தார். ராமநாதன் அதேபோல் சுவையான மலையாள விருந்து அளித்தார். ஹங்கேரிய சிப்பந்திகள் அனைவரும் மாறு மல் அப்படியே இருந்தது எனக்கு மகிழ்ச்சியளித்தது. டெப்ரேக்ஸன் இந்தியில் புலவராகி விட்டார். மெல்லப் சிறந்த மொழிபெயர்ப்பாளராக இருக்கிறார். வரவேற்பாளரான திருமதி கோஸ்மோவ்ஸ்கி எங்களை கண்டதும் கண்ணீர் விட்டார். வியன்னாவிலுள்ள கணவரிடமும் பாரிஸிலுள்ள மகளிடமும் அவரது நினைவு ஓடியது. இருவருமே புரட்சிக்குப் பின் ஹங்கேரியை விட்டு ஓடியவர்கள்.

நேற்று மாலை ஐரோப்பாவிலேயே சிறந்த அராபி மொழி அறிஞரான பேராசிரியர் ஜெர்மானுஸ் அவர்க ளுடன் இரண்டு மணி நேரத்தைக் கழிததோம். இரு முறை ஹஜ் யாத்திரை சென்று வந்துள்ள இவர் தாகூருடன் சாந்தி நிகேதனத்தல் இருந்திருக்கிறார். இப்போதுதான் எகிப்திலும் மொரோக்கோவிலும் சொற்பொழிவாற்றி விட்டுத் திரும்பியுள்ளார். மற்றொரு கீழ்த்திசை அறிஞரான பக்தாய் காலமாகி விட்டார். அவர் எழுதிய அற்புதமான சித்திரங்க ளடங்கிய "இந்தியாவின் கலாச்சாரம்" என்ற நூலை அவருடைய விதவை மனைவி எனக்குப் பரிசளித்தார்.

koviloor Acadamy

விருந்தினரில் மற்ருெருவர் உலகின் மாபெரும் சிற்பிகளில் ஒருவரான கிஸ்.ஃபால்டி ஸ்ட்ரோபுல். எண்பது வயதைக் கடந்த ஸ்ட்ரோபுல், ஜெர்மானுஸ் ஆகிய இருவரும் தெம்புடனும் உற்சாகத்துடனும் இருப்பதைக் காண மகிழ்ச்சியாக இருந்தது.

ஜெர்மானுஸ் வசிக்கும் வீடு மிகவும் விசாலமானது. பழங்கால அதிசயப் பொருள்கள் பல கொண்டது. உலகின் பல நாடுகளிலிருந்தும் அவர் சேகரித்துள்ள புத்தகங்கள், படங்கள், சிலைகள, கம்பளங்கள், பல்வேறு கலைப்பொருள்கள் போன்றவை அங்கு இருக்கும். என்னைப் பெரிதும் கவர்ந்தது ஒரு மேஜை. 1848 புரட்சியின் போது போரிட்ட ஹங்கேரிய தளபதி ஆர்தஸ் கார்கிக்குச் சொந்தமானது அது. 1915ல் ஹங்கேரி முதல் உலகப் போரில் தவருன பக்கம் போரிட்டபோது 93 வயதான கார்கி ரஷ்யர்களுடன் போரிடத் தம்மைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். 1848 போரில் ஈடுபட்டதால் ரஷ்யர்கள் என்ன செய்வார்கள் என்று தமக்குத் தெரியும் என்ருர் அவர். 1848, 19:4, 1942 ஆகிய ஆண்டுகளில் ஹங்கேரி ரஷ்யாவை எதிர்த்துப் போரிட்டது. இப்போது ரஷ்ய சமூக முறை ஹங்கேரி யில் திணிக்கப்பட்டு விட்டது. ஆனுல் ஆற்றல் மிக்க குருஷ்சாவின் ஆட்சியில் தங்கள் அமைப்பை ஹங்கேரி மக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ளுமாறு செய்துவிட்டனர். இதன் காரணமாக 1956ம் ஆண்டுப் புரடசி ஹங்கேரியின் நீண்ட வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி யாகி விட்டது. ரத்தன் நேரு கூறியது போல் புடாபெஸ்ட் "கிழக்கு ஐரோப்பாவின் பாரிஸ்" ஆகி விட்டது.

koviloor Acadamy

6. மாஸ்கோ

மாஸ்கோ, செப்டம்பர், 3.

ஏரோஃப்ளோட் விமான மொன்றில் வசதியான இரண்டு மணிநேரப் பிரயாணம் எங்களை புடாபெஸ்டிலிருந்து மாஸ்கோவுக்குக் கொண்டு சென்றது. முன்பு இந்தப் பயணத்துக்கு ஏழு மணி நேரம் ஆகும். அப்போது விமான மங்கையரோ உண்ணவும் குடிக்கவும் எதுவுமோ கிடையாது. எனக்கு முன்பிருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் ரஷ்ய விமானங்களில் பிரயாணம் செய்தபோதெல்லாம் தம்முடன் 'பிளாஸ்க்' எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது.

அந்தக் காலத்தில் ரஷ்ய விமானங்களில் பாதுகாப்புப் பட்டிகள் கிடையாது. அதனை ரஷ்யர்கள் அமெரிக்க அல்லது முதலாளித்வக் கருவியாகக் கருதுவது வழக்கம். ரஷ்யாவில் அதற்கு அவசியமே இல்லை. ஏனெனில் அங்கு விமான விபத்துக்கள் ஏற்படுவது இல்லை. சோவியத் யூனியனில் குற்றங்களே நிகழ்வது இல்லை என்று ஸ்டாலின் காலத்தில் பெருமையுடன் கூறப்பட்டு வந்த கொள்கைக் கேற்ப இது இருந்தது. மற்றவர்கள் தம்மைக் காண்பது போலவே தாமும் காணும் ஆற்றல் பெற்றவர்கள் ஒரு சிலரே யாவர். மற்றவர்கள் தன்னைக் காணுதவிதத்தில் காணும் தனித் திறமையை ஸ்டாலினுடைய ரஷ்யாவைத் தவிர வேறெந்த நாடும் புலப்படுத்தியது இல்லை. தெளிவான கண்ணோட்டமுடைய குருஷ்சாவ் அதிகாரத்துக்கு வரும் வரை சோவியத் யூனியன் ஏற்கெனவே சோஷலிஸ்ட் சுவர்க்கமாகி விட்டது என்ற கொள்கை

koviloor Acadamy

கைவிடப் படவில்லை. திருட்டு, விபத்து போன்ற நிகழ்ச்சிகள் அதன் பின்னரே பிரசுரமாகத் தொடங்கின.

பாதுகாப்பு மந்திரி சவான் தலைமையில் வந்திருந்த நமது தூதுகோஷ்டியுடன் தூதுவர் இருக்க வேண்டியிருந்தமையால் அவருடைய சார்பில் தாண்டன் எங்களை விமான நிலையத்தில் வரவேற்றார். கனடா தூதுவர் ராபர்ட் ஃபோர்டும், அவருடைய மனைவி தெரஸாவும் ஷெர்மிடீவ் விமான நிலயத்துக்கு எங்களை வரவேற்க வந்தனர். 1952ல் நான் மாஸ்கோ வந்தபோது ராபர்ட் கனடா தூதரக அதிகாரியாக இருந்தார். ரஷ்யாவைப்பற்றி நன்கறிந்தவர்களில் அவர் ஒருவர். விரைவில் அவர் மாஸ்கோவில் தூதுவராக ஆவார் என்று அப்போதே நிச்சயமாக நம்பினேன். ஒட்டாவா, பொகோடோ, பெல்கிரேட், கெய்ரோ ஆகிய இடங்களில் பதவி வகித்து விட்டு அவர் மாஸ்கோ வந்தார். ராபர்ட் கவிதையில் ஈடுபாடுடையவர். நவீன ரஷ்யக கவிதைகளை மொழிபெயர்தது அவர் வெளியிட்ட ஒரு புத்தகப் பிரதியை சில வருடங்களுக்கு முன்பு அவர் எனக்குப் பரிசளித்தார்.

எல்லா காமன்வெல்த் நாடுகளையும்விட கனடா பூகோள ரீதியாக இந்தியாவிலிருந்து வெகு தூரம் விலகியிருந்த போதிலும், ஜான் ஃபாஸ்டர் டல்லஸ் காலத்தில் இந்தியாவின் கொள்கைகளைப் பிடிக்காத அமெரிக்காவுக்கு மிக அருகில் இருந்தபோதிலும் வேறெந்த காமன்வெல்த் நாடுகளையும் விட இந்தியாவும் கனடாவும் ஒன்றையொன்று அதிகமான அளவுக்குப் புரிந்துகொண்டு இருக்கின்றன. காமன்வெல்த் மாநாடுகளில் லெஸ்டர் பியர்ஸனுடனும் செண்ட் லாரன்டுடனும் இருப்பது தமக்கு மிகவும்

koviloor Acadamy

பிடித்தமாக இருப்பதாக ஜவாஹர்லால் நேரு கூறுவது வழக்கம்.

ஷெர்மிட்டீவ் விமான நிலையத்திலிருந்து தூதரகத்துக்குச் செல்ல ஒரு மணி நேரமாயிற்று. நான் மாஸ்கோவில் பதவி வகித்த ஆரம்ப ஆண்டுகளில் இருந்த ஒரே விமான நிலையமான நுகோவ் பெரிதும் விஸ்தரிக்கப்பட்டு இப்போது சர்வதேச விமானப் போக்குவரத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பிரமுகர்களுக்கென நுகோவ் II என்ற விமான நிலையமும் உள்ளது. சர்வதேச விமானப் போக்குவரத்துக்கு ஷெர்மிட்டீவ் சகஜமான பாதையாகி விட்டது. மாஸ்கோவிலிருந்து 60 கிலோ மீட்டர் தூரத்தில் இன்னொரு விமான நிலையமும் கட்டப்பட்டுள்ளது. உள்நாட்டு விமானப் போக்குவரத்தும் உல்லாசப் பிரயாணிகள் வருகையும் சமீப ஆண்டுகளில் அதிகரித்திருப்பதையே இது காட்டுகிறது. தூதரகத்தை நாங்கள் அடைந்தபோது மாலை மங்கத் தொடங்கி விட்டது. கார்க்கி வீதியிலும் இதர வீதிகளிலும் நியான் விளக்குகள் ஒவ்வொன்றுக எரியத் தொடங்கின. ஸ்டாலின் காலத்தில் இல்லாதது இது. அமெரிக்க ஆபாசத்துக்கு ஓர் உதாரணமாக வெறுக்கப்பட்டு வந்தது இது.

மாஸ்கோவில் நமது தூதுவரான டிக்கி கௌளலும் அவருடைய மகளும் எங்களைத் திறந்த கரங்களுடன் வரவேற்றனர். இரண்டாண்டுகளுக்கு முன்பு அவர் பதவியேற்றவுடன் அவருடன் தங்கியிருந்திருக்கிறேம். மீண்டும் எங்களுக்கு இடமளித்ததற்காக அவருக்கு நன்றி செலுத்தினேன். நாங்கள் தூதரகத்தில் இருக்கும்போது தாம்தான் விருந்தாளி என்றும் அந்த வீடு எங்களுடையது தானேயன்றித் தம்முடையது அல்ல வென்றும் டிக்கி கூறினர். எங்களுக்கும்

koviloor Acadamy

அப்படித்தான் தோன்றியது. என்னுடைய 40 ஆண்டு சேவையில் கால்பகுதி இந்த வீட்டில் கழிந்தது. வேறெங்கும் நாங்கள் இதைவிட மகிழ்ச்சியாக இருந்ததோ அல்லது எங்கள் முயற்சி அதிக அளவு பலனளித்ததோ இல்லை.

இந்த வீட்டை விட்டு நாம் போகவே இல்லைபோல் தோன்றுகிறதே என்கிருள் அனுஜி. எல்லாமே அப்படியே இருந்தன. அதே விரிப்புகள், திரைச்சீலைகள். குளியலறைக்குச் சென்ற போது எட்டு வருடங்களுக்கு முன்பு தன்னுடைய பழைய சேலை ஒன்றைக் கொண்டு செய்த ஜன்னல் திரை அங்கு அப்படியே இருப்பதை அனுஜி கவனித்தாள். சாப்பாட்டு அறையில் நல்பாண்டியன் தீட்டிய அனுஜியின் அற்புதமான ஓவியம் தொங்கிய மூன்று கொக்கிகளும் கூட அப்படியே இருந்தன. அந்தப் படம் ரஷ்யாவில் நன்கு பிரபலமானது என்றும் அதன் சில பிரதிகளை தாம் பார்த்திருப்பதாகவும் உதவி வெளிநாட்டு மந்திரி லபின் என்னிடம் கூறினுர். நல்பாண்டியன் எவ்வளவு உற்சாகத்துடன் அந்த ஓவியத்தை தீட்டினுர் என்பது என் நினைவில் இருக்கிறது. கால்மணி நேரம் தீட்டுவார்-பிறகு ஒரு கோப்பை மதுவைத் தாம் விழுங்கிவிட்டு அனுஜிக்கு ஒரு கோப்பை காப்பி கொடுத்துவிட்டு மீண்டும் வேலையில் மூழ்கி விடுவார். அனுஜியின் ஓவியம் அருமையாக அமைந்து விட்டது.

நமது தூதரகத்தில் பெரிய தோட்டம் ஒன்று இருக்கிறது. அதன் முகப்பில் டிக்கி சாரநாத் ஸ்தூபம் போன்ற ஒன்றை அமைத்திருக்கிருர். 1958ல் டில்லிக்கும் மாஸ்கோவுக்கு மிடையே விமானப் போக்குவரத்து தொடங்கியதைக் கொண்டாட நடைபெற்ற விழாவில் பாடரோவா என்ற பாலே நடனப்பெண்

koviloor Acadamy

ஆடிய மேடை தோட்டத்தின் பின்புறம் இன்னும் இருக்கிறது. 1954ல் நாம் கேட்டுக்கொண்ட தற்கிணங்க நகர கவுன்சில் அமைத்த 'ஸ்க்வாஷ் கோர்ட்' நமது தூதரகததினரால் மட்டுமின்றி, இதர நாட்டுத் தூத ரகத்தினராலும் பயன்படுததப்பட்டு வருவதாக டிக்கி கூறினுர். சோவியத் யூனியனிலேயே இது ஒன்று தான் உள்ளது. 'வாலிபால்' மைதானம் ஒன்றையும் இப்போது அமைத்திருக்கிருர். நாங்கள் காய்கறித் தோட்டம் போட்டிருந்த இடத்தில் அது உள்ளது. மாஸ்கோவிலிருந்து பின்வாங்கிச் செல்லுமுன்பு நெப்போலியன் இரண்டு நாட்களைக் கழித்த இடம் என்று கூறப்படும் கட்டிடம் 'பிங்பாங்' விளையாடப் பயன்படுத்தப் படுகிறது. தூதரகத்தின் கீழ்ப்பகுதி யில் ஓர் அறை மாஸ்கோவிலுள்ள இந்தியர்கள் 'கிளப்' பாக உபயோகப்படுத்துவதற்காகத் தரப்பட்டுள்ளது. நாங்கள் மாஸ்கோவுக்கு வந்தபோது நமது தூதரகத் துக்கு வெளியே ஒரேயொரு இந்திய தம்பதி மட்டுமே இருந்தனர். ஸ்டாலின் இறககும் வரை 'முதலாளித்வ ஸ்தாபனம' என்று அவர்கள் கருதிய தூதரகத்துக்கு அருகில் கூட வந்தது இல்லை. இப்போது 200 இந்தியர் கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் லுமும்பா நட்புறவு பல்கலைக் கழகத்திலும் மாஸ்கோ பல்கலைக் கழகத்திலும் கல்வி பயிலும் மாணவர்கள். எங்க ளுடைய மகன் குமார் அங்கு படித்தவன் தான். அங்கு அவன் செலவிட்ட இரு ஆண்டுகள் அவன் வாழ் நாளிலேயே மகிழ்ச்சி நிரம்பியவை.

பல்கலைக் கழகப் பிரதேசத்துக்கு நமக்கு சொந்த மான 'ஜில்' காரில் சென்றோம். காடிலாக்கைவிட கவர்ச்சியான கார் இது. நம்முடைய காரோட்டி ஆண்ட்ரீ சீன தூதரகததிலும் ஒரு 'ஜில்' கார் இருப்ப தாகவும் ஆனல் அதை அவர்கள் அதிகமாக உபயோ

koviloor Acadamy

கப்படுத்துவது இல்லையென்றும் கூறினன். இப்போதெல்லாம் மாஸ்கோவில் சீனர்களை அதிகமாகப் பார்க்க முடிவது இல்லை. "முன்பெல்லாம் சீனர்கள் மேலே இருப்பது வழக்கம்; இப்போது கீழே போய்விட்டார்கள்" என்ருன் ஆண்ட்ரீ. "அவர்கள் எழுதிக் கொண்டே இருக்கிருர்கள். அவர்களுடைய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு எல்லா உதவியையும் அளித்தோம். இப்போது அவர்கள் எங்களை எப்படி நடத்துகிருர்கள் பாருங்கள்" என்ருன் மேலும்.

பல்கலைக் கழகத்துக்கு முன்புறமுள்ள லெனின் குன்றின்மீது ஏறி நின்ரேம். முன்பு இதற்கு குருவிக் குன்று என்று பெயர். நெப்போலியன் மாஸ்கோவில் நுழைந்ததும் இதன்மீது ஏறி நின்று அம்மாநகரம் தன் காலடியில் பரந்து கிடப்பதைக் கண்டு "இதெல்லாம் என்னுடையவை" என்று பூரித்தான். குன்றுக்குக் கீழே மாஸ்கோ நதி வலதுபுறம் திரும்பி நோவோட்விச்சி வழியே செல்கிறது. மத்திய காலத்தில் இது துறவிகள் மடமாக இருந்தது. 13-ம் நூற்ருண்டில் படையெடுத்து வந்த டார்டார்களை மடத்தில் இருந்தவர்கள் வெளியே வந்து எதிர்த்துப் போராடினர். நதியின் பின்புறம் லட்சம் பேருக்கு இடவசதியுள்ள லெனின் ஸ்டேடியம் உள்ளது. பழைய நகரில் எங்கும் பழங்கட்டிடங்கள் இடிக்கப்படுகின்றன. தொழிற்சாலைகள் புறநகர்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு புதிய கடைகளும், உணவு விடுதிகளும், வீடுகளும் கட்டப்படுகின்றன. ஸ்டாலின் காலத்தில் கட்டப்பட்ட வானளாவும் பல மாடிக் கட்டிடங்களை ஆங்காங்கே காணலாம். நியூயார்க்கிலுள்ள எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தைவிட உயரமான ஒரு கட்டிடம் கட்டும் வேலை ஸ்டாலின் இறந்த சமயம் தொடங்கியிருந்தது. ஆயினும் குருஷ்சாவ் அக்கட்டிட

koviloor Acadamy

வேலையை நிறுத்திவிட்டார். வானளாவும் கட்டிடங்களுக்குப் பதிலாக வசிப்பதற்கேற்ற சிறிய வீடுகள் கட்டுவதில் அவர் கவனம் செலுத்துகிறார்.

நாங்கள் வந்து சேர்ந்த அன்று காலையில் வீட்டின் முகப்பிலிருந்து வெளியே பார்த்தேன். அங்கிருந்து பார்த்தால் வெகு தூரத்துக்கு அருமையான காட்சி தென்படும். ஆனால் இப்போது மாறுதல் ஏற்பட்டிருந்தது. சுற்றிலும் பல மாடிக் கட்டிடங்கள் எழுந்துள்ளன. இரண்டு அல்லது மூன்று சர்ச்சுகளின் தூரக் காட்சியைக் காணமுடியாமல் அவை மறைந்துவிட்டனவே என வருந்தினேன். முன்பு வானப் பின்னணியில் ஸ்லாவ் கட்டிடக் கலைக்குரிய வெங்காய வடிவ கலசம்கொண்ட ஏழு சர்ச்சுகள் தெரியும். இப்போது நான்குதான் தெரிந்தது. சோவியத் யூனியனில் மனிதன் துரிதமாக முன்னேறுகிறான். கடவுள் பின்னணிக்குப் பெருந்தன்மையுடன் விலகிச் செல்கிறார்!

மாஸ்கோ, செப்டம்பர், 5.

டிக்கி கௌல் ஒரு விருந்தளித்தார். உதவி வெளி நாட்டு மந்திரி வாஸிலி குஸ்னட்ஸால் தம்பதி ராபர்ட் ஃபோர்ட் தம்பதி மற்றும் பல ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் தூதுவர்கள் வந்திருந்தனர். டிக்கி என்னை ஒரேயடியாகப் புகழ்ந்தார். என்னைத் தம்முடைய ராஜதந்திர குரு என்று பாராட்டினார். திறமையில் தன்னையே மிஞ்சிவிட்ட சீடர்களைக் கண்டு குரு அடையும் பெருமகிழ்ச்சியில் நான் திளைத்துக்கொண்டிருக்கிறேன். அரபுக் குடியரசு தூதுவர் காலப், பொம்மலாட்டத் தியேட்டரின இயக்குனர் ஒப்ராஸ்ட்ஸாவ் ஆகிய இருவேறானவர்கள் அனுஜியிடம் "உங்கள் கணவர் ஒரு ராஜதந்திரிக்கும் மேலானவர்" என்றார்களாம். இது முகஸ்துதியாக எனக்குப்பட்டது.

தெரஸா எப்போதும்போலவே வெளிப்படையாகப் பேசினர். 'நான் இதுவரை சந்தித்திருப்பவர்களிலேயே மிகவும் உண்மையானவர் அவர். டிக்கி அளித்த விருந்தில் ஜப்பானியர்கள் நல்ல வியாபாரிகள் அல்ல வென்றும், எப்போதும் ஒரு பொருளை அவர்கள் அதன் மதிப்பைவிடக் குறைவாகவே விற்கின்றனர் என்றும் ஜப்பானியத் தூதுவர் பேச்சுவாக்கில் குறிப்பிட்டார். "ஆனல் இதைவிட அதிக விலைக்கு விற்க வேண்டுமானுல் அவர்களால் குறைந்த அளவு பொருள்களைத்தான் விற்கமுடியும். இது அவர்களுக்கு நன்கு தெரியும். உலகத்திலேயே சாமர்த்தியமான வியாபாரிகள் அவர்கள்" என்ருர் தெரஸா. இவ்வாறு கூறியது பெரும் வாதத்துக்கு அடி கோலியது. விருந்தின் முடிவில் தெரஸா ஜப்பானியத் தூதுவரிடம் ஜப்பானியர் ஒருவரையாவது தன்ளுல் கோபமடையும் படி செய்ய முடிந்தது குறித்துத் தான் மகிழ்ச்சியடைவதாகக் கூறினுர்.

குஸ்னட்ஸாவுடன் எங்கள் நட்பைப் புதுப்பித்துக் கொள்வது எங்களுக்குப் பெரிதும் மகிழ்வளித்தது. அவருடைய மனைவி மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியையாகப் பணியாற்றுகிருர். ஸ்டாலின் காலத்துக்குப் பிற்பட்ட நவீன சோவியத் ராஜதந்திரிகளுக்கு குஸ்னட்ஸாவ் சிறந்த உதாரணமாவார். நன்கு பண்பட்டவர்; திறமை மிக்கவர். ஜவாஹர்லால் மறைவு குறித்து பெரிதும் வருந்திப் பேசினுர். 1955–ல் நேரு சோவியத் யூனியனில் சுற்றுப்பயணம் செய்தபோது உடன்சென்ற அவருக்கு நேருவிடம் மிகுந்த பற்று இருந்தது. அதேபோல நேருவுக்கும் அவரிடம் அன்பு உண்டு. ஜனுதிபதி வொரேஷிலோவுடன் இந்தியாவுக்கு வந்திருந்தபோது நேரு தன்னை தனிப்பட்ட

koviloor Acadamy

முறையில் விருந்துக்கு அழைத்தது குறித்து மனம் நெகிழ்ந்து கூறினர்.

நேற்றிரவு மாஸ்கோவில் நமது முதல் காரியதரிசியான ஜெயின் எங்களைக் கௌரவிக்க ஒரு விருந்தளித்தார். கவனமுடன் விருந்தினர்களை அவர் அழைத்திருந்தார். எங்களது மிகச்சிறந்த ரஷ்ய நண்பர்கள் சிலரும் அழைக்கப் பட்டிருந்தனர். வரவேற்புரையை அவர் ரஷ்ய மொழியில் நிகழ்த்தினர். ரஷ்ய மொழியைச் சரளமாகவும் நேர்த்தியாகவும் பேசக்கூடிய நம்முடைய ஒரு சில அதிகாரிகளில் ஜெயின் ஒருவர்.

விருந்தினர்களில் யூரி ஜுகோவ் ஒருவர். என்னுடைய பதவிக் காலத்தில் அயல்நாடுகளுடன் கலாச்சார உறவுக்கான ராஜ்யக் கமிட்டித் தலைவராக இருந்த அவர் செல்வாக்குள்ள கட்சிப் பத்திரிகையான பிராவ்தாவின் முன்னணி விமரிசகராக இருக்கிறார். மற்றொரு செல்வாக்குள்ள பத்திரிகையான 'இஸ்வெஸ்தியா'வின் பிரதம ஆசிரியரான அட்ஜுபீ தம்பதி-குருஷ்சாவின் மகள், பொம்மலாட்டக்கலை மேதையான ஒட்ராஸ்ட்ஸாவ் தம்பதி, நட்புறவுப் பல்கலைக் கழகத்தின் ஆர்வமிக்க துணைவேந்தரான எர்ஸின், மத்திய காலத்தில் இந்தியக் கட்டிடக் கலை பற்றிய தம்முடைய ஆராய்ச்சி நூலை எனக்கு அன்பளிப்பாக வழங்கிய திருமதி எர்ஸின், தென்கிழக்காசியா பற்றி ஆராய்ச்சி நடத்தி வருபவரும், உலகிலேயே முதல் பெண் ராஜதந்திரியின் பேரனும், விஜயலட்சுமி பண்டிட்டுக்கு நன்கு தெரிந்தவருமான கோலோன்டாய் தம்பதி, டால்ஸ்டாயுடைய இல்லமான யாஸ்னயா போலியானுவில் அடிக்கடி எங்களை அழைத்துக் களிப்பூட்டிய டாக்டர் போபோவ்கின் மகள், பாலே நடனமணியும்

koviloor Acadamy

இந்திய நடனத்தைக் கற்றவரும், ஜான்ஸி ராணியின் வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு ஒரு பாலே நடன நிகழ்ச்சியைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருப்பவரு மான பாசரோவா ஆகியோரும் வந்திருந்தனர்.

ராணி ஜெயின் பல சிறு மேஜைகளில் உணவு வகைகளைப் பரிமாறி யிருந்தார். ராணி, ஜுகாவ் தம்பதி, அட்ஜுபி தம்பதி, டிக்கி கௌல் ஆகியோ ருடன் நான் ஒரு மேஜையருகில் அமர்ந்தேன். ஹிரோ ஷிமாவில் நடைபெற்ற சமாதான மாநாட்டிலிருந்து ஜுகாவ் அப்போதுதான் வந்திருந்தார். அதே சமயத் தில் டோக்கியோவில் சீனு ஏற்பாடு செய்த ஒரு மாநாடு நடைபெற்றது என்றும் அது வெறும் சீனப் பொம்ம லாட்டமே தவிர சீனர்களின் கருத்துக்கு மாருக யாரும் எதுவும் கூற அனுமதிக்கப் படவில்லையென் றும் ஜுகாவ் கூறினுர். சோவியத் பிரதிநிதிகளுக்கு அந்த மாநாட்டிலிருந்து வெளியேறுவதைத் தவிர வேறு வழி யிருக்கவில்லை. அல்ஜீரியப் பிரதிநிதி களுக்கும் அந்த சூழ்நிலை பிடித்தமாக இல்லை. ஆயினும் சீனர்களுடைய நடத்தை ஒரு பயனுள்ள வேலையை செய்கிறது என்ருர் ஜுகாவ். இதுவரை சமாதான மாநாடு என்பது கம்யூனிஸத்தை விஸ்தரிப்பதற் கான ஒரு போர்வை என்று சிலர் எண்ணி வந்தனர். இப்போது யார் சமாதானத்தை நாடுகிருர்கள், யார் நாடவில்லை என்பது ஒவ்வொருவருக்கும் தெரியும், சமாதான மாநாட்டுக்கு ஒரே ஒரு லட்சியம்தான். அதாவது கொள்கை எதுவாக இருந்தபோதிலும் சமாதானத்துக்குப் பாடுபடுவது.

திருமதி அட்ஜுபி குடும்பப் பெண்ணுக்குரிய லட்சணங்களுடன் திகழ்கிருர். குருஷ்சாவை விரும் பாத அமெரிக்கர்களும்கூட அவரது மகளின் இனிய

6

koviloor Acadamy

தோற்றத்தை மதிக்காமல் இருக்க முடியாது. மாமனு ரிடம் உள்ள தீவிரம் அட்ஜூபியிடமும் உள்ளது. மாமனுரின் கருத்தை முற்றிலும் ஆதரிப்பவர் அவர். அமெரிக்கா, வாடிகன், மேற்கு ஜெர்மனி போன்ற இடங்களில் எதிர்ப்பைப் போக்க குருஷ்சாவ் அவரைப் பயன்படுத்துவதில் வியப்பில்லே. சீன—ஸோவியத் தகராறின் மனத்தத்துவப் பின்னணியை அட்ஜூபி நன்கு தெளிவுபடுத்தினுர்.

ஸ்டாலின் காலத்துக்குப் பிறகு ரஷ்யர்கள் எவ்வளவு சுமுகமானவர்களாகவும் நட்புக்குரியவர்க ளாகவும் ஆகிவிட்டார்கள் என்பது என்னேப் பெரிதும் கவர்ந்தது. இப்போது அவர்கள் வாழ்க்கையை அனுபவிக்கலாம். தங்கள் தலேவர்களேக் குறித்து நகைசசுவையுடன் பேசவும் செய்யலாம். இதை யொன்றும் சாதாரணமாகக் கருதவேண்டாம். ‘அரசனேப் பாதுகாக்கும் ஒரு தெய்வீக சக்தி உள்ளது’ என்ருர் ஷேக்ஸ்பியர். ஜனநாயகத் தலேவர்களும் கூட சில சமயங்களில் தங்களேத் தெய்வீகத் தன்மை யுள்ளவர்களாக நினேத்துக்கொள்கிருர்கள். மெக்ஸி கோவில் அதன் ஜனுதிபதியைப்பற்றி இழிவாக ஏதோ சொன்னதற்காக பிரபல ஓவியரான ஸிக்யூரி யோஸ் நீண்டகால சிறைத் தண்டனேயடைந்தது பற்றிக் கேள்விப்பட்டேன். ஜனுதிபதி தேசீய கௌர வத்தின் உருவகம்; எனவே யாரும் அவரைக் குறை கூறக் கூடாது என்று பத்திரிகைகள் அந்த தண்டனே நியாயம்தான் என்றெழுதின. இந்தியாவில் இக் கொள்கை பின்பற்றப்பட்டால் ஒரு சில பத்திரிகை யாளர்கள் கூட வெளியே இருக்கமாட்டார்கள் ஸ்டாலின் குறைகூறுவதை அனுமதிப்பதில்லே.. தன்னேப் பற்றிக் குறைவாக எவரேனும் பேசினுல் அவரை மறு உலகத்துக்கு அல்லது சைபீரியாவுக்கு

koviloor Acadamy

அனுப்பி விடுவார். இப்போது உள்ள சோவியத் தலைவர்கள் மனிதத் தன்மையுள்ளவர்கள். தங்களை கேலி செய்வதுபற்றி அவர்கள் வருந்துவது இல்லை. அதை அவர்கள் ரசிப்பது போலவே தோன்றுகிறது.

வாடிகனுக்கு மிகோயானுடைய கற்பனை விஜயம் பற்றி ஒரு கதையைக் கேட்டோம். போப் அவருக்கு ஒரு விருந்தளித்தார். தம்மிடமுள்ள தங்கத் தட்டுகளை யெல்லாம் விருந்தினர் உபயோகிக்கக் கொடுத்தார். போப் சற்று வேறு பக்கம் திரும்பியபோது மிகோயான் ஒரு தங்க ஸ்பூனை தம் பைக்குள் எடுத்துப் போட்டுக் கொண்டு விட்டார். அவர்கள் பேச்சு கிறிஸ்தவ மதம் பற்றித் திரும்பியது. கிறிஸ்தவ மதத்துக்கும் கம்யூனிசத்துக்குமிடையே பொதுவான பல அம்சங்கள் இருப்பதாகப் போப் ஒப்புக் கொண்டார். ஆயினும் ஒரம்சத்தில் மட்டும் கிறிஸ்துவ மதம் கம்யூனிசத்தைவிட உயர்ந்தது; இன்னும் அது அற்புதங்களைச் செய்ய முடியும். உதாரணமாக என்னுடைய சட்டைப் பையில் ஒரு தங்க ஸ்பூனைப் போட்டுவிட்டு அதை மிகோயானுடைய பையிலிருந்து எடுத்துத்தர முடியும் என்று கூறிய போப் அதைச் செய்து காட்டவும் முற்பட்டார்.

மற்றொரு கதை இது. புதிய போப் தேர்ந் தெடுக்கப்படுவதைக் காண சோவியத் தலைவர்கள் வாடிகனுக்குப் போகிறார்கள். முதலில் ஸுஸ்லாவ் சென்றார். "எல்லாமே ஒரே குழப்பம். முடிவு என்ன வாகுமோ தெரியவில்லை" என்றார். அடுத்து வாடிக னுக்குச் சென்ற மிகோயான் "நிலைமை கட்டுக்கு அடங்கி இருக்கிறது. ஆனால் முடிவு நிச்சயம் இல்லை" என்று தந்தியடித்தார். பிறகு குருஷ்சாவ் தாமே வாடிகனுக்குச் சென்று 'எல்லாம் ஒழுங்காக இருக்

koviloor Acadamy

கிறது. குருஷ்சாவ் முதல்'' என்ருர். (நாங்கள் இந்தியா திரும்பி ஐந்து நாட்களுக்குள் குருஷ்சாவ் முதல்வராக இல்லாமல் போய்விடுவார் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை.)

மாஸ்கோ, செப்டம்பர், 7

சோவியத் யூனியனுக்கெதிராக அண்மையில் சீனு தாக்கிப் பேசியிருப்பதுதான் நகரெங்கும் பேச்சாக இருக்கிறது. சந்தர்ப்பம்—ஜப்பான் சோஷலிஸ்ட் கட்சி தூது கோஷ்டியினருக்கு மாஸேதுங் அளித்த பேட்டி. இப்போது ரஷ்யாவிடம் உள்ள குரில் தீவுகளை ஜப்பானிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து மாவின் கருத்து கேட்கப் பட்டது. ''அவை ஜப்பானுக்கு திருப்பிக் கொடுக்கப் படத்தான் வேண்டும்'' என்ருர் மா. ''உலகில் மிக அதிகமான இடங்களை ரஷ்யா ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறது'' என்ற நீண்ட முன்னுரையுடன் அவர் தமது கருத்தை வெளியிட்டார். ''சோவியத் யூனியன் மங்கோலியாவைத் தன் ஆதிக்கத்தில்வைத்தி ருக்கிறது. ருமேனியாவின் ஒரு பகுதியைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு விட்டது. கிழக்கு ஜெர்மனியின் ஒரு பகுதியை அபகரித்துக் கொண்டு விட்டது. ஃபின்லாந்து, போலந்து ஆகியவற்றின் பகுதிகளை ரஷ்யாவுடன் இணைத்துவிட்டது. மேலும் சோவியத் யூனியன் சிங்கியாங்கையும் அமுர் நதிக்கு வடக்கே சில பிரதேசங்களையும் உரிமை கோரி இப்பகுதிகளில் துருப்புகளைக் குவித்திருக்கிறது. நூருண்டுகளுக்கு முன்பு ரஷ்யா பைகால் ஏரிக்குக் கிழக்கேயுள்ள பிரதேசத்தைக் கைப்பற்றியது. அதன்பிறகு விளாடி வாஸ்டாக், காபரோவ்ஸ்க், காம்சட்கா ஆகியவை அவர்கள் வசமாகி விட்டன. இவை பற்றித் தீர்வு காண

koviloor Acadamy

வேண்டுமென்று இன்னும் நாங்கள் கேட்கவில்லை. குரில் தீவுகளை ஜப்பான் கேட்பதைப் பொறுத்தவரை, 100 மிலியன் மக்களைக் கொண்ட ஜப்பான் 370 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பிரதேசத்தை மட்டுமே பெற்றிருக்கிறது. ஆனால் 200 மிலியன் மக்களைக் கொண்ட சோவியத் யூனியன் 22 மிலியன் சதுர கிலோ மீட்டர் பரப்பைப் கொண்டிருக்கிறது. எனவே குரில் தீவுகளை ஜப்பானுக்குத் திருப்பிக் கொடுப்பதுதான் நியாயம்'' என்றார் மா.

மாவின் கூற்றை பிராவ்தா பத்திரிகை ''வெறியூட்டும் போக்கு'' என்று வர்ணித்துள்ளது. இத்தகைய போக்கினால் பல போர்கள் ஏறபட்டிருக்கின்றன என்பதை பிராவ்தா நினைவு படுத்தியுள்ளது. ''நியாயமற்ற பிரதேச வினியோகம்'' என்று தாம் கருதியதை சரிப்படுத்துவதற்காகவே ஹிட்லர் போரைத் தொடங்கினார். இத்துறையில் மாவுக்கு முன்னோடிகள் இருந்தபோதிலும் அது குறித்து அவர் பெருமைப் பட்டுக்கொள்ள முடியாது என்று கூறும் பிராவ்தா, ஜார்கள் கையாண்ட போக்கு சரியில்லாததாக இருக்கலாம், சீன சக்கரவர்த்திகள் கையாண்ட வழியும் அதுவேதான் என்கிறது. இந்தப் பிரதேச மாறுதல்களுக்கும் மக்களுக்கும் சம்பந்தமில்லை. தாங்கள் வாழும் நிலத்தில் நெற்றி வியர்வை சொட்ட அவர்கள் பாடுபடுகிறார்கள். இங்கும் அங்கும் தள்ளப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. 1954ல் பிரசுரமான நவீன கால வரலாறு பற்றிய சீனப் பாட புத்தகம் ஒன்றில் சீன தேசப்படத்தில் பர்மா, வியட்நாம், கொரியா, தாய்லந்து, மலேயா, நேபாளம், பூட்டான், சிக்கிம், சோவியத் தூரக் கிழக்குப் பகுதி, கிர்கிஸ்தான், டாஜிகிஸ்தான், கஸாக்ஸ்தான், சகாலின் ஆகியவற்றின் பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துக்

koviloor Academy

காட்டி இப்போதுள்ள தேசிய எல்லைகளை மாற்ற செய்யப்படும் எந்த முயற்சியும் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ளது.

மாவுடைய கடியை விடக் குரைப்பு மோசமானது என்று கருதும் சிலர் இருக்கிறார்கள். 'பேட்ரியட்', 'லிங்க்' ஆகிய பத்திரிகைகளின் ஸ்தல நிருபரான உன்னிக் கிருஷ்ணன் வீட்டில் அருமையான மலையாள விருந்துண்டோம். டிக்கி கௌலுடைய அந்தரங்கக் காரியதரிசி என். பி. மேனன் வீட்டிலும் விருந்துண் டோம். உன்னிக் கிருஷ்ணன் விருந்தில் மாஸ்கோவி லுள்ள இலங்கை தூதுவரைச் சந்தித்தோம். போர் மூளாது என்ற எண்ணத்தில் சீனர்கள் காரியங்களைச் செய்து வருவதாக அவர் கூறினார். அண்மையில் இலங்கைக்குச் சென்றிருந்த தூ என்லாய் நிலைமையை இவ்வாறு விளக்கினார். "சோவியத் யூனியன் போரைத் தூண்டாது; சம பலம் நிலவுவதன் காரண மாக அமெரிக்கா ஒரு போரைத் தொடங்க முடியாது. ஜெர்மனி செய்யலாம். ஆனால் போரை நடத்துவதற் கான வசதி அதனிடம் இல்லை."

மா கூட இந்த வாரம் ஒரு அறிக்கை வெளி யிட்டார். சோவியத் யூனியனுக்கு எதிராக நான் காகிதப்போர் நடத்துவதாக குற்றம் சாட்டுகிறார்கள். நான் ஏன் செய்யக் கூடாது? சீனர்கள் போரை-உண் மையான போரை—25 வருட காலம் நடத்தியிருக்கிறார் கள். ஜப்பானுக்கு எதிராக 22 ஆண்டுகளும் கொரியா வில் மூன்று ஆண்டுகளும். 25 ஆண்டுகளுக்கு காகிதப் போரை நடத்த அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இந்தப்போரை மூன்று மாத காலத்துக்கு நிறுத்தி வைக்குமாறு சோவியத் யூனியன் யோசனை கூறி

koviloor Acadamy

யுள்ளது. மூன்று நாட்களுக்குக் கூட நிறுத்த முடியாது என்று அதற்கு சீனு பதிலளித்துள்ளது. காகிதப் போரில் மக்கள் கொல்லப்படுவது இல்லை என்று மாவோ கூறியிருக்கிறார்.

ஆனால் இந்திய எல்லையிலும் திபேத்திலும் மக்கள் கொல்லப்பட்டார்கள். வியட்நாமில் கொல்லப்படுகிறார்கள். எங்கெல்லாம் அவ்வாறு செய்வது பத்திரமானதோ அங்கெல்லாம் காகிதப்போரை உண்மையான போராக மாற்ற சீனு தயங்காது என்பதையே இது காட்டுகிறது. பல்வேறு தற்காப்புக் கருவிகளை வாங்குவதற்காக சோவியத் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த நமது பாதுகாப்பு மந்திரி சவான் இங்கு வந்துள்ளது நியாயந்தானே!

koviloor Acadamy

7. கிரிமியா

மிஸ்கோர் செப்டம்பர், 10

கருங்கடலுடன் எங்கள் இருவருக்கும் பூர்வ ஜென்மத் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்கிருள் அனுஜி. இப்பகுதிக்கு நாங்கள் வருவது இது பன்னிரண்டாவது தடவை. 1953 கோடையில் இந்திரா காந்தி தனிப்பட்ட முறையில் சோவியத் யூனியனுக்கு வந்த போது அவருடன் முதல் தடவையாக ஸோச்சிக்கு வந்தோம். அதன் பிறகு அடுத்தடுத்து மூன்ருண்டுகளுக்கு வைத்தியர் ஆலோசனைப்படி சோச்சிக்கு ஒரு மாதம் சென்று வந்தேன். கிரிமியாவுக்கு நான் முதல் முறை சென்றது 1955ல் ஜவாஹர்லால் நேருவுடன். 1957ல் மாஸ்கோவிலிருந்து நமது தூதரக ராணுவ அதிகாரி பிரிகேடியர் நானுவதியுடன் மோட்டார்காரில் மாஸ்கோவிலிருந்து கிரிமியாவின் தலைநகரான யால்டாவுக்கு வந்தோம். பாவம்! நானுவதி சென்ற ஆண்டு காஷ்மீரில் ஒரு ஹெலிகாப்டர் விபத்தில் காலமாகி விட்டார். 1958லிருந்து கிரிமியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாதத்தைக் கழித்து வந்திருக்கிறேன்.

"ரோமாபுரியில் இருக்கும் போது ரோம் மக்கள் செய்வது போலவே செய்" என்ற பழமொழியைப் பின்பற்றி நடக்க நான் எப்போதும் முயன்று வந்திருக்கிறேன். குருஷ்சாவ் முதல், வசதியுள்ள ரஷ்யர்கள் எல்லோரும்- வசதியில்லாத பலரும் நாடெங்கும் பரவிக் கிடக்கும் ஆயிரக் கணக்கான சானடோரியம் ஒன்றில் ஒரு மாதம் வந்து தங்குகிருர்கள். இந்த ஆரோக்கிய நிலயங்கள் கருங்கடல் அல்லது பால்டிக்

koviloor Acadamy

கடற்கரை, காகஸஸ் அல்லது யூரல்மலை, சைபீரியாவிலுள்ள பைகால் ஏரி அல்லது ஆர்மீனியாவிலுள்ள ஸெவான் ஏரி, மாஸ்கோவிலும் லெனின் கிராடிலும் அவற்றைச் சுற்றிலும் உள்ள இன்பமூட்டும் வனங்கள் போன்ற இடங்களில் அமைந்திருக்கும். ஒவ்வொரு ஆரோக்கிய நிலையத்திலும் வேண்டிய அளவு டாக்டர்களும் நர்சுகளும் இருப்பார்கள். எல்லா மருத்துவ சாதனங்களும் இருக்கும். அதே சமயத்தில் இளைஞர்களும் உடல் வலுவுள்ளவர்களும் தங்கள நேரததை நீந்துவதிலும், படகு விடுவதிலும செலவிடலாம். ரஷ்யர்கள் காரியாலயங்களில் பணியாற்றுபவர்களும் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களும் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களில் யாரும் தங்களால் முடியுமானால் ஒரு மாத ஓய்வு எடுத்துக் கொள்ளத் தவற மாட்டார்கள். குருஷ்சாவ் போன்றவர்கள் எவ்வளவுகடுமையாக உழைக்கிறார்கள் என்பதையும், ஆண்டில் ஓரிரு மாதங்கள் ஆரோக்கிய நிலையங்களில் தங்கி எவ்வாறு புத்துணர்வு பெற்றுத் திரும்புகிறார்கள் என்றும், எவ்வளவோ முறை ஜவாஹர்லால் நேருவிடம கூறி அவரும் அது போல் அவ்வப்போது ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். "அபத்தம். எனக்கு ஓய்வே தேவையில்லை" என்று அவர் கூறுவார். அதன் விளைவாக உறுதியான உடற்கட்டு வாய்க்கப்பட்ட அவர், வாலிப வயதில் குதிரைச் சவாரி, யோகாசனம் போன்றவற்றின் மூலம் அதனை நன்கு பேணிக்காத்த அவர், கடமையில் மூழ்கி நாளொன்றுக்கு 16 மணி நேரம் உழைத்து உடல் தேய்ந்தார். இபபோது அவர் நம்மிடையே இல்லை.

டாக்டர்களிடம் எனக்கு எப்போதுமே பெருமதிப்பு உண்டு. டாக்டர்களுடைய உத்தரவின் பேரில்தான்

koviloor Acadamy

1953ல் நான் கருங்கடற்கரைக்குச் சென்றேன். 1944ல் பாமீர் பீடபூமியில் 12,000 அடி உயரத்தில் நான் குதிரை மேல் சென்று கொண்டிருக்கும்போது திடீரென்று முதுகில் மிகுந்த வலியேற்பட்டது. எனது முதுகெலும்பில் ஏதோ முறிந்து விட்டது போலத் தோன்றியது. பல நாட்களுக்குப் படுக்கையில் கிடந்தேன். பின்னர் அடிக்கடியும் மேலும் கடுமையாகவும் வலி தோன்றத் தொடங்கி ஒவ்வொரு முறையும் 15 நாட்களுக்குப் படுக்கையில் கிடத்திவிடும். முதுகு எலும்பு முட்டில் வழுக்குதல் ஏற்படுவதாகக் கண்டறிந்தார்கள். டில்லியிலும் பம்பாயிலும் சிகிச்சை செய்து கொண்டேன். லண்டன் ஹாமர்ஸ்மித் ஆஸ்பத்திரியில் ஒரு மாதம் இருந்தேன். ஹேக்கில் டாக்டர்கள் தட்டையான படுக்கையில் என்னை 30 நாட்களுக்கு படுக்க வைத்தபின் ஆபரேஷன் செய்ய வேண்டுமென்றூர்கள். ஸ்டாலினுடைய கடைசி நாட்களின் போது நான் புடாபெஸ்டில் இருந்தேன். அப்போது வலி தோன்றி அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள முடியாமல் செய்து விட்டது. எதனுலும் குணமாகும் போல் தோன்றவில்லை. வலி மோசமாகி நிலைத்து விட்டது. என் உடல் முழுவதும் வளையத்தொடங்கின. ஒரு கால் மற்றொன்றைவிடக் குட்டையாகி விடவே அதற்கேற்ப என் 'டிரவுஸரை' சரி செய்து கொள்ள வேண்டியிருந்தது. இந்தக் கட்டத்தில்தான் ரஷ்ய டாக்டர்களிடம் சென்றேன்.

ரஷ்ய வைத்திய நிபுணர்கள் குழு ஒன்று என்னை நன்கு சோதித்துக் கருங்கடல் அருகேயுள்ள சோச்சி ஆரோக்கிய நிலையமொன்றில் நான் ஒரு மாதம் தங்க வேண்டும் என்று ஏகமனதாக சிபாரிசு செய்தார்கள். ரோமர்கள் காலத்திலிருந்தே மருத்துவக் குணம் அறியப்பட்டிருந்த கந்தக நீரூற்றுகளில் குளிக்க வைப்

koviloor Acadamy

பதே முக்கிய சிகிச்சை. இது முறையாக ஒழுங்கு படுத்தப்பட்டது. இல்லாவிட்டால் உயிருக்கு கேடு நேரக் கூடும். ஒரு மாத சிகிச்சைக்குப் பிறகு நான் வேறு மனிதனுக இருந்தேன். என்னுடைய வலி போய் விட்டது. உடல் நிமிர்ந்து விட்டது. சிகிச்சை பின் பலன் நிரந்தர மானதாக இருக்க வேண்டுமாளுல் நான் அடுத்தடுத்து இரண்டு வருடங்களுக்கு அது போல் செய்து கொள்ள வேண்டும் என்று டாக்டர்கள் என்னை எச்சரித்தார்கள். அவ்வாறே செய்தேன். 1944லிருந்து 1953 வரை என்னை வேதனைப் படுத்திய வலி மீண்டும் ஏற்படவே இல்லை.

1956ல் மற்றொரு உறுப்பு தொல்லை கொடுக்கத் தொடங்கியது. இதன் காரணமாகத்தான் 1958லும் அதன் பின்னரும் கிரிமியா சென்றேன். 1956ல் கடுமை யான நிமோனியா காய்ச்சல் வந்தது. அப்போது ஹங்கேரியில் புரட்சி நடந்த சமயம். காய்ச்சல் சற்று குறைந்ததும் வைத்தியர்கள் யோசனையையும் மீறி புடாபெஸ்ட்டுக்குச் சென்றேன். காய்ச்சல் மீண்டும் வந்து விட்டது. 1957லும் ஓரிருமுறை இன்ஃப்ளு யன்ஸா வந்தது. அதைத் தொடர்ந்து ஓயாத இருமல் வந்தது. என்னுடைய சுவாசப் பையில் ஒரு பகுதி சுருங்கி விரியும் தன்மையை இழந்து விட்டதாகவும், எப்போதுமே இருமிக் கொண்டு இருக்க நேரிடலாம் என்றும் டாக்டர்கள் கூறினர். சீதோஷ்ண நிலைமாற்றம குணப்படுத்தலாம் என்று கருதிய அவர்கள் கிரிமியா ஆரோக்கிய நிலையம் ஒன்றில் இரண்டு மாதங்கள் இருக்குமாறு சிபாரிசு செய்தனர். கிரிமியாவின் இத முட்டும் கால நிலை அற்புதத்தைச் சாதித்தது. சுவாசப்பை கோளாறு மறைந்தே போய் விட்டது.

1960ல் குரோமிகோவின் விருந்தினராக நிட்ஸ்னியா ஓரியாண்டா எனப்படும் ஆரோக்கிய நிலையத்தில்

koviloor Acadamy

தங்கியது தவிர மற்ற எப்போதுமே மிஸ்கோரிலுள்ள உக்ரேன் எனப்படும் ஆரோககிய நிலையத்திலேயே தங்கி வந்திருக்கிறேன். கலையழகுடன் கட்டப் பட்டுள்ள இது, கம்பீரமாகவும் கண் கவரும் விதத் திலும் உள்ளது. 1955ல் ஜவாஹர்லால் நேரு இதனைக் காண வந்திருந்தபோது நானும் உடன் சென்றேன். அதற்குப் பின்னர் எவ்வளவோ மாறிவிட்டது.

இதிலுள்ள வசதிகளும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன. உதாரணமாகப் போன வருடம் திறந்தவெளி தியேட்டர் ஒன்று கட்டப் பட்டது. கடலுக்குக் கயிற்றுப்பாதை அமைக்கும் திட்டம் இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது. எனக்கும் என்னைப்போன்றவர்களுக்கும் இது பேருதவி யாக இருக்கும். முன்பெல்லாம் எனக்குப் பெரிதும் மகிழ்வளித்த விஷயம் கடற்கரைக்குச் சென்று கடலின் வெவ்வேறு போக்கைக் காண்பதுதான். இப்போது முறிந்த காலுடன் கடலுக்குச் செல்லும் கரடுமுரடான பாதையில் நடந்து செல்வது கஷ்டம். மலைப்பாதை களில் நின்றவாறே காதலியிடம் நெருங்கத் துணியாத காதலனைப் போல தூரத்திலிருந்தபடியே கடலைப் பார்ப்பதுதான் என்னால் செய்ய முடிந்தது. தூரத்தி லிருந்து பார்க்கும்போது கூட கடல் அதற்குரிய கவர்ச்சியுடனேயே இருந்தது. சில சமயங்களில் கருங் கடல் அதன் பெயருக்கேற்ப் கறுத்து அமைதியாகவும் காணப்படும். சில சமயங்களில் வார்த்தைகளால் கூற முடியாத சில உணர்ச்சிகளினால் அதன் இதயம் பொங்குவது போலத் தோன்றும். சில சமயங்களில் கலகலவென்று பேசுவதுபோல இருக்கும். வேறு சமயங்களில் கோடி நாவுகளால் மனித இனத்தை ஏசுவதுபோலத் தோன்றும். இன்று தரையைத் தாக்கு வதற்கு வாயில் நுரை ததும்பும் குதிரைகளின் முன்

koviloor Acadamy

னணியில் செல்லும் ஜான்ஸி ராணிபோலத் தோற்றமளிக்கிறது.

ஆரோக்கிய நிலை அலுவலர்கள் சிலர் மாறியிருக்கிறார்கள். அதிர்ஷ்டவசமாக அதனைக் கட்டிய பொறியியல் நிபுணரும் இயக்குநருமான வாஸிலிஸ்டபனோவிச் சுஷெங்கோ இன்னும் இங்கு இருக்கிறார். நாங்கள் முன்பு வந்திருந்த சந்தர்ப்பங்களில் எங்களைப் பெரிதும் அக்கறையுடன் கவனித்த டாக்டர் ஃப்ளோரா ஐவனோவ்னா, யால்டா அருகிலுள்ள மற்றொரு ஆரோக்கிய நிலையத்துக்குப் போய்விட்டார். ஆயினும் அடிக்கடி எங்களைக் கண்டு பேச இங்கு வருகிறார். அதே அளவு பரிவுடன் கவனிக்கும் மற்றொரு டாக்டர் இலினா யெரவ்னா எங்களைப் பார்த்துக் கொள்கிறார். இங்கு வந்து தங்குபவர்களுக்கு விளையாட்டுகள், கேளிக்கைகள், உல்லாசப் பயணங்கள் போன்றவற்றை உற்சாகத்துடன் ஏற்பாடு செய்து வந்த ரெய்னிச் இறந்துவிட்டார். உடம்பு தேய்த்துவிடும் காலியா ஒரு ராணுவ அதிகாரியை மணந்துகொண்டு இப்போது கிழக்கு ஜெர்மனியில் இருக்கிறாள். போதுமான வேலையில்லாததால் தனக்குப் பொழுதே போகவில்லை என்று இங்குள்ளவர்களுக்கு எழுதும் கடிதங்களில் கூறுகிறாள். இங்கு இருந்தவரை வேலையில்லை என்று சொல்லவே இடம் இல்லை. ஏனெனில் நாளொன்றுக்கு இரண்டு டஜன் பேர்களுக்கு அவள் உடம்பு தேய்த்துவிட வேண்டியிருந்தது. சோவியத் ஆண்கள் பெண்களிடையே ரபோடா அல்லது வேலை என்பது ஒரு மந்திரச் சொல்லாகும். அவர்களுக்குக் கவலைதருவது அதிகப்படி வேலையல்ல. போதிய வேலை இல்லாததுதான். ஒரு சைப்ரஸ் நாட்டுப் பழமொழி கூறுவது போல ''வேலை கஷ்டமானது தான்; ஆனால் எந்த வேலையும் மிகவும் கடினமானதல்ல'' ஒலிக்கா

koviloor Acadamy

இன்னும் இங்கு இருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி யளித்தது. துடிப்பும் துறுதுறுப்பும் உள்ள அந்த பெண்தான் எங்களுக்கு எல்லாம். வேலைக்காரி, மொழி பெயர்ப்பவர், துணைவி, அந்தரங்கக் காரியதரிசி ஆகிய எல்லாமாக அவள் இருந்தாள்.

மிஸ்கோர், செப்டம்பர், 13.

ஆரோக்கிய நிலையத்தின் அலுவல் காலை யிலிருந்து நள்ளிரவுவரை மணிப்படி நடக்கும். அலுவல்கள் காலை 7 மணிக்குத் தொடங்கும். 8 மணிக்கு உடற்பயிற்சி, 9 மணிக்கு சிற்றுண்டி, 10லிருந்து 2 மணி வரை தான் டாக்டர்களுக்கு நிறைய வேலையுள்ள நேரம். கடல் ஸ்நானம், ஆக்ஸிஜன் ஸ்நானம், களிமண் ஸ்நானம் போன்ற பலவகை சிகிச்சைகள் அப்போது செய்யப்படுகின்றன. ஒருவருக்கு சிகிச்சையெதுவும் இல்லாவிட்டால் படகு விடவோ கடலில் நீந்தவோ, விளையாடவோ போகலாம். 2 மணிக்கு மதிய உணவு 3 லிருந்து 5 மணி வரை ஓய்வு நேரம். நீங்கள் விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் ஓய்வெடுத்துக் கொள்ளத் தான் வேண்டும். அப்போது ஒரேயடியாக அமைதி நிலவும். இதற்குப் பிறகு விளையாட்டுகள். டென்னிஸ், வாலிபால் அல்லது பாட்மிண்டன் சிலநாள் களில் வரலாறு, சுகாதாரம், அல்லது அரசியல் குறித்து சொற்பொழிவு நடக்கும். இரவு 7 மணிக்கு உணவு 8–30 மணிக்கு திறந்தவெளி யரங்கில் நடனம், இசை, அல்லது சினிமா, நிகழ்ச்சி இருக்கும். 11 மணிக்கு விளக்குகள் யாவும் அணைக்கப்பட்டுவிடும்.

என்னையும் அனுஜியையும் சற்றுச் சுதந்திரமாக விட்டு வைத்திருக்கிறார்கள். கால்களின் பலவீனத் துக்காக அனுஜிக்கு மின்சார சிகிச்சையும், ஆக்ஸிஜன் ஸ்நானமும், மஸாஜும் அளிக்கவேண்டும். என்னுல்

koviloor Acadamy

ஐரோப்பிய முறையில் குளிக்க முடியாது. ஏனெனில் ஊனமான கால்களுடன் நீர்த்தொட்டிக்குள் என்னால் இறங்கமுடியாது. 'ஷவரில்' தான் குளிக்க வேண்டும் எனக்கு மின்சார சிகிச்சையும் கிடையாது. 'மஸாஜ்' செய்வதில் தேர்ந்தவளான யானினா ஒரு மணி நேரம் என் உடம்பைத் தேய்த்துவிடுவாள். இந்த வேலையில் அவளுக்கு ரொம்பப் பிரியம். சில சமயங்களில் மஸாஜ் முடிய ஒன்றரை மணி நேரம் கூட ஆகி விடும். பைலோ ரஷ்யாவிலுள்ள மின்ஸ்கிலிருந்து வருபவள் யானினா; மின்ஸ்கைவிட்டு எப்போதுமே வெளியே சென்றிராத அவள், பைலோ ரஷ்யாவைவிடக் கிரிமியா மிகவும் ஆரோக்கியமான, அழகான இடம் என்று ஒப்புக்கொள்கிறாள். இருந்தாலும் பிறந்த ஊர்ப் பாசம் விடுமா? பைலோ ரஷ்யாவுக்குத் திரும்பிப்போக ஏங்குகிறாள்.

ஆரோக்கிய நிலையத்தில் அளிக்கப்படும் உணவு பெரிதும் விஞ்ஞான பூர்வமானது. 12 வகையான உடல்நிலை உள்ளவர்களுக்கேற்ற 12 வித உணவுகள் உள்ளன. என்னுடைய உணவு எண் 9. இது மாவுச் சத்து இல்லாதது. அனுஜியின் உணவு எண் 10. இது கொழுப்புச் சத்து இல்லாதது. காலையுணவு, பகல் உணவு, இரவு உணவு ஆகியவற்றிடையே வேறுபாடு கிடையாது. பலவகையான பதார்த்தங்கள் இருக்கும். நாங்கள் சுற்றுப்பிரயாணம் தொடங்கிய பிறகு முதல் தடவையாக சாப்பிட்ட நல்ல காலையுணவு கிரிமியாவில்தான். எதையும் தரப்படுத்திவிடும் இந்தக் காலத்தில் காலையுணவு என்றால் இதுதான் என்று ஒரேமாதிரி செய்துவிட்டார்கள். நாங்கள் எந்தத் தூதரகத்தில் தங்கியபோதிலும் காலை உணவாக சோள அவலும் முட்டை வறுவலுமே கொடுக்கப்பட்டன. இதைச் சாப்பிட்டு எனக்கு அலுத்தே போய்விட்டது. ஆனால்

koviloor Acadamy

இங்கு ஏராளமான உணவு வகைகளிலிருந்து நமக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும். காரம், இனிப்பு, கடல் மீன், ஆற்றுமீன், பலவகை இறைச்சி, வேகவைத்த அல்லது வறுத்த முட்டை, பல வகைப் பழங்கள் ஆகியவை இருக்கும்.

அனுஜிக்கு சினிமா ரொம்பப் பிடிக்கும். 'முத்து குளிப்புக்கும்' மின்சார சிகிச்சைக்கும் பிறகு எவ்வளவ களைப்பாக இருந்தபோதிலும் சினிமா பார்க்கத் தவறுவது இல்லை. இந்த ஆண்டு முன்னெப்போதையும்விட அதிகமான அளவுக்கு அயல்நாட்டுப் படங்கள் காட்டப்பட்டன. இந்தியப் படங்களுக்கு நிறைய கிராக்கி உள்ளது. ராஜ்கபூர் ரொம்பவும் பிடித்தவர். 1955ல் சோவியத் யூனியனிலிருந்து இந்தியா திரும்பிய ஜவாஹர்லால் நேரு தமது பயணம் குறித்து பார்லிமெண்ட் அங்கத்தினர்களிடம் பேசுகையில் "ராஜ்கபூர் அளவுக்கு அநேகமாக நானும் மக்களுக்குப் பிரியமானவனாக இருந்தேன் என்று தோன்றுகிறது" என்றார்.

எப்போதும் போக்கு மாறிக்கொண்டேயிருக்கும் எதிரேயுள்ள கடலைக் காண்பதும், எப்போதும் நிறம் மாறிக்கொண்டிருக்கும் பின்னுலுள்ள குன்றுகளைக் காண்பதும் எனக்கும் பெரும் மகிழ்ச்சியளிக்கும் விஷயமாகும். குன்றுகள் யாவற்றிலும் சிறந்ததாக மூன்று சிகரங்களைக் கொண்ட ஐ பெட்ரியை இரவு பகல் எல்லா நேரத்திலும் பார்த்திருக்கிறேன். உதய சூரியன் ஒளியில், மேகங்கள் மறைந்திருக்கும்போது, மேகங்களினூடே எட்டிப் பார்க்கும்போது, அஸ்தமன சூரியன் ஒளியில் தீக்கொழுந்து போலத் தோன்றும் போது, எல்லாம் பார்த்திருக்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு, "ஐ பெட்ரி எவ்வளவு சோபையுடன்

koviloor Acadamy

திகழ்கிறது'' என்று வியந்து கூறினேன். “அதிலே சோபை என்ன இருக்கிறது? அது அழகாகக் கூட இல்லையே?'' என்றாள் அனுஜி. “அழகா, எனக்கு அது அழகைவிட மேலானது. தாங்களுடைய இருட்டு அறை அரசனைப்போல அது ஒப்பிட்டுக் கூற முடியாதது. அந்த அரசனிடம் மக்கள் கூறுகிறார்கள். “இறைவா! நீங்கள் அரசராக இல்லை. ஒப்புவமைக் கெல்லாம் அப்பாற்பட்டவர் தாங்கள்'' என்றேன்.

ஐ பெட்ரி அல்லது செயிண்ட் பீட்டர் என்ற பெயரே புனிதமானது அல்லவா? இது பற்றிய சுவையான செவிவழிக் கதையொன்றும் உண்டு. ஆனால் அது செயிண்ட் பீட்டருடன் சம்பந்தப்பட்டதல்ல. காதல் வசப்பட்ட பெட்ரி என்ற இளைஞனைப் பற்றியது. அவன் அரசகுமாரியிடம் காதல் கொள்கிறான். ஏதாவது வீரச்செயலைச் செய்து காட்டினாலன்றி மகளை மணம் செய்துதர மன்னன் மறுத்துவிடுகிறான். பெட்ரி ஒரு சிகரத்திலிருந்து இன்னொன்றுக்குத் தாவி உயிர் துறக்கிறான். இதைக் கண்ட அவன் காதலி “ஐ பெட்ரி'' என்று கூச்சலிடுகிறாள்.

ஐ பெட்ரிக்கு எங்கள் முதல் விஜயத்தை எப்படி மறக்க முடியும்? அப்போது அதனைப் பனி மூடியிருந்தது. பெருங்காற்றடித்து எங்களைக் கீழே தள்ளி விட்டது. என்ன இருந்தாலும் அழகு என்பது அவரவர் மனதைப் பொறுத்த ஒன்றுதானே! இல்லாவிட்டால் உலகிலுள்ள பெரும்பாலான பெண்கள் கன்னியாகவே இருக்க வேண்டியதுதான் என்றேன் அனுஜியிடம். இந்த வாதத்தினால் அவள் திருப்தியடைந்தாளா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் பேச்சை அத்துடன் நிறுத்தி விட்டோம். மீண்டும் ஐ பெட்ரி பற்றி அவளிடம் பேசவில்லை. ஆயினும்

koviloor Acadamy

இன்று காலையில் அவள், "நமது சொந்த விருப்பத்துக்கேற்பக் கட்டப்பட்ட வீட்டில் வசிப்பதைவிட அதிக மகிழ்ச்சி தரும் ஒன்று இருக்கிறதா?" என்று கேட்டாள். நீண்ட காலமாகக் கனவு கண்டு வரும் ஆசை இது. "ஓ! ஐ பெட்ரியைப் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தால் போதுமே!" என்றேன்.

மிஸ்கோர், செப்டம்பர், 16

இன்று ஆவலுடன் எதிர்பார்த்துப் பெரும் ஏமாற்றம் அடைந்த நாள்.

சோவியத் யூனியனுக்கு அதிகார பூர்வமாக விஜயம் செய்துள்ள ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் இந்த ஆரோக்கிய நிலையத்துக்கு வருவார் என்று பதினைந்து நாட்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுவிட்டன. முகப்பில் தோரணங்களும் வரவேற்புத் தட்டிகளும் கவினுறக் காட்சியளித்தன. ஜனாதிபதிக்கு வரவேற்பளிப்பதற்காக அலுவல்கள் எல்லாம் இரண்டு மணி நேரத்துக்கு நிறுத்தப்பட்டு விட்டன. பிறகு, ஜனாதிபதி வரமாட்டார் என்ற செய்தி வந்தது. இயக்குநர் சுஷெங்காவுடைய முகம் தொங்கிப் போயிற்று. அங்குள்ளவர்களைப் பார்க்கவே அவருக்கு வெட்கமாக இருந்தது. அனைவரும் மௌனமாகத் தம் இடம் திரும்பினர்.

1959ல் நாங்கள் இங்கு இருந்தபோது சுஷெங்காவுக்கு இதே போன்ற ஓர் அனுபவம் ஏற்பட்டது. எதியோப்பிய மன்னரின் வரவை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். கருங்கடலில் படகுப் பயணம் சென்ற பிறகு உடல் நலம் குன்றியிருப்பதால் மன்னர் வரமாட்டார் என்று செய்தி வந்தது. "இதைச் செய்யமுடியா விட்டால் மன்னராக இருந்து என்ன பிரயோசனம்" என்றார்

koviloor Acadamy

சுஷெங்கோ. ஜனாதிபதிகளும் அவ்வாறு செய்ய முடியும் என்று பாவம் அவர் அப்போது எதிர்பார்க்க வில்லை.

ஆயினும் நமது ஜனாதிபதியின் மீது குற்றம் இல்லை. அந்த வாரம் முழுவதும் அவருக்குக் கடுமை யான அலுவல்கள். லெனின்கிராடுக்கும் ஆர்மீனியா வுக்கும் போய்விட்டு கிரிமியாவில் ஒருநாள் ஓய் வெடுத்துக் கொள்வதாக இருந்தார். யால்டா மாநாடு நடைபெற்ற லிவேடியாவுக்கும், அப்போது சர்ச்சில் தங்கியிருந்த வோரன்ட்செங் அரண்மனைக்கும். 1955ல் ஜவாஹர்லால் நேரு விஜயம் செய்த இந்த ஆரோக்கிய நிலையத்துக்கும் அவர் வருவதற்கு ஒப்புக் கொண் டார். கடைசி நிமிடத்தில் திட்டத்தில் சில மாறு தல்கள் ஏற்பட்டதால் லிவேடியா தவிர இதர இடங் களுக்கு வர நேரம் கிடைக்கவில்லை.

ஜனாதிபதி வரமாட்டார் என்ற செய்தி வந்ததைத் தொடர்ந்து மாஸ்கோவிலுள்ள நமது முதல் காரிய தரிசி ஜெயின் எங்களுக்கு வந்த கடிதங்களுடன் இங்கு வந்தார். ஜனாதிபதி வரமுடியாமற் போன சூழ்நிலையை சுஷெங்காவுக்கு ரஷ்யமொழியில் விளக்கிச் சொல்லு மாறு கேட்டுக்கொண்டேன். "வாழ்க்கையில் இது போன்றவை நடக்கின்றன" என்றார் அவர் தத்துவ ரீதியாக.

நானும் அஞ்ஜியும் ஜனாதிபதியைச் சந்தித்து அவருடன் ஒரு மணி நேரம் தங்கினோம். லட்சுமி மேனன் கூட வந்திருந்தார். அமெரிக்காவுக்கும் அவர் ஜனாதிபதியுடன் சென்றிருந்தார். அவருடன் இருப்பது ஜனாதிபதிக்கு உற்சாகம் தருவதாக இருக் கிறது என்பது தெளிவு. யாருக்குத்தான் இராது? அண்மையில் நடைபெற்ற ஆபரேஷனுக்குப் பிறகு

koviloor Acadamy

ஜனாதிபதியின் உடல் இளைத்திருப்பதைக் கண்டோம். "கடன் வாங்கிய நேரத்தில் நாம் வாழ்கிறோம்" என்றார் அவர். ஆனால் எப்போதும் போலவே தெளிந்த அறிவுடனும் சுமுகமான இயல்புடனும் அவர் இருந்தார். 33 ஆண்டுகளுக்கு முன்பு பௌத்த மதம் குறித்து சொற்பொழிவாற்ற இலங்கை வந்திருந்த அவர் தம் மனைவியுடன் எங்களுடன் தங்கியிருந்ததை நினைவுபடுத்தினார். நான் கேட்ட பேச்சுக்களிலேயே அற்புதமானது அது. குறிப்புகளோ அபிநய ஆரவாரமோ இன்றி அழகழகான வார்த்தைகளைக் கோர்த்து ஹரித்துவாரில் கங்கை கம்பீரமாகப்பாய்வது போல ஒரு மணி நேரம் அருமையாகப் பேசினார்.

போரின்போது சுங்கிங்கில் எங்களுடன் தங்கியதையும் ராதாகிருஷ்ணன் நினைவு படுத்தினார். அங்கும் அவர் பல உரைகளை நிகழ்த்திய போதிலும் அவற்றின் இனிமை மொழிபெயர்ப்பிலே இல்லாமல் போய் விட்டது. உலகியல் வாதிகளான சீனர்களால் அதனை ரசிக்கவும் முடியவில்லை. 19;6ல் இந்தியாவின் உப ஜனாதிபதியென்ற முறையில் சோவியத் யூனியனுக்கும் போலந்துக்கும் வந்தபோது அவருடன் இருக்கும் பேறு எங்களுக்குக் கிடைத்தது. இப்போது மற்றொரு தூதுவருக்கு அந்தப் பெருமை கிட்டியுள்ளது. சோவியத் யூனியனில் இருந்த நான்கு இந்தியத் தூதுவர்கள்—ராதாகிருஷ்ணன், சுபிமல்தத், டிக்கி கௌல், நான்—ஏக காலத்தில் இங்கு இருக்க நேர்ந்ததைப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டியுள்ளன.

தாம் தூதுவராக இருந்த காலத்துக்குப் பிறகு சோவியத் யூனியனில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் தம்மைப் பெரிதும் கவர்ந்ததாக ராதாகிருஷ்ணன் கூறினார். இவை உலகியல் மாறுதல்கள் மட்டும்

koviloor Acadamy

இல்லாமல் மதத் தொடர்பில்லாத கருத்தில் ஆக்மீக மாறுதல்களாகவும் இருப்பது அவருக்கு விசேஷ மகிழ்ச்சியையளித்தது. ஸ்டாலின் ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் அவர் தூதுவராக இருந்தார். அப்போது பனிப்போர் உச்சகட்டத்தில் இருந்தது. நமது தத்துவ ஞானத் தூதுவரிடம் ஸ்டாலினே மனம் இளகியது போலத் தோன்றியது. ஆயினும் அவர் இறக்கும்வரை இந்தியா-சோவியத் உறவில் அடிப்படையான வளர்ச்சி யெதையும் எதிர்பார்க்க முடியவில்லை. 1954லேயே அமெரிக்க செனட்டில் ஆற்றிய மறக்க முடியாத சொற்பொழிவில் ராதாகிருஷ்ணன் இவ்வாறு சொன்னார்: "காலம் புண்ணை ஆற்றிவிடும்; மனித இயல்பு நெகிழும் தன்மையுள்ளது. சமூக அரசியல் அமைப்புகள் மாறக்கூடியவை. எல்லாவற்றுக்கும் மேலாக இறைவனின் கருணை இருக்கிறது. இதற் கெல்லாம் வாய்ப்புக் கொடுத்தால் இன்று வல்லரசு களைப் பிரிக்கும் வேறுபாடுகள் பத்தாண்டுகளுக்குள் பழங்கதையாகிவிடும்." அப்போது அவருடைய பேச்சைக் கேட்டவர்களில் கென்னடி ஒருவர். ஏழாண்டு களுக்குப் பின்னர் அவர் அமெரிக்காவின் ஜனாதிபதி யானார்; ராதாகிருஷ்ணன் இந்தியாவின் ஜனாதிபதி யானார். 1963ல் இருவரும் வாஷிங்டன் ஒயிட்ஹவுஸில் சந்தித்தபோது கென்னடி, ராதாகிருஷ்ணன் கூறியதை நினைவுபடுத்தி 1954ல் அவர் கூறியது இப்போது நிறைவேற்றப்பட்டு விட்டது குறித்து தாம் மகிழ் வதாகக் கூறினார். இதில் கென்னடியும் முக்கிய பங்கு வகித்தார் என்பதில் ஐயமில்லை.

"இறைவனின் கருணை" டெக்ஸாஸில் கென்னடி கொல்லப்படாமல் சாப்பாற்ற முடியாமற் போனது இரக்கத்துக்குரியதாகும்.

koviloor Acadamy

மில்கோர், செப்டம்பர், 23

இந்த ஆரோக்கிய நிலையத்தில் பலர் எங்களுக்கு நண்பர்களாகி விட்டனர். இங்குள்ள எல்லோரும் நட்புறவுடன் நடப்பவர்கள் தான். மாஸ்கோவில் ஒன்பது ஆண்டுகள் பணியாற்றி ரேடியோவிலும் டெலிவிஷனிலும் பலமுறை பேசியிருப்பதால் மேனன் என்ற பெயர் அனைவரும் நன்கறிந்ததே. ஆயினும் சில சமயங்களில் கிருஷ்ணமேனன் என்று கருதிக் குழம்புவதும் உண்டு. ஆயினும் அதனால் இங்கு இடைஞ்சல் எதுவும் இல்லை. மாறாக அமெரிக்காவில் நான் பேசிய இடங்களிலெல்லாம் தலைவர் என்னை "தூதுவர் கே. பி. எஸ். மேனன். கிருஷ்ணமேனனுடைய உறவினர் அல்ல" என்று அறிமுகப்படுத்துவது வழக்கம்.

நேற்று தலைமயிர் வெட்டிக்கொண்டேன். நான் ஐ. நாவுக்குப் போனதுண்டா என்று சவரத் தொழிலாளி கேட்டார். இரண்டு மூன்று முறை போயிருக்கிறேன் என்றேன். "ஓ! நான் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஐ.நா. காரியாலய சவரத் தொழிலாளி அண்மையில் இங்கு வந்திருந்தார். நீங்கள் மயிர் வெட்டிக் கொள்ளும் போதெல்லாம் 20 டாலர் நோட் ஒன்றை எடுத்துக் கொடுப்பீர்கள் என்று அவர் கூறினார்" என்றார். அவர் கிருஷ்ணமேனனைப் பற்றிச் சொன்னார் என்பது தெளிவு. அமெரிக்காவிலும் கூட சிலருடைய கண்களுக்கு கிருஷ்ணமேனன் வீரராகத் தோன்றுகிறார் என்றால் நல்லதுதானே!

அனுஜி இங்கு எல்லோருக்கும் பிரியமானவள். எவ்வாறு உங்கள் உடலை இப்படி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று அவர்கள் கேட்பதில் களைப்படைவதே இல்லை. (எத்தனையோ குறைகளைப் புடவை மறைத்து விடுகிறது. ஆனால் அவற்றைப் புலப்படுத்

koviloor Acadamy

துவதற்கே மேனாட்டு உடைகள் தயாரிக்கப்படுவது போல் தோன்றுகிறது என்பது அவர்களுக்குத் தெரியாது) உடல் பருமனைக் கொண்டே ரஷ்யர்கள் ஒருவருடைய வயதை மதிப்பிடுகிறார்கள். அனுஜி 60 வயதைக் கடந்தவள் என்பதை அவர்களால் நம்பவே முடியவில்லை.

"என்னைப் பாருங்கள். எனக்கு 45 வயது தான் ஆகிறது. இதற்கு நான் என்ன செய்வது?" என்றார் உடல் பருத்த ஒருவர்.

"ரொட்டியைக் குறைத்துச் சாப்பிடுங்கள்" என்றாள் அனுஜி.

சொல்வது செய்வதைவிட எளிதுதான். குளிர் மிகுந்த ரஷ்யாவில் இந்தியாவைவிட அதிக கலோரிகள் ஒருவருக்குத் தேவைப்படுகிறது.

உடலமைப்பு, உணவு, பாலே, இசை, காலநிலை தவிர பேச்சுக்கு ஏற்ற விஷயமாக எப்போதும் இருப்பது போர். லோவில் தன் குழந்தைப் பிராயத்தைக் கழித்த ஒருத்தி, போர் எப்படி தன் நாட்டை போலந்திடமிருந்து ரஷ்யாவுக்கும், ரஷ்யாவிடமிருந்து ஜெர்மனிக்கும், பிறகு மீண்டும ரஷ்யாவுக்கும் உடமையாக்கிற்று என்பதைக் கூறினாள். ஜெர்மானியருக்கு யூதர்களிடம் அளவு கடந்த வெறுப்பு. ஆறு வயதுக் குழந்தையாக இருந்தபோதே ஜெர்மானியர் யூதர்களுக்கிழைத்த கொடுமைகளை அவள் கண்டிருக்கிறாள். அவ்வப்போது ஜெர்மானியர் வருவார்கள். அவர்கள் பிரதேசம் முழுவதையும் சூழ்ந்து கொள்வார்கள். யூத ஆண்களையும் பெண்களையும், குழந்தைகளையும் வீதிக்கு இழுத்து வந்து வரிசையாக 'மெஷின் கன்' னினால் சுட்டு விட்டுப் போவார்கள் என்று அவள் கூறினாள். ஒரு சமயம் அவளுடைய வீடு சோதனை

koviloor Acadamy

யிடப்பட்டது- பயந்து போன அவளுடைய அக்கா ஓடிப்போக முயன்றபோது தாயார் கையைப்பற்றி இழுத்து நிறுத்தினாள். இல்லாவிட்டால் ஜெர்மானியர் அவளைச் சுட்டுக் கொன்றிருப்பார்கள். அவளுடைய தந்தை அண்டை வீட்டிலிருந்த மிகவும் நல்லவரான ஓர் யூதருக்கு நண்பர். ஆனால் ஜெர்மானியரிடம் இருவருமே தாங்கள் நண்பர்களல்ல என்று மறுக்க வேண்டியிருந்தது. அது அப்போதைக்கு அவளுடைய தந்தையின் உயிரைக் காப்பாற்றியது. ஆனால் அவர் கடுமையாக அடிக்கப்பட்டதன் காரணமாக சில மாதங்களில் உயிர் துறந்தார். ஜெர்மானியர் யூதர்களிடம் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டதற்கான தடையங்களை ஒஸ்விஸிபம்மில் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் நேரடியாகப் பார்த்த ஒருவரிடமிருந்து அதுபற்றிக் கேட்பது வேறல்லவா?

ஜெர்மானியர் கிரிமியாவை எவ்வாறு ஆக்கிரமித்துக் கொண்டார்கள் என்பதையும், எப்போதுமே அது தங்களுடையதாகி விட்டதாக எண்ணிக்கொண்டு இரண்டாண்டுகள் நடந்து கொண்டதையும் பற்றிக் கேள்விப்பட்டோம். லிவேடியாவிலுள்ள ஜார் அரண்மனையில் ஸ்வஸ்திகா சின்னத்தைக் கூடப் பொறித்து விட்டார்கள். வோரன்ட்செவ் அரண்மனையைத் தமக்கென கோயபல்ஸ் ஒதுக்கி வைத்துக்கொண்டார். இந்த அரண்மனையில் தான் 1955ல் கிரிமியாவுக்கு விஜயம் செய்தபோது ஜவாஹர்லால் நேருவுக்கு மகத்தான விருந்து அளிக்கப்பட்டது.

பல நூற்றாண்டுகளாக இங்குள்ள டார்டார்கள் பக்சிஸெராயைத் தலைநகராகக் கொண்டு ஆட்சியும் நடத்தியிருக்கின்றனர். போரின்போது அவர்கள் துரோகிகளாக மாறி ஜெர்மானியருக்கு ஒற்றர்களாக

koviloor Acadamy

வும் வழிகாட்டிகளாகவும் இருந்தனர். சோவியத் சர்க்காரால் கூட்டுப் பண்ணையாகச் செய்யப்பட்டு விட்ட அவர்களுடைய நிலங்களைத் திரும்பப் பெற்றுத் தருவதாகக் கூறி ஜெர்மானியர் அவர்களை ஏமாற்றினர். போருக்குப்பின் டார்டார்களுக்கு உரிய தண்டனை கிடைத்தது. சோவியத் யூனியனின் தூரதூர இடங்களுக்கெல்லாம் அவர்கள் அனுப்பப்பட்டுவிட்டனர். கிரிமியாவிலிருந்த டார்டார்கள் அனைவரும் அகற்றப் பட்டு விட்டனர். டார்டார் ஊர்ப் பெயர்களும் கூட மாற்றப்பட்டு விட்டன.

அடுத்த அறையிலிருந்த ஒரு நண்பர் எல்லா முனைகளிலும் தான் போரிட்டு எட்டு முறை காயமடைந்திருப்பதாகக் கூறி தன் உடலின் பல்வேறு இடங்களிலேற்பட்ட காயங்களைக் காட்டினார். கிரோவ் கிராடில் கலாச்சாரப் பணிபுரியும் மற்றொருவர் மார்ஷல் ஜுகாவின் படையில் தான் பெர்லினுக்குச் சென்றதாக கூறினார். ஜுகாவ் இப்போது இருக்குமிடம் தெரியாமல் போய் விட்டது பற்றிக் கேட்டு அவரைத் தர்ம சங்கடமான நிலைக்குட்படுத்த விரும்பவில்லை. அதற்குப் பதிலாக சர்ச்சைக்குரிய இளம் கவியான யெவ்டுஷெங்கோ பற்றிக் கேட்கலாமென எண்ணினேன். வெளிநாட்டில் பிரசுரமான அவரது சுயசரிதை சோவியத் யூனியனில் கண்டனப் புயலை எழுப்பியது.

“யெவ்டுஷெங்கோ நல்ல கவிஞர்தானா?” என்று கேட்டேன்.

“பரவாயில்லை. ஆனால் அவர் சில தவறுகளைச் செய்தார். அவற்றைத் திருத்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.”

ஒரே மாதிரியான இந்தப் பதிலைக்கேட்டு எனக்கு ஏமாற்றமாக இருந்தது. சோவியத் யூனியனிலுள்ள

koviloor Acadamy

பெரும்பாலானவர்கள் சர்ச்சைக்குரிய விஷயங்களை வெளிநாட்டாருடன் விவாதிப்பது இல்லை. அவர்களிடையேயும் கூட இந்தியாவிலும் அமெரிக்காவிலும் உள்ளதுபோல் அரசியல், சம்பாஷணையில் இடம் பெறுவது இல்லை.

மாலையில் அனுஜியும் நானும் கடற்கரைக்கு நடந்து சென்றோம். எனக்கு அது ஒரு வீரச் செயலாகவே இருந்தது. இருள் சூழும் நேரம். கடற்கரை ஜனசஞ்சாரமற்று இருந்தது. போகும் வழியில் நான்கு சிறுமிகள் எங்களைப் பார்த்தும் கவனியாததுபோல் நடந்துகொண்டனர். இப்போது அவர்கள் எங்களுக்கு மிக அருகாமையில் இருந்தார்கள். அவர்கள் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கிட விரும்பாத நாங்கள் அவர்களைக் கவனியாததுபோல் இருந்தோம். திடீரென்று ஒரு பெண் அனுஜியிடம் வந்து ஒரு ரோஜாப் பூவைக் கொடுத்து தன் இனிய குரலில் "அத்தை இதை வாங்கிக்கொள்வீர்களா?" என்றாள். மற்றொரு பெண் வேறொரு ரோஜா மலருடன் வந்து "இதையும் வாங்கிக்கொள்ளுங்கள்" என்றாள். அனுஜி அவற்றை வாங்கித் தலையில் செருகிக்கொண்டாள். இந்தியாவில் ரோஜாப்பூ உண்டா? வேறு என்ன பூக்களெல்லாம் இருக்கிறது? இந்தியாவில் மலைகளில் தவிர வேறெங்கும் உறைபனி கிடையாதல்லவா? என்றெல்லாம கேட்டார்கள்.

குளிர் காலத்தில் மாஸ்கோவுக்கு வந்த எங்கள் பேரன் சங்கர் முதல் தடவையாக உறை பனியைப் பார்த்துவிட்டு, அதில் கொஞ்சம் ஒரு புட்டியில் எடுத்துக்கொண்டுபோய் சென்னையிலுள்ள தன் தங்கைகளுக்கு காட்ட விரும்பியதுபற்றிக் கூறினேன்.

'இந்தியாவில் என்னென்ன விலங்குகள் உள்ளன?"

koviloor Acadamy

"குரங்குகள்!"

''எங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்- குரங்குகளைப் பற்றி ஏதாவது கதை சொல்லுங்கள்.'

ஓடும் ரயிலில் அறைபட்டு ஒரு குரங்கு செத்து விட்டதையும் உடனே கூச்சலிட்டுகொண்டு வந்த ஒரு குரங்குப் பட்டாளம் ரயில்பாதையிலமர்ந்து கொடைக்கானல் ரோட் நிலையத்துக்கருகே மேற்கொண்டு ரயிலைப் போகவிடாமல் செய்ததையும் கூறினேம்.

"அடுத்தபடியாக யானைகள்!"

"நேரு மாமா ரஷ்யக் குழந்தைகளுக்காக அனுப்பிய யானையின் படங்களை நாங்கள் பார்த்திருக்கிறோம்."

எல்லோருமே ஒன்பது வயதானவர்கள். அவர்கள் தங்களுடைய பெயர்களையும் சொன்னார்கள். இரண்டு பேருக்கு டானியா என்றும் ஒருத்திக்கு வாலியா என்றும் மற்றொருத்திக்கு நடஷா என்றும் பெயர். நடஷா அவர்களுக்குத் தலைவிபோலத் தோன்றினாள். அவர்கள் எங்களுக்குக் குட்டிக்கரணம் போட்டுக் காண்பித்தார்கள். நாங்கள் பாடுகிறோம். கேட்கிறீர்களா? என்று கூறிவிட்டு நால்வரும் சேர்ந்து பாடினார்கள். குழந்தைகள்தான் எவ்வளவு கல்மிஷமின்றி இருக்கிறார்கள்? ரஷ்யக் குழந்தைகள் எல்லாமே வெகுளியாகவும் ஒழுங்கு முறையுடனும் இருக்கின்றன.

மிஸ்கோர், அக்டோபர், 1

மாஸ்கோவை விட்டு நான் கிரிமியாவுக்குப் புறப்பட்டபோது நான் எப்படி ஒரு மாதத்தை அங்கு கழிக்க முடியுமென்றும் எதுவும் செய்யாமல் தன்னால் ஒரு வாரம் கூட இருக்க முடியாது என்றும் டிக்கி

koviloor Acadamy

கூறினர். அவர் என்னைவிடத் துடியானவர். ஆனல் அவரும்கூட இயற்கையின் அரவணைப்பில் எதுவும் செய்யாமல் இன்பமாகப் பொழுதுபோக்குவதை அனுப விக்க முடியும். ஆரோக்கிய நிலையத்தில் படிப்பதை அனுமதித்திருக்கிறார்கள். எழுதுவதற்கு அனுமதிப் பது இல்லை. எனவே யாருக்கும் தெரியாமல் கதவை மூடிக்கொண்டுதான் எழுதுவது வழக்கம். என்னுடைய ரகசியம் அனுஜிக்கும், ஒலிச்காவுக் கும்தான் தெரியும். அவர்கள் அதை வெளியில் கூற மாட்டார்கள்.

அனுஜிபிடம் நிறைய ரஷ்யப் புத்தகங்கள் உள்ளன. ஏககாலத்தில் மூன்று புத்தங்களைப் படிக் கக்கூடியவள் அவள். நானும்கூட இப்போதுதான் யெவ்டுஷெங்கோவின் சுயசரிதையைப் படித்து முடித் தேன். இது முதலில் பாரிஸில் வெளியான பத்தி ரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்தது. அது சோவி யத் யூனியனில் பலத்த கண்டனத்தை எழுப்பியது. ஏன் அப்படி என்று எனக்கு விளங்கவில்லை. ஏனெனில் இந்தப் புத்தகத்தைப் படிக்கும் யாருக்கும் சோவியத் யூனியனிடம் மதிப்பே ஏற்படும். வெளிநாட்டி லுள்ள "பிற்போக்கு" பத்திரிகையொன்றில் பிரசுரித் ததுதான் அவர் செய்த குற்றம். மரபு வழி எழுத்தாளர் களையும் விமரிசகர்களையும் அதிகாரிகளையும் அவர் கண்டித்திருந்ததை அயல்நாடுகள் சோவியத் யூனிய னைத் தாக்குவதற்குப் பயன்படுத்தக் கூடும் என்றனர். இதற்கு யெவ்டுஷெங்கோ நல்ல பதிலளித்திருந்தார். நம்முடைய சுயவிமரிசனத்தை சோவியத் யூனியனின் எதிரிகள் பயன்படுத்திக்கொள்ளக்கூடும். ஆனல் உண்மையைக் கூருமல் இருக்க அது சமாதான மாகாது என்று லெனினே கூறியிருக்கிருர். குருஷ்சாவி னுடைய கருத்தும் அதுதான். கட்சியின்

koviloor Acadamy

இருபதாவது மாநாட்டில் ஆற்றிய புகழ்பெற்ற சொற்பொழிவில் ஸ்டாலின் பற்றிய உண்மையைக் கூறினார்.

யெவ்டுஷெங்கோவுடைய புத்தகத்துக்கு "முதிராத சுயசரிதை" என்று பெயர். ஆம் அது முதிராத ஒன்று தான். பின்னால் தன்னுடைய சுயசரிதையை எழுத வேண்டுமென்பதற்காக அவர் அதற்கேற்ப தனி வாழ்வை அமைத்துக்கொண்டிருந்தால் இதை விட நன்றாக எழுதியிருக்க முடியாது. 12-வது வயதில் தன் தெருவில் எல்லோருக்கும் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த ஒருவனை அடித்து அவன் கொட்டத்தை அடக்குவதற்காக அவர் மல்யுத்தம் பயில்கிறார். ஸ்டாலினுடைய சவ ஊர்வலத்தின்போது கூட்டத்தின் நெரிசலில் சிக்கி ஆண்களும் பெண்களும் உயிரிழந்ததைக் கண்ட அவர், பலரைத் துணைக்குச் சேர்த்துக்கொண்டு கூட்டத்தை ஒழுங்குபடுத்தி, பலருடைய உயிரைக் காப்பாற்றுகிறார். கவிஞனாக வேண்டும் என்ற ஆசை பெழுந்த அவர் தன் தாயாரிடமிருந்து கவிஞர்கள் எல்லாம் குடிகாரர்கள் என்று கேள்விப்படுகிறார். எனவே தானும் நண்பர்களுடன் இரு பெண்களையும் கூட்டிக்கொண்டு மதுக் கடைக்குப்போய்க் குடிக்கிறார். எவ்வித லட்சியமுமின்றி சில கவிதைகளை எழுதி அதற்காகக் கொஞ்சம் பணமும் பெறுகிறார். "நமது காலத்தில் ஒரு கவிஞனாக இருப்பதற்கு ஒருவன் கவிஞனுக்கும் அப்பால் இருக்கவேண்டும்" என்று ஸ்லூட்ஸ்கி கூறிய அறிவுரையைக் கேட்டு தன் கவிதை குறித்து அவமானமடைந்த அவர் தான் எழுதியவற்றையும் அதற்கெனப் பெற்ற ரூபாய் நோட்டுக்களையும் கிழித்தெறிகிறார்.

அதன் பிறகு ஒரு லட்சியவாதியாகத் தன்னை மாற்றிக்கொள்கிறார். ஸ்டாலினால் பங்கப்படுத்தப்பட்ட

koviloor Acadamy

புரட்சியின் லட்சியங்களை புனிதப்படுத்துவதுதான் அவருடைய லட்சியம். அவருக்குக் கவிதை போர்க்களமாக இருக்கிறது. காலம் செல்லச்செல்ல தன்னுடைய மக்களுக்காக மட்டுமின்றி மனிதகுலம் முழுவதற்காகவும் தான் போராடவேண்டும் என்று அவர் உணர்கிறார். "தேசியத்தை நான் வெறுக்கிறேன். எனக்கு உலகில் இரண்டு தேசங்கள்தான் உள்ளன. நல்லது கெட்டது ஆகிய இரண்டுமே அவை. நல்ல தேசத்தின் தேசியவாதி நான்" என்கிறார் அவர்.

இருபது வயது பிராயத்திலுள்ள ஓர் இளைஞனிடம் இத்தகைய உணர்வு இருப்பது அசாதாரணமானதாகத் தோன்றலாம். இருந்தபோதிலும் மாபெரும் ரஷ்யக் கவிஞர்களின் வரிசையில் உள்ளவர் அவர். டிசம்பர் எழுச்சியில் புஷ்கின் சம்பந்தப்பட்டிருந்தார். ஆனால் அதற்காக செயிண்ட் பீட்டர்ஸ்பார்க்கில் பலர் கைது செய்யப்பட்டபோது புஷ்கின் அங்கு இல்லாததால் அவர் உயிர் தப்பியது. ஆயினும் பின்னர் ஜார் அவரைத் தெற்கே நாடு கடத்திவிட்டார். "ஒருவர் கவிஞனாகவோ அல்லாமலோ இருக்கலாம். ஆனால் பிரஜையாக இருக்கத்தான் வேண்டும்" என்று நெக்ரஸோவ் எழுதினார். மாயாகோவ்ஸ்கி பேனாவைத் துப்பாக்கிச் சனியனுக்குச் சமமாகக் கூறினார். "பாதுகாக்கப்பட்ட பாதையில் அர்த்தமின்றி சுற்றிச் சுற்றி வரும் பந்தயக் கார் அல்ல கவிதை. மக்களுடைய உதவிக்கு விரையும் ஆம்புலன்ஸ், அது" என்று கிஸ்ஸானேவ், யெவ்டுஷெங்கோவை எச்சரித்தார். "ரஷ்யா சிந்திப்பதற்குக் கவிஞர்கள் உதவினார்கள். எப்போதுமே அவர்கள் நாட்டில் ஆத்மீக ஆட்சியாளர்களாக இருந்திருக்கிறார்கள். ரஷ்யாவின் கொடுங்கோலர்கள் அவர்களைக் கண்டு அஞ்சியது காரணம் இல்லாமல் இல்லை" என்கிறார் யெவ்டுஷெங்கோ.

koviloor Acadamy

அவர் ரஷ்யக் கவிஞர்களைப்பற்றிக் கூறுவது அதே அளவுக்கு ரஷ்ய எழுத்தாளர்களுக்கும் பொருந்தும். டால்ஸ்டாயும் டாஸ்டாவெஸ்கியும் அவர்கள் காலத்திய ஆட்சியாளர்களை விட்டுவைக்கவில்லை. ஸ்டாலின் கடைசி காலத்தில் நான் மாஸ்கோவுக்கு வந்தபோது டாஸ்டாவெஸ்கியின் புகழ் மங்கியிருந்தது. டில்லியிலுள்ள எனது நண்பர் ஒருவர் அவர் எழுதிய "குற்றமும் தண்டனையும்" என்ற நூலின் பிரதியொன்றை வாங்கியனுப்புமாறு கேட்டிருந்தார். மாஸ்கோவிலுள்ள எல்லாப் புத்தகக் கடைகளிலும் தேடியும் அது கிடைக்கவில்லை. ஆனால் ஸ்டாலின் இறந்தவுடனேயே டாஸ்டாவெஸ்கி மதிப்பு உயர்ந்து விட்டது அவர்மறைந்து 75ஆண்டுகளானதை யொட்டி நடைபெற்ற கூட்டத்தில் நான் கலந்துகொண்டேன். "மாபெரும் வெற்றிகளும் பெரும் பொய்களும் நிறைந்த காலம்" என்று யெவ்டுஷெங்கோ வருணிக்கும் ஸ்டாலின் காலத்தில் டாஸ்டாவெஸ்கி ஒரு "சோக" எழுத்தாளராகக் கருதப்பட்டார். யெவ்டுஷெங்கோவையும் இதேபோல் குற்றம் சாட்டினர். "சோகம் இல்லாமல் சிந்திக்க யாராலும் முடியாது. சோகத்தை அபாயகரமாகக் கருதுபவர்கள் அவர்களே பெரிதும் அபாயமானவர்கள்" என்கிறார் யெவ்டு ஷெங்கோ.

தான் ஒரு தீவிர கம்யூனிஸ்ட் என்பதை அவர் திரும்பத் திரும்ப வற்புறுததிக் கூறுகிறார். "என்னை கம்யூனிஸ்டாக கருதுங்கள்" என்ற கவிதையொன்றை அவர் எழுதினார். "கம்யூனிஸ்ட் என்பவன் தன் சொந்த நலனை விடப் பொது நலனைப் பெரிதாக மதிப்பவன். ஆனால் தன் பொதுநலனின் பெயரால் வேண்டுமென்றே பிறருடைய உயிரை அழிக்காதவன்" என்று அவர் விளக்கம் தருகிறார். ஸ்டாலின் செய்ததும்

koviloor Acadamy

குருஷ்சாவ் எப்போதும் செய்யாததும் இதுவேதான். "லெனினிஸத்தின் லட்சியங்களை மீண்டும் நிலைநாட்டுவதே" தமது கொள்கை என்று குருஷ்சாவ் கூறியுள்ளார். குருஷ்சாவ் அரசியலில் என்ன செய்ய விரும்பினாரோ அதையேதான் யெவ்டுஷெங்கோ கவிதையில் செய்ய விரும்பினார். "ஸ்டாலினுடைய வாரிசுகள்" என்ற அவருடைய உணர்வு மிக்க கவிதைகளை வெகு காலத்துக்கு யாரும் பிரசுரிக்கவில்லை. ஏனெனில் கம்யூனிஸத்துக்கு விரோதமானது என்று அது கருதப்பட்டது. யெவ்டுஷெங்கோ அதனைக் குருஷ்சாவுக்கு அனுப்பினார். மறுநாளே அது பிராவ்தாவில் பிரசுரமாயிற்று.

ஆயினும் குருஷ்சாவ் கடைப் பிடிக்காமல் இருக்க முடியாத கட்டுப்பாடுகள் யெவ்டுஷெங்கோவுக்கு இல்லை. குருஷ்சாவ் தமது கட்சியின் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியை மட்டுமின்றி முடியுமானால் இதர கம்யூனிஸ்ட் கட்சிகளையும் தம்மை ஆதரிக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஸ்டாலினைப்போன்று அவர் சர்வாதிகாரியல்ல. ஸ்டாலினைப்போல அவர் சட்டளையிட முடியாது. தம்முடைய கருத்துதான் சரியானது என்று விளக்கிக் கூறி சகாக்களை ஏற்கச் செய்ய வேண்டும். கவிஞன் தன் இஷ்டம்போல் இருக்க முடியும். அரசியல் வாதியால் முடியாது. சாத்தியமானதைச் செய்யும் கலையே அரசியல் என்ற கிளெமன்சுவின் கொள்கையை எப்போதும் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

ஸ்டாலினுடைய மறைவுக்குப் பின்னர் சோவியத் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் பிரமாண்டமானவை என்பதை யெவ்டுஷெங்கோ அங்கீகரிக்கிறார். யூத டாக்டர்கள் விடுவிக்கப்பட்டது, காவல் முகாம்கள் மூடப்பட்டது, பெரியாவின் தூக்கு

koviloor Acadamy

தண்டனை ஆகியவற்றுடன் அது தொடங்கியது. யெவ்டு ஷெங்கோ பெரியாவை ஒரு முறை பார்த்திருக்கிருர். கம்பளியினுல் பாதி மறைக்கப்பட்ட பெரியாவின் கழுகினுடையதைப் போன்ற முகம், இரவில் ஒரு பெண்ணை வேட்டையாட அவர் சென்றுகொண்டிருந்த போது காரின் கண்ணுடியில் ஒட்டியவாறு இருந்தது. அன்ருட உபயோகப் பொருள்கள் அதிகம் கிடைக்கச் செய்வதாகக் கூறி மாலங்கோவ் மக்களைத் திருப்தி படுத்த முயன்ருர். ஆனுல் இது மக்களைத் திருப்தி படுத்தவில்லை. "ஏனெனில் உணவு, உடை, வீடு ஆகியவற்றுடன் மட்டும் இருந்துவிட அவர்கள் தயாராயில்லை. அவர்கள் உண்மையை அறிய விரும்புகிருர்கள்" என்கிருர் யெவ்டுஷெங்கோ. 20-வது காங்கிரஸில் குருஷ்சாவ் ஸ்டாலின் பற்றிய உண்மையை அவர்களுக்குக் கூறினுர். "குருடர்களுக்குப் பார்வை கிடைக்கத் தொடங்கியது போல அது இருந்தது" என்கிருர், யெவ்டுஷெங்கோ.

ராஜதந்திரிகளாகிய நாங்கள் இந்த அற்புதத்தை கண்ணுரக் கண்டோம். முதலில் எங்களுக்கு வியப்பாக இருந்தது. 1956 மார்ச் 20-ந்தேதி என்னுடைய நாட்குறிப்பில் இவ்வாறு எழுதினேன். "ஸ்டாலினை இவ்வளவு கடுமையாகத் தாக்குவதென்று சோவியத் தலைவர்கள் ஏன் தீர்மானித்தார்கள்? கடந்த மூன்ருண்டுகளாக அவர்கள் நிதானமாக அவருடைய நிலையைத் தாழ்த்தி வருகிருர்கள். தீவிரமாகத் தாக்குவதின்மூலம் ஜார்ஜியாவிலும் இதர இடங்களிலும் தீவிர எதிர் விளைவுகளை ஏற்படத் தூண்டுவதற்குப் பதிலாக இதே முறையைத் தொடர்ந்து கையாண்டிருந்தால் நன்ருக இருந்திராதா? ஜார்ஜியாவில் அவருக்குள்ள மதிப்பையும் பெருமையையும் இங்குமங்கும் இன்னமும் சக்தியுடன் விளங்கும் தேசிய உணர்வை

8

koviloor Acadamy

யும் அவர்கள் குறைத்து மதிப்பிடுகிறார்களா? அல்லது இந்தத் தீவிரம் ஸ்லாவ் மக்களின் மன இயல்பு செயல் படுவதன் காரணமாகவா? ஒரு வேளை அவர்கள் கவனமாகப் பரிசிலனை செய்தபிறகு இப்போது வரலாற்றில் உரிய இடத்துக்கு ஸ்டாலினைத் துரத்தத் தவறிவிட்டால் வரலாறே முன்னேக்கி நகர முடியாது. என்ற முடிவுக்கு அவர்கள் வந்திருக்கலாம். ஏனெனில் எந்தப் பக்கம் அவர்கள் திரும்பினுலும் ஸ்டாலின் கூறியது எதையேனும், அவர் வகுத்த கொள்கைகள் எதையேனும், அவர் செய்த காரியங்கள் எதையேனும், தங்கள் பாதையில் தடையாக இருப்பதைக் கண்டார் கள். எனவே அரசியலைத் தூய்மைப்படுத்த இந்த ஒரு வழிதான இருந்தது."

என்னுடைய வியாக்யானத்தை உறுதிப்படுத்து வதாக இருந்ததால் யெவ்டு ஷெங்கோவின் புத்தகத் தைப் படிப்பதில் நான் மகிழ்ச்சியடைந்தேன். 20வது காங்கிரஸ் பற்றி ஜான் ஃபாஸ்டர் டல்லஸுடைய மதிப்பீட்டிலிருந்து முற்றிலும் மாறுனது. "சோவியத் யூனியனில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகிறது. மேனுடுகளில் புலப்பட்ட பலத்தி னுலும் உறுதியினுலும் சோவியத் யூனியன் தான் போற்றிவந்த லட்சியங்களைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது" என்று அவர் கூறினுர். அடுத்து நடந்த சம்பவங்கள் சோவியத் யூனியனில் நெருக்கடி ஏற்படவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டியது. 20வது காங்கிரஸில் மார்க்ஸியத்தின் சில அடிப்படைக் கொள்கைகளில் கூட மாறுதல் செய்ததற்கு காரணம் வெளி நிர்ப்பந்தம் அல்ல; உள் நாட்டிலெழுந்த உணர்வுதான் என்பதும் அதே அளவு தெளிவாயிற்று. இந்த மாற்றங்கள் குறித்து என் னுடைய நூலில் "கிரெம்லினில் வசந்தகாலம்" என்ற

koviloor Acadamy

தலைப்பில் விவரித்துள்ளேன். அதன் பிறகு கடும் பனியும் குளிர்காற்றும் ஏற்பட்டுள்ளதையும் நூலில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் வசந்தத்தின் முக்கிய தன்மையை மாற்ற சக்தியுள்ளவையாக அவை இல்லை. யெவ்டு ஷெங்கோவ் கூறுவதுபோல் "அது ஓரடி இடது புறமும், ஓரடி வலது புறமும், ஓரடி பின் புறமும் செல்கிறது. ஆனால் அதே நேரத்தில் இரண்டு அல்லது மூன்று அடி முன்னேக்கிச் செல்கிறது." காலஞ்சென்ற ஜான் ஃபாஸ்டர் டல்லஸ்ஸின் செல்வாக்கு இருந்த சர்க்காரிலிருந்து முற்றிலும் மாருன– அமெரிக்க சர்க்காரின் ஒத்துழைப்புடன் அணு ஆயுத சோதனையைத் தடை செய்வதன் மூலம் சமாதானத்துக்கான ஒரு முக்கிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது வசந்தம் சோவியத் யூனியனிலும் அமெரிக்காவிலும் மட்டுமின்றி மனிதகுலம் முழுவதற்கும் வரத் தொடங்கிவிட்டது போல் தோன்றியது.

ஆயினும் சீனுவில் இன்னும் கடுங்குளிராகவே உள்ளது.

koviloor Acadamy

8. மீண்டும் மாஸ்கோ

மாஸ்கோ, அக்டோபர், 5

இந்தியா திரும்பு முன்பு சிலதினங்கள் தங்கு வதற்காக மீண்டும் மாஸ்கோவிலுள்ள நமது தூதரகத் துக்கு வந்திருக்கிறோம். சென்ற மாதத் தொடக் கத்தில் இங்கு வந்தபோது இருந்த உற்சாகம் இப் போது இல்லை. உண்மையில் எங்கள் உள்ளம் சோர் வாகவே இருந்தது. காலநிலைதான் அதற்குப் பெரு மளவு காரணம். வானம் மப்பு மூடியிருக்கிறது. காலை, நடுப்பகல், மாலை ஆகிய நேரங்களின் வெப்ப நிலையில் எவ்வித வேறுபாடும் இல்லை. தூற்றலும் போடுகிறது. இன்று காலை உறைபனி கூடப் பெய் தது. உண்மையாகப் பனி விழுவது போன்ற அழகு எதுவுமே கிடையாது. சில மரங்கள் பொன்னிற மாகவும் சிவந்தும் காட்சியளித்தன. ஆனால் மற்றவை தம் இலைகளை உதிர்த்துவிட்டுத் தம் காலம் முடிந்து விட்டதேயென்று கண்ணீர் விடுவதுபோல் இருந்தன. வஸந்த காலத்தில் நிச்சயமாக மீண்டும் உயிர் பெற லாம் என்ற உண்மை அவைகளுக்கு ஆறுதலாக இல்லை.

கிரிமியாவிலிருந்து வந்த அனுஜிக்கு இந்த திடீர் மாற்றம் ஊறு செய்தது. நாங்கள் திரும்பி வந்ததி லிருந்தே கடுமையான தலைவலியினால் படுத்த படுக்கையாக இருக்கிறாள். சாரதா அன்புடன் அனுப்பும் ரசம் தவிர வேறு எந்த உணவையும் அவளால் சாப்பிட முடியவில்லை. ஆயினும் கிரிமி யாவில் தன் எடையில் கூடிய இரண்டரை கிலோவை

koviloor Acadamy

இப்போது இழந்து வருவது குறித்து அவளுக்கு மகிழ்ச்சிதான்.

எங்களுடைய சோர்வுக்கு மனஇயல்பும் ஓரளவு காரணம் என நினைக்கிறேன். தூதுவர் ஆறு வார விடுமுறையில் போயிருப்பதால் இந்தப் பெரிய கட்டிடத்தில் நாங்கள் தனியே இருக்கிறோம். எனவே வெறுமையுணர்வு எங்களை ஆட்கொண்டுள்ளது. நாங்கள் இங்கு வசித்த ஒன்பது ஆண்டுகளில் எல்லா நிகழ்ச்சிகளிலும் நடுநாயகமாக நாங்கள் இருந்தோம். கிழக்கும் மேற்கும் கூடும் மாபெரும் இடமாக நமது தூதரகம் இருந்தது. இப்போது ஒதுங்கியவர்களாகி விட்டோம். கடந்த காலத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதுபோல உணர்கிறோம். எப்போதுமே அது துயரம் தரும் உணர்வுதானல்லவா? புகழ்பெற்ற பாலே நடனக்காரியான யுலனோவாவின் உணர்வு அவள் தன் கடைசி நாட்டியத்தை ஆடியபோது எப்படி இருந்திருக்கும்? நாங்கள் 1952ல் மாஸ்கோ வந்தபோது யுலனோவா கடைசித் தடவையாக அந்த ஆண்டு ஆடப் போவதாகக் கூறினார்கள். ஆனால் 1961ல் நாங்கள் மாஸ்கோவை விட்டுச் சென்ற பிறகும் ஆடிக் கொண்டிருந்த அவள் பிறகு ஆடுவதை விட்டு விட்டாள். தன்னுடைய ஆடலில் சொக்கி ஆரவாரம் செய்து பாராட்டியதும் மேடையில் மலர்களைச் சொரிந்து அன்பைத் தெரிவித்ததும் அவளுக்கு இன்று கனவாக இருக்கவேண்டும்.

எங்களைத்தவிர தூதரகத்தில் தற்போது இருக்கும் ஒரே ஒரு நபர் சமையற்காரர் மகமத் ஜான்தான். காஸியஸைப் போன்று ஏக்கம் ததும்பும் பார்வையுடைய அவர் எவ்விதத்திலும் அபாயம் இல்லாதவர். நைரோபியில் மூன்று வருட காலம் அவர் பகதூர்

koviloor Acadamy

சிங்கிடம் பணியாற்றினர். அவர் கொடுத்த நற்சான்றிதழை என்னிடம் காட்டினர். அதில் அவர் ஆழ்ந்த மதப்பற்றுள்ளவர் என்று கூறப்பட்டிருந்தது. மௌலானு மகமத் யூசுப்பினுடைய சீடர் அவர். ஒரு அரபு துறவியினுடைய கனவில் அல்லா தோன்றி நீ ஆற்றவேண்டிய பணி இந்தியாவில்தான் உள்ளது என்று கூறியதன் பேரில் அவர் இந்தியாவுக்கு வந்தார். அத்துறவியினுடைய மகன் மௌலானு மகமத். மகமத் ஜான் நாளொன்றுக்கு ஐந்து முறை தொழுகிறார். மதுவைத் தொட்டதும் இல்லை. நாடகம், நாட்டியம் போன்றவற்றைப் பார்க்கமாட்டார். அவருடன் பேசுவதற்கு யாரும் இல்லாததால் இப்போது எங்களைப் பிடித்துக் கொண்டுவிட்டார். அவர் பேசுவதைக் கேட்பது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. ஏனெனில் மற்றொரு உலகை அது நினைவுபடுத்துகிறது. 1946ல் பிரிட்டிஷ் மந்திரிசபை தூதுகோஷ்டி இந்தியாவுக்கு வந்தபோது ஜான் அவர்களுக்கு சமையற் பணி செய்திருக்கிறார். அவருடைய வீரர் மௌலானு அபுல் கலாம் ஆஜாத் தான். அவரிடம் பத்து ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார். ஜவாஹர்லால் நேருவின் இல்லத்தில் பணியாட்கள் விடுதியில் இன்னமும் வசிக்கும் தம்முடைய பெரிய குடும்பத்திடம் பெரிதும் விசுவாசமுள்ளவர். நேரு இப்போது இல்லை. அவருடைய மகள் வேறொரு வீட்டுக்கு குடிபோய் விட்டார். ஆனால் மகமத் ஜானுடைய மனைவியும் குழந்தைகளும் இன்னும் அங்கேயேதான் இருக்கிறார்கள்; தொடர்ந்தும் இருப்பார்கள்.

பணிப்பெண் விரா பகலில் வந்து ஏழு மணி நேரம் இருந்துவிட்டுப் போகிறாள். டாக்டர் ராதாகிருஷ்ணன் இங்கு இருந்த போதிலிருந்தே அவள் இருக்கிறாள். அண்மையில் ராதாகிருஷ்ணன் வந்த

koviloor Acadamy

போது அவளை நினைவு வைத்துக்கொண்டு ஒரு கடிகாரத்தைப் பரிசளித்தார்: அவள் பாட்டியாகி விட்ட போதிலும் எப்போதும் போலவே துடியாகவும் களிப்புடனும் இருக்கிருள். 1958-ல் ஏர் இந்தியா இண்டர் நேஷனல் விமானப் போக்கு வரத்தை தொடங்கிய போது முதல் பயணத்தில் அவளை நான் அனுப்பி வைத்தேன். மேலும் மூன்று ரஷ்யப் பணியாட்களையும் அனுப்பினேன். டெல்லியில் பத்து நாட்களுக்கு அவர்கள் விருந்தினர்களாக இருந்தனர். அவர்களுக்கு டில்லியைச் சுற்றிக் காண்பிக்கப்பட்டதுடன் ஆக்ராவிலுள்ள தாஜ்மகாலும் காட்டப்பட்டது. பத்திரிகைக்காரர்கள் அவர்களைப் பேட்டி கண்டார்கள். அவர்களுடைய படங்கள் பத்திரிகைகளில் பிரசுரமாயின. ஜவாஹர்லால் நேரு கூட அவர்களைச் சந்தித்துப் பேசினர். இந்தியாவுக்கு விஜயம் செய்வது ஒரு ரஷ்யனுக்கு உணர்வூட்டும் மறக்க முடியாத அனுபவமாக உள்ளது.

இங்கு குருஷ்சாவைச் சந்திக்க முடியும் என்று நம்பிக் கொண்டிருக்கிறேன். சென்ற மாதம் நாங்கள் மாஸ்கோ வந்த போது குருஷ்சாவ், செக்கோஸ்லாவாகியாவுக்குப் போயிருந்தார். இப்போது ஓய்வுக்காக தெற்கே போயிருக்கிருர். ரஷ்யாவில் செப்டம்பர் மாதம்தான் விடுமுறை காலமாகும். ஆனுல் அப்போது நமது ஜனுதிபதி, அரபு பிரதம மந்திரி அலி சாப்ரி, இந்தோனேஷிய ஜனுதிபதி சுகர்ணே, ஸைப்ரஸ் வெளி நாட்டு மந்திரி போன்ற பலர் மாஸ்கோ வந்ததால் அவருக்கு ஓய்வு கிட்டவில்லை. ஜப்பானியத் தூது கோஷ்டிக்கு அளித்த பேட்டியில் மாஸேதுங் ரஷ்யாவின் பிரதேச விஸ்தரிப்பைத் தாக்கிப் பேசியதைக் குறிப்பிட்டு குருஷ்சாவ் மாஸ்கோவுக்கு வந்த ஜப்பான் தூதுகோஷ்டியிடம் சிங்கியாங்கில் சீனுவுக்கு என்ன

koviloor Acadamy

வேலை என்று கேட்டார். கால காலமாக சீனர்கள் அங்கு வசித்து வருகிறார்களா என்ன? அங்குள்ள மக்களுக்கும் சீனர்களுக்கும் எந்த விதத்திலாவது உறவு உண்டா? சிங்கியாங்கின் பூர்வகுடிகள் சீனர்களல்ல. உய்கர்ஸ், கஸாக்ஸ், கிர்கிஸ் ஆகியவர்கள் தாம் என்றார்.

மாஸ்கோ, அக்டோபர், 9

எங்கள் பயணம் முடிந்து விட்டது. நாளை இந்தியாவுக்குப் புறப்படுகிறோம்.

மாஸ்கோவுக்குத் திரும்பி வந்தபோது எங்களைப் பிடித்த மனச் சோர்வு போய்விட்டது. அதிசயம்போல கால நிலையும் மாறிவிட்டது. கடந்த சில நாட்களாக இந்தியாவில் கோடைகாலம் போலவே உள்ளது. இங்கே அதைப் 'பாட்டியின் கோடை' என்கிறார்கள். வெதுவெதுப்பு இருக்குமே தவிர உஷ்ணம் இராது. நீல வானத்தில் இரவில் நட்சத்திரங்கள் மின்னுகின்றன. பறவைகளுக்கு ஒரே குதூகலம். ஓய்ந்து கிடந்த அவற்றின் ஓசையை இப்போது கேட்க முடிகிறது. இதெல்லாம் எங்கள் மனச் சோர்வு நீங்க உதவின.

கால நிலைக்கு மனிதர்களாகிய நாம் எவ்வளவு தூரம் அடிமைப் பட்டிருக்கிறோம்? ஆயினும் கேரளாவில் அது பற்றி நாங்கள் கவலைப்படுவது இல்லை. அங்கு மழை பெய்யும் போது தவிர மற்றபடி எப்போதும் ஒரே மாதிரி தான்.

கால நிலை மாற்றத்தை விட அதிக அளவுக்கு பழைய நண்பர்களை சந்தித்தது எங்களுக்கு உற்சாகம் அளித்தது. லெனின்கிராடிலிருந்து அவ்வளவு தூரம் தன்னைக் காண பெர்கட் வந்தது குறித்து அனுஜி

koviloor Acadamy

பெரிதும் மகிழ்வடைந்தாள். மாஸ்கோவிலுள்ள நாட்சுக்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற இளைஞரான அவர் இப்போது லெனின்கிராடில் வேலை செய்கிருர். இந்தக் கழகத்துடன் எங்களுக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. ஒரு இந்திய பாலே நடனத்தை தயாரிக்க வேண்டுமென்பது அவருடைய பேராவல். இந்திய புராணக் கதைகளை ஆழ்ந்து படித்ததிஞல் ராஜாளி என்ற பொருள் தரும் பெர்கட் என்ற பெயர் கொண்ட அவர் தம்மை 'கருடன்' என்றழைத்துக் கொள்கிருர். அனுஜியின் ஒத்துழைப்புடனும் உதவியுடனும் நள தமயந்தி கதையை அடிப்படையாகக் கொண்ட பாலே நடனத்தை அவர் தயாரித்தார். லெனின் கிராடிலுள்ள புகழ் பெற்ற கிரோவ் தியேட்டராால் அது அங்கீகரிக்கப்பட்டு அடுத்த ஆண்டு தொடக்கத்தில் அரங்கேற இருக்கிறது. மற்ருெரு இந்திய பாலேயான 'சகுந்தலா' ரீகாவில் நடைபெறுகிறது. மக்கள் அதனைப் பெரிதும் பாராட்டுகின்றனர் என்பதையறிந்து நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். அதனை அமைத்த பாலசன்யானுடன் எங்கள் நட்பை புதுப்பித்துக் கொண்டது பெரிதும் சந்தோஷமளித்தது. ரீகாவில் சகுந்தலாவுக்கு அற்புதமான வரவேற்பு இருப்பதாகவும் திரள்திரளாக மக்கள் வந்து கண்டு ரசிப்பதாகவும் அவர் கூறிஞர். மாஸ்கோவில் பயிற்சி பெற வந்திருக்கும் மாயாராவ், சிவசங்கர் ஆகிய இரு இந்திய நடன மணிகள் சகுந்தலாவைத் தயாரிப்பதற்குப் பேருதவி புரிந்ததாகவும் கூறிஞர். மாஸ்கோ குழந்தைகள் தியேட்டரில் ராமாயண நாடகம் இன்னும் நடை பெறுவதாகக் கேள்விப்பட்டேன்.

மாஸ்கோவில் நாங்கள் இருந்த காலத்தில் இருந்த சுமார் அரை டஜன் ராஜ தந்திரிகள் இன்னும் இங்கே

koviloor Acadamy

இருக்கிறார்கள். ஆப்கன் தூதுவர் ஷஹலாமி, அரபுக் குடியரசு தூதுவர் காலப், சூடான் தூதுவர் உஸ்மான், இரான் தூதுவர் ஆடமியட், கானா தூதுவர் எலியட் ஆகியோர். அவர்கள் எல்லோரும் ஒருவர் பின்னொருவராக எங்களுக்கு விருந்து அளித்தனர். இவர்களில் ஷஹலாமி தான் மூத்தவர்; அடுத்தது உஸ்மான். பத்தாண்டுகளுக்கு முன்பு எகிப்தியத் தூதரகத்தில் மருத்துவ அதிகாரியாக இருந்த காலப், நாஸர் வேண்டுகோளுக்கிணங்க வைத்தியர் தொழிலை விட்டு விட்டு தூதுவர் பதவியை ஏற்றிருக்கிறார். மணமாகாதவராக இருந்த ஆடமியட் விரைவில் திருமணம் செய்துகொள்ள விருக்கிறார். அவருடைய சகோதரர் இந்தியாவில் ஈரான் தூதுவராக இருக்கிறார். எலியட்டினுடைய பெண்கள் பாலே நடனத்தில் தேர்ச்சி பெற்று வருகிறார்கள். ஆசியா, ஆப்ரிக்காவின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்துள்ள இவர்கள் எங்களிடம் காட்டும் அன்பையும் பரிவையும் பற்றி எண்ணும்போது பாண்டுங் மாநாடு என் நினைவுக்கு வருகிறது. ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் ஒத்துழைப்புக்கு அது வழி வகுத்தது அல்லவா?

ஐ.ஸி.எஸ்.ஸில் என்னுடைய பழைய நண்பரான ஹம்ப்ரி டிரவிலியனுடன் விருந்து உண்டோம். எங்கள் இருவருடைய பின்னணியும் ஒரே மாதிரியானது. சென்னை மாகாணத்தில் ஜில்லா நிர்வாகப் பயிற்சி, பிறகு சமஸ்தானங்களில் அனுபவம், அதன் பின் மத்திய அலுவலகம், சுதந்திரத்துக்குப்பின் சீனாவும் ரஷ்யாவும். இந்தியா விடுதலை பெற்ற பின்னர் திரும்பிய பிரிட்டிஷ் ஐ.ஸி.எஸ். காரர்களில் கடைசியாகச் சென்றவர் ஹம்ப்ரி தான்.

நாங்கள் தினம் வெளியிலேயே சாப்பிட்டு விடுவதால் தன் சமையல் திறனைக் காட்ட வாய்ப்பு இல்லா

koviloor Acadamy

மல் போவதாக மகமத்ஜான் புகார் செய்கிருர். மாலை யில் சமூக நிகழ்ச்சிகள் இல்லாமல் இருந்தால் தியேட் டருக்குப் போகிருேம். காங்கிரஸ் மாளிகையிலுள்ள தியேட்டரில் 'ஸ்வான் லேக்' பாலே பார்த்தோம். இந்த மாளிகை நவீனமான 20ம் நூற்ருண்டுக் கட்டிடமாகும். மத்திய காலத்தைச் சேர்ந்த சர்ச்சுகளுக்கருகில் கிரெம்லினில் இது சமீபத்தில் கட்டப்பட்டுள்ளது.

"செர்ரி ஆர்ச்சர்ட்" என்ற செக்காவினுடைய நாடகத்தை நாங்கள் பெரிதும் ரசித்தோம். மாலி தியேட்டரில் இது நடைபெற்றது. எல்லோரும் மிக நன்ருக நடித்தார்கள். செக்காவினுடைய நாடகங் களில் நடிப்பைவிட சூழ்நிலை தான் முக்கியமாக இருக்க வேண்டும். பழைய அமைப்பு புதிய ஒன்றுக்கு இடம் கொடுத்து விட்டு ஒதுங்கும் சூழ்நிலையை வேறு யாரும் இவ்வளவு அற்புதமாகச் செய்திருக்கமுடியாது. நாடக முடிவில் பழத்தோட்டம் விற்கப்பட்டதும் பழைய சொந்தக்காரர் கண்ணீருடன் போகிருர். புதி த்தாக வாங்கியவர் பழமரங்களையெல்லாம் வெட்டித் தள்ளுகிருர். இந்தக் காட்சியைக் கண்டவர்கள் கண்ணீர் விட்டனர். செக்காவின் நாடகங்கள் எதிர் காலத்தில் நம்பிக்கையின்மையைக் குறிப்பதல்ல. இப் போதுள்ளதை விட சிறந்ததர்ன எதிர்காலத்துக்கான நம்பிக்கையை அவை ஊட்டுகின்றன. எதிர்காலம் பற்றிய கண்ணேட்டம் டிரபிமாவினுல் ஆனந்த பரவச நிலையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

"என்னை நம்பு அன்யா! என்னை நம்பு! எனக்கு இன்னும் முப்பது வயது கூட ஆகவில்லை. நான் இளைஞன். இன்னும் மாணவன். ஆனுல் ஏற்கனவே எவ்வளவோ அனுபவித்து விட்டேன்... என்னுடைய ஆத்மா எப்போதும் ஒவ்வொரு நிமிடமும், பகலிலும்

koviloor Acadamy

இரவிலும் இனம்புரியாத உணர்வு நிறைந்திருக்கிறது. இன்பத்தின் அறிகுறியைக் காண்கிறேன் அன்யா!... இதோ இன்பம்... இதோ வருகிறது. மேலும் மேலும் நெருங்கி வருகிறது. அதன் காலடி யோசையை என்னுல் கேட்க முடிகிறது. அதனை நாம் பார்க்காமல் போய்விட்டால், அதனை அறியாமல் போய்விட்டால்... அதனுல் என்ன? நமக்குப் பின்னுல் மற்றவர்கள் காண்பார்கள் அல்லவா?''

ரஷ்யாவில் உதயமாக விருக்கும் புதிய வாழ்வு குறித்து எழுதப்பட்ட இவ்வார்த்தைகள் 1905ம் ஆண்டுப் புரட்சிக்கேற்ப நிகழ்ச்சிகள் நடைபெற்ற போது எழுதப்பட்டவை. 1905 புரட்சி வெற்றிபெற வில்லை. 1917 புரட்சிக்குப் பிறகும், ஸ்டாலின் ஆட்சியின்போதும் இவ்வார்த்தைகள் கொடுமையான கேலிச் சொற்களாகத் தோன்றின. கடைசியாக இப்போது அவற்றிற்கு கொஞ்சம் அர்த்தம் உண்டாகத் தொடங்கியுள்ளது.

•

koviloor Acadamy

முடிவுரை

சரித்திர தேவதை நன்றியில்லாதவள். அசாதாரண ஆற்றல் படைத்தவர்களைத் தேர்ந்தெடுத்துத் தன்னுடைய கருவியாகப் பயன்படுத்துகிருள். பின்னர் வீதியில் தூக்கியெறிந்து விடுகிருள். ஒதுக்கப்பட்டவர்களை வரலாற்ருசிரியர்களின் தீர்ப்புக்கு விட்டு விட்டு எதிர்காலத்தை நோக்கி நடை போடுகிருள்.

கடந்த பத்தாண்டுகளில் சோவியத் யூனியனில் நடைபெற்ற பல அரசியலில் பிரேத பரிசோதனைகளை கண்டேன். ஸ்டாலின், பெரியா, மாலங்கோவ், மாலடோவ், ககஞேவிச், மார்ஷல் ஜுகாவ், புல்கானின் ஆகியவர்கள் அவ்வாறு பரிசோதனைக்குள்ளானவர்களில் இருந்தனர். ஒவ்வொரு சோதனையையும் நடத்தியவர் குருஷ்சாவ் தான். அவ்வாறு செய்யும்போது அவர் சரித்திர தேவதையின் கருவியாக இருந்தார். அவருடைய வாழ்நாளிலேயே அவருடைய 'பிரேத பரிசோதனையும்' நடைபெறும் என்று நான் சந்தேகப்படவில்லை.

உலக ராஜதந்திரிகளில், ஜவாஹர்லால் நேரு தவிர குருஷ்சாவை விட அதிக அளவுக்கு நான் அறிந்து போற்றியவர் யாரும் இல்லை. அவருடன் நீண்ட நேரம் பேசியிருக்கிறேன்! அடிக்கடி சந்தித்திருக்கிறேன். உற்சாகமும் உணர்வும் ததும்ப எங்கள் பேச்சு இருக்கும். இதைவிட அதிகமாக நான் யாருடனும் தொடர்பு கொண்டதும் பேசியதும் இல்லை. சோவியத் யூனியனில் அவர் பெற்றுள்ள இடம் அசைக்க முடியாதது என்றே எப்போதும் எண்ணி

koviloor Acadamy

வந்திருக்கிறேன். ஏனெனில் அவர் எந்த மக்களுக்காக சிறந்த முறையில் பணியாற்றினாரோ அவர்களுடைய அன்பை அஸ்திவாரமாகக் கொண்ட இடம் அது.

குருஷ்சாவ் வீழ்ச்சிடையுமாறு செய்தது எது? பல விஷயங்கள் இருக்க வேண்டும். ஆனால் முக்கியமானது சீனா பற்றிய பிரச்னை என்று தோன்றுகிறது. குருஷ்சாவ் சீனாவை நடத்திய விதம் அவரது உள்ள உறுதியையும் தாராளமான மனப்போக்கையும் ஒரே சமயத்தில் காட்டியது. வரலாற்றுப் புகழ் மிக்க 20-வது காங்கிரசில், மார்க்ஸிஸத்தின் சில அடிப்படைக் கொள்கைகளும் கூட திருத்தப்பட்டு அணுயுகத்தின் பிரத்தியட்சநிலைக்கு ஏற்பச் செய்யப்பட்டன. குருஷ்சாவினுடைய கொள்கைகளையெல்லாம் சீனா ஆரம்பத்தில் தீவிரமாகவும் பின்னர் காட்டுமிராண்டித் தனமாகவும் ஆட்சேபித்து வந்தது. போர் தவிர்க்க முடியாதது அல்ல. அப்படி இருக்கவும் கூடாது என்று மார்க்ஸ் கூறியதற்கு மாறாக குருஷ்சாவ் பிரகடனப்படுத்தியதையும் சீனா ஆட்சேபித்தது. குருஷ்சாவ் சீனாவுக்கு ஒரு அங்குலம் கூட விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டார். முதலில் மறைமுகமாக நடைபெற்ற இந்த கருத்து வேறுபாட்டுச் சண்டை விரைவில் பகிரங்கமாயிற்று. இது வெறும் கொள்கைத் தகராறு அல்ல. இரு நாடுகளுக்கிடையேயுள்ள தகராறு, வரலாறு, பூகோளம், அரசியல், மனஇயல் ஏன் இன ரீதியாகக் கூட ஆழப்பதிந்தது என்பது விரைவில் தெளிவாயிற்று. சீனர்களுக்கு இடம் கொடுப்பதில்லை என்பதில் உறுதியாக இருந்த குருஷ்சாவ் கம்யூனிஸ்ட் கட்சிகளின் மாநாடொன்றைக் கூட்டினார். அதன் விளைவு அவருடைய போக்குப்படி நடந்திருந்தால் சீனாவைப் பகிஷ்கரிப்பதாக இருந்திருக்கும். கம்யூனிஸ்ட் உலகில் செப்பனிட முடியாத பிளவு ஏற்பட்டிருக்கும். சாதா

koviloor Acadamy

ரணமாக சோவியத் யூனியனுடைய செல்வாக்குக்குக் கட்டுப்பட்ட கட்சிகளும்கூட இந்த பயங்கரவிளைவை ஏற்றுக்கொள்ளும் தைரியத்தைப் பெறறிருக்கவில்லை. குருஷ்சாவ் ராஜினாமாவுக்குப் பிரதான காரணமாக இதுதான் இருந்திருக்க வேண்டும்.

சீனு, இந்தியா, அல்லது உலகத்திடம் சோவியத் யூனியன் கடைப்பிடித்து வரும் கொள்கையில் அடிப் படை மாறுதல் எதையும் இது குறிக்கும் என்று நான் எண்ணவில்லை. சீனுவுக்கும் ரஷ்யாவுக்கு மிடையே யுள்ள தகராறு விரைவில் தீரக்கூடிய ஒன்றல்ல.

குருஷ்சாவின் வீழ்ச்சியைப் பயன் படுத்திக் கொண்டு அணுகுண்டையும் வெடித்துள்ள சீனு இப் போது முன்னைவிட வானளவுக்கு உயர்ந்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்க வேண்டும். அது எவ்வளவு தான் பெரிய நாடாக இருந்தாலும் அதற்கு அடிபணி யக்கூடிய உலகின் கடைசி நாடாக ரஷ்யா இருக்கும். மேலும் எவ்வளவுக்கு ஒரு நாடு தன்னைத் தெய்வீக மானது, என்று கூறிக்கொள்கிறதோ அவ்வளவுக்கு அதனிடம் ரஷ்யாவுக்கு வெறுப்பு இருக்கும். சீனு வுடன் சமரசம் செய்து கொள்ளும் முயற்சியில் குருஷ்சாவின் வாரிசுகள் அவர் தீவிரமாக கடைப் பிடித்துவந்த சமாதான சுகவாழ்வுக் கொள்கையை விட்டு விடுவார்கள் என்று மேனுடுகள் அஞ்சக் கூடிய காரணம் எதுவும் இல்லை. பல்வேறு வழிகளில் புலப் படுத்தப்பட்டுள்ள இந்தியாவிடம் சோவியத் யூனி யனுக்குள்ள நட்புறவு பாதிக்கப்படும் என்று இந்தியா கருத இம்மியளவு காரணமும் கிடையாது. இப்போ துள்ள ஆட்சியில் மேலிடத்தில் இருக்கும் மிகோயான், கோஸிஜின், பிரெஷ்னுவ் ஆகியோர் குருஷ்சாவைப் போலவே உண்மைநிலையை உணரக் கூடியவர்கள்.

koviloor Acadamy

ஜவாஹர்லால் நேரு வகுத்துத்தந்த அயல்நாட்டுக் கொள்கையைப் பின்பற்றும் வரை சோவியத் யூனிய னுடைய நட்புறவு இருக்கும் என்று இந்தியா உறுதி யாக நம்பலாம்.

ஸ்டாலின் இறந்தபோது எடுத்துக்கொள்ளப்பட்ட முடிவுகளில் ஒன்று வீர வணக்கத்தை ஒழிப்பதும் பிரதமமந்திரி, கட்சியின் முதல் காரியதரிசி பதவிகளை பிரிப்பதும் ஆகும். ஆயினும் 1958ல் கட்சியின் முதல் காரியதரிசியாக இருந்த குருஷ்சாவ், வெளியேற்றப் பட்ட புல்கானின் இடத்தில் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். அப்பாது நான் என் நாட்குறிப்பில் இவ்வாறு எழுதினேன்: "ஒரு கட்சியின் சர்வாதிகாரம் ஒரு மனிதருடைய சர்வாதிகாரத்தில் முடிவதை தவிர்க்க முடியாததாகச் செய்யும் இந்த நாட்டின் அமைப்பில் ஏதோ ஒன்று இருக்க வேண்டும்."

குருஷ்சாவ் சர்வாதிகாரியாகி விடாமல் தடுக்கக் கூடியவை என்று நான் கருதிய விஷயங்களையும் குறிப்பிட்டேன். அவை உண்மையாயின. குருஷ்சாவ் சர்வாதிகாரியாக மாறவே இல்லை. இவ்வளவு எளிதாக அவர் அகற்றப்பட்டு விட்ட விதமே அவர் சர்வாதிகாரி யாக இருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. குருஷ் சாவின் வழிகாட்டுதலில் கட்சியின் மத்தியக் கமிட்டி சக்தியுள்ள ஒன்றாக ஆகிவிட்டது. குருஷ்சாவ் உண்டாக்க விரும்பிய ஏதோ ஒருவித "உட்கட்சி ஜனநாயகம்" செயல்படுகிறது என்பதையும் அது காட்டுகிறது.

கட்சியின் முதல் காரியதரிசி, பிரதம மந்திரி பதவிகள் ஒன்றாகி விட்டதன் விளைவாக ஒரு மனித ருடைய சர்வாதிகாரம் ஏற்படாத போதிலும் குருஷ்சாவ் என்ற ஒரு மனிதரின் உன்னதத்துக்கு வழி

koviloor Acadamy

செய்தது. அவர் தவிர்க்கமுடியாத அபிவிருத்தி இது. கட்சி அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்பது தெளிவு.

முதலில் குருஷ்சாவின் தலைமையில் கட்சி பெருமை கொண்டிருந்தது. 1959 ஏப்ரலில் அவருடைய 65வது பிறந்த நாளின்போது பிரிஸிடியம் அங்கத்தினர்கள் அவரை "நம்முடைய மூத்த தோழர்" என்று பாராட்டி ஏராளமான புகழ் மாலைகளைச் சூட்டினர். "உலகெங்கிலும் அமைதி, கம்யூனிஸம் ஆகியவற்றின் வெற்றிக்காகச் சலியாது போராடுபவர்" "குன்றாத ஆற்றலும், துணிந்து செயல்படும் ஊக்கமும் உள்ளவர்" "உழைப்பாளர்களின் நலனில் தீவிர அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ள தலைவர்" "தீர்க்க தரிசனமும் லட்சியமுள்ள சோவியத் யூனியனுடைய வெளி நாட்டுக் கொள்கையைப் பின்பற்ற தம்முடை ஆற்றல், திறமை அனைத்தையும் பயன்படுத்துபவர்" "மார்க்ஸிஸ— லெனினிஸக் கொள்கையை ஆக்கபூர்வமாக வளப்படுத்தியவர்" என்றெல்லாம் புகழ் பாடினார்கள்.

வீழ்ச்சியடைந்தவர்களை யாரும் போற்றுவது இல்லை. சோவியத் யூனியனில் இதற்கு முன்பு வீழ்ச்சியடைந்தவர்கள் பலவாருகத் தூற்றப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் ஒப்பிடும் போது குருஷ்சாவை லேசாக விட்டு விட்டார்கள் எனலாம். அவரைப்பற்றி மிகவும் மோசமாகத் தூற்றியது பிராவ்தா தான். அவருடைய பெயரைக் குறிப்பிடாமல் "கட்சியும், சர்க்காரும் சபல புத்தியுடன் திட்டமிடுவதையும், அரை குறை முடிவுகளையும், அவசரத் தீர்மானங்களையும், உண்மைக்குப் பொருந்தாத செயல்களையும், தூற்றுவதையும், வார்த்தை ஜாலம் செய்வதையும், தவிர்க்க வேண்டும்" என்று எழுதியது.

koviloor Acadamy

ஷேக்ஸ்பியர் இவ்வளவு பெரிய வார்த்தைகளை உபயோகிக்கவில்லை. ஆனால் பாமரர்க்கும் புரியக் கூடிய உள்ளத்தைத் தொடும் வார்த்தைகளில் மனிதர் களுடைய விதியைப் பற்றிக் கூறுகிறார்.

“நாளெல்லாம் தன் நேரத்தை மேடையிலே ஆடுவ திலே போக்குகிறான் கலைஞன்! அவன் போன பிறகு அவனைப் பற்றிப் பேசுவார் இல்லை. போனவன் கதை யைச் சொன்னால் அது புலம்பலாக இருக்குமேயன்றி பொருட்படுத்துவார் யாரும் இரார்.”

ஆயினும் வரலாறு குருஷ்சாவை அப்பாவிக் கலைஞனாகவோ, அவரது கதையை புலம்பலாகவோ கருதாது. ஆரவாரமிக்க அது சோவியத் யூனியனுக்கும் உலகுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. உலகம் அணு யுகத்துக்கு மாறும் கட்டத் தில் ஆற்றலும் வீரமும் தீர்க்க தரிசனமும் மிக்க குருஷ்சாவ் சோவியத் யூனியனுடைய விதியை நிர்ண யிப்பவராக இருந்தது நல்வினைப் பயனேயாகும். அரங்கிலிருந்து அவர் விலகியதும், கென்னடி கொல்லப்பட்டதும், நமது ஜவாஹர்லால் நேரு மறைந் ததும் உலகை வறுமைக்குள்ளாக்கி விட்டன.

---

koviloor Acadamy

koviloor Acadamy

JOURNEY ROUND THE WORLD by K. P. S. MENON
(Volume Two)

இரண்டாவது உலகப் போருக்குப் பின் ஐரோப்பா எத்தனையோ மாறுதல்களைக் கண்டுள் ளது. புதிதாகக் கிளைத்த நாடுகள் சில. புதிய வாழ்க்கை முறையை மேற்கொண்டவை வேறு சில. இந்நாடுகளை அண்மையில் சென்று பார்த்து அவற்றைப் பிறரும் அறிந்து கொள்ளச் சுவையான விவரங்களைத் தருகிறார் இந்திய வெளி விவகார இலாகாவில் அரும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு. கே. பி. எஸ். மேனன்.

இந்நூலாசிரியர்.........

67 வயதடைந்த கே. பி. எஸ். மேனன் சென்னை, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களில் படித்து 1921-ல் லண்டன் ஐ. ஸி. எஸ். தேர்வில் முதலாவதாகத் தேர்வு பெற்றார். ஆங்கில ஆட் சியில், வெளி நாட்டு அரசியல் துறையில் பதவி வகித்த முதல் இந்தியரும் 1947-ல் சீனாவில் பாரதத் தூதுவராகப் பதவியேற்ற முதல் இந்தியரும் இவரே யாவார். 1948-ல் ஐ நா. குழுவின் தலைவ ராகக் கொரியாவில் பணியாற்றியுள்ளார். இவர் தமது அனுபவங்களை 'டெல்லி–சுங்கிங்' 'ரஷியன் பனோரமா' 'ஃப்ளையிங் ட்ராய்க்கா' என்ற நூல்களாகவும் எழுதியுள்ளார்.

மல்லிகை பதிப்பகம்,
தி. நகர் : : சென்னை–17.